**வ.து.ந.க.எண்.அ2/000119/2008**
**ஆணையாளர் அவர்களின் 15.4.2008 நாளிட்ட குறிப்பு**

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :162/2008 பொருள் எண்:54

**பணியமைப்பு – வயது முதிர்வு ஓய்வு**

திரு. எம். ஸ்ரீராமுலு, உதவி வருவாய் அலுவலர் அவர்கள் வயது முதிர்வு காரணமாக 30.04.2008ல் ஓய்வு பெற உள்ளார். இவர் 24.7.68ல் லஸ்கராக சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்தார். இவருக்கு இப்பதவியில் 28.4.72 முதல் தகுதிகாண் பருவ உரிமை வழங்கப்பட்டுள்ளது. பின்னர் 7.3.75ல் தட்டச்சராக பதவி உயர்வு அளிக்கப்பட்டு 07.03.75 முதல் பணிவரன் முறை செய்யப்பட்டு 31.5.77 முதல் தகுதிகாண் பருவ உரிமை வழங்கப்பட்டுள்ளது. பின்னர் 7.3.81 ல் உதவியாளராகவும் 23.1.96ல் உரிமம் ஆய்வாளராகவும், 25.6.98ல் வரி மதிப்பீட்டாளராகவும் 12.12.2007ல் உதவி வருவாய் அலுவலராகவும், பதவி உயர்வு பெற்று பணி புரிந்து வருகிறார். இவரது பணிகள் உதவியாளர் பதவியில் 7.3.81 முதலும் உரிமம் ஆய்வாளர் பதவியில் 23.1.96 முதலும், வரிமதிப்பீட்டாளர் பதவியில் 25.6.98 முதலும் பணி வரன்முறை செய்யப்பட்டுள்ளது. உதவி வருவாய் அலுவலர் பதவியில் அரசின் உறுதியாக்கம் பெறப்பட்டு பணிவரன்முறைப்படுத்துவதற்காக தனியே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவர் பணிபுரிந்த மண்டலங்களிலிருந்து தனியர் மீது தணிக்கைத்தடை ஏதும் நிலுவையில் இல்லையென சான்று பெறப்பட்டுள்ளது. விழிப்பு அலுவலர் அவர்களும் தனியர் மீது யாதொரு விசாரணையும் நிலுவையில் இல்லையென அறிக்கை அளித்துள்ளார். துறைப்பூர்வமான ஒழுங்கு நடவடிக்கையும் ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்படுகிறது. சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான குடியிருப்பு ஏதும் இவருக்கு ஒதுக்கப்படவில்லை. சென்னை மாநகராட்சி கூட்டுறவு சங்கத்திற்கு இவர் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ஏதுமில்லை எனவும் சான்று பெறப்பட்டுள்ளது. இருப்பினும் தணிக்கைத் தடை இருப்பது பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி நிதி சம்மந்தப்பட்ட தணிக்கைத் தடைகளால் நிதி இழப்பு மற்றும் நீண்ட கால முன் பணம் சரி செய்யப்படாமல் இருப்பது ஆகியவை பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அதனை ஓய்வூதியப் பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்படுத்தி தனியரை 30.4.2008 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி வழங்கலாம் என பரிந்துரைக்கப்படுகிறது. தனியர் வகுப்பு–2 சார்ந்த அலுவலராதலால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே இவரை பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்க இயலும்.

எனவே, தணிக்கைத் தடைகள் மூலம் நிதி இழப்பு மற்றும் நீண்ட கால முன்பணம் சரிசெய்யப்படாமல் இருப்பது ஆகியவை பின்னர் தெரியவரின் அவைகளுக்கு பொறுப்பாக்கி திரு.எம். ஸ்ரீராமுலு, உதவி வருவாய் அலுவலர் என்பவரை 30.04.2008 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"தனியர் ஏற்கனவே 30.04.2008 அன்று ஆணையரின் ஆணைப்படி ஓய்வுபெற்ற நிலையில் இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: வ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மா.கு.ந(ம)ம.கு.ந.எண்.எப்1/154/2007**
**ஆணையாளர் அவர்களின் 24.03.2008 நாளிட்ட குறிப்பு**

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :163/2008 பொருள் எண். 55

**பணியமைப்பு– வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி**

டாக்டர் திருமதி.ஜே.ஏ.லாஷியஸ், மண்டல அலுவலர் அவர்கள் சென்னை மாநகராட்சியில் கீழ்கண்டுள்ளபடி பணியமர்ந்து பதவி உயர்வு பெற்றுள்ளார். அன்னாரின் பிறந்த தேதி 02.01.1949, வயது முதிர்வு ஓய்வு நாள். 31.01.2007

| வ. எண் | பதவியின் பெயர் | பணி நியமன நாள் | உறுதியாக்கம் செய்யப்பட்ட நாள் ஆணை எண் | தகுதிகாண் பருவம் முடித்து விட்ட நாள் |
|---|---|---|---|---|
| 01 | உதவி அறுவை மருத்துவ அலுவலர் | 29.05.1979 SNP 14.09.1982 மா.கு.ந.து | 29.05.79 பிற்பகல் அ.ஆ.2193 சு(ம) கு.ந.து. நாள்.02.11.82 | 09.10.81 சி.அ. மன்றத் தீர்மானம் எண்.50/82, நாள். 21.02.82 (ம) 34/82, நாள்.12.01.82 இனம் எண்.28 சு(ம)கு.ந.து. நாள்.02.11.82 |
| 02 | மண்டலஅலுவலர், குடும்ப நலம் | 17.03.1995 | 17.03.1995 அ.ஆணை எண். 724 ந.நி.(ம) கு.நீ.வ. துறை நாள். 29.12.2000 மன்றத் தீர்மானம் 528/07, நாள்.29.10.2007 | |

தனியரின் ஓய்வூதிய பயன்களில் கீழ்கண்டுள்ளபடி தொகைகளை பணிக்கொடையில் பிடித்தம் செய்து கொள்ளலாம்.

1) 95–96 தணிக்கை அறிக்கையின்படி அயனாவரம் மண்டலம் ஸ்கேன் — ரூ. 2,583
2) 03–04 தணிக்கை அறிக்கையின் படி ரொக்கப்படி — ரூ. 58,575
3) சென்னை மாநகராட்சி, அலுவலர்கள் கூட்டுறவு சங்க கடன் — ரூ. 14,000
4) நீதிமன்ற தீர்ப்பு இ.பி.எண்.181/2004, வழக்கு சி.எஸ்.எண்.190/03 — ரூ. 1,20,000

டாக்டர் திருமதி.ஜே.ஏ.லாசியஸ், அவர்களின் நியமனம் ஊதியம் விடுப்பு குறித்து தணிக்கைத்தடை ஏதும் இல்லை சென்னை மாநகராட்சி குடியிருப்பு ஏதும் ஒதுக்கி தரப்படவில்லை. ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை. ஊதியமில்லா விடுப்பு 211 நாள் துய்த்துள்ளார்.

எனவே, தனியர் சென்னை மாநகராட்சியில் வகுப்பு–2ஆம் நிலை அலுவலரானதால் இவரை பணியிலிருந்து விடுவிக்க மன்றத்தின் அனுமதி பெற வேண்டும். மன்றத்தின் அனுமதி பெற்று

மா.கு.ந(ம)ம.கு.ந.எண்.எப்1/154/2007

வயது முதிர்வு ஓய்வளிக்க கால அவகாசம் இல்லாத காரணத்தால் தனியரை மன்றத்தின் பின்னேற்பிற்குட்பட்டு 31.01.2007 பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

எனவே, திருமதி.ஜே.ஏ.லாசியஸ், மண்டல அலுவலர், அவர்களை மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு நிதி சம்பந்தப்பட்ட தணிக்கைத்தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு மற்றும் நீண்ட கால முன்பணம் சரிசெய்யப்படாமல் நிலுவையில் இருப்பது ஆகியவைகள் பின்னர் தெரியவரின் அவைகளுக்கு அன்னாரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அன்னாரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டும் நிலுவையில் உள்ள தணிக்கை பத்தியில் தெரிவித்துள்ள தொகைகளை பிடித்தம் செய்து கொள்வதற்குட்பட்டும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் 31.01.2007 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி அளித்ததற்கு நியமனக்குழு மூலம் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18.

மன்றச் செயலாளர்

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :164/2008 பொருள் எண்.56

**ஒய்வூதியம்**

திரு. பி. ராஜப்பன், மருத்துவ அலுவலர், தொற்று நோய் மருத்துவமனை நலத்துறை, அவர்கள் கடந்த 31.12.2005 பி.ப முதல் வயது முதிர்வு காரணமாக ஒய்வு பெற்றார். தனியருக்கு ஏற்கனவே ஒய்வூதியம் மற்றும் இதர பயன்கள் வழங்கப்பட்டது.

உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடித எண்.நி,.மு.எண்.060/எ4/2008 நாள் 28.01.08ல் திருத்திய ஒய்வூதிய பயன்களின் விவரம் பின்வருமாறு:–

வயது முதிர்வு திருத்திய ஒய்வூதியம் ரூ 6108/– 01.01.2006 முதல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒய்வூதிய தொகை ரூ 5498/–ஐ நேர் செய்து மீதம் வழங்கவும், தொகுப்புத் தொகை ரூ 2,55,559/–ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ 2,29,953/–ஐ நேர் செய்து மீத தொகையான ரூ25,606/– ஐ வழங்கவும் ஒய்வூதியரின் காலத்திற்குப்பின் அன்னாரது மனைவி திருமதி. சாந்தி ராஜப்பன், என்பவருக்கு குடும்ப ஒய்வூதியம் ரூ.6108/– 27.12.2012 முடிய ரூ.3998/– 28.12.2012 முதல் வழங்கவும், அனுமதிக்கப்பட்டுள்ளது.

அன்னார் சென்னை மாநகராட்சி பணியில் இரண்டாம் வகுப்பு அலுவலர் என்பதால் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு ஒய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே 28.01.2008 நாளிட்ட தணிக்கைச்சான்றின்படி 01.01.2006 முதல் தனியருக்கு திருத்திய ஒய்வூதியப்பயன்கள் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்.பி13/0295/08

ஆணையாளர் அவர்களின் 12.03.2008 நாளிட்ட குறிப்பு

## 03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :165/2008 பொருள் எண்.57

### ஓய்வூதியம்

திரு.என்.ராம் மோகன்ராவ், துணை தகவல் தொடர்பு அலுவலர், மக்கள் தொகை திட்டம்–5, மாவட்டகுடும்ப நலத்துறை, அவர்கள் கடந்த 30.09.1996 பி.ப முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றார். தனியருக்கு ஏற்கனவே ஓய்வூதியம் மற்றும் இதர பயன்கள் வழங்கப்பட்டது.

உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடித எண்.நி,.மு.எண்.4168/எ4/2007 நாள் 31.12.07ல் திருத்திய ஓய்வூதிய பயன்களின் விவரம் பின்வருமாறு:–

வயது முதிர்வு திருத்திய ஓய்வூதியம் ரூ 4745/– 01.10.96 முதல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியம் தொகை ரூ 4475/–ஐ நேர் செய்து மீதம் வழங்கவும், இறப்பு மற்றும் ஓய்வுக்காலப் பணிக்கொடை ரூ.148031/–ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.134225/–ஐ நேர்செய்து மீத தொகை ரூ.13806/–ல் தணிக்கைத் தடைக்காரணமாக 25% பிடித்தம் ரூ.3452/– போக மீதம் ரூ.10354/– வழங்கவும், தொகுப்புத் தொகை ரூ 1,98,447/–ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ 1,87,151/–ஐ நேர் செய்து மீத தொகையான ரூ 11,296/– ஐ வழங்கவும் ஓய்வூதியரின் காலத்திற்குப்பின் அன்னாரது மனைவி திருமதி. அருணா என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் ரூ.2895/– ஓய்வூதியரின் மறைவுக்கு பின்னர் வழங்கவும், அனுமதிக்கப்பட்டுள்ளது.

அன்னார் 29 வருடங்கள், 06 மாதங்கள், தகுதிப் பணிக்காலம் புரிந்த அன்னார் சென்னை மாநகராட்சி பணியில் இரண்டாம் வகுப்பு அலுவலர் என்பதால் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே 31.12.2007 நாளிட்ட தணிக்கைச்சான்றின்படி 30.09.1996 வயது முதிர்வு ஓய்வு பெற்ற தனியருக்கு மேற்கண்டவாறு திருத்திய ஓய்வூதியப்பயன்கள் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்.பி13/546/2007
ஆணையாளர் அவர்களின் 09.04.2008 நாளிட்ட குறிப்பு

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :166/2008 பொருள் எண்.58

**ஒய்வூதியம்**

டாக்டர்.பி.எஸ். சித்ரகலா, மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை, அவர்கள் முதல் வயது முதிர்வு காரணமாக பணியிலிருந்து 30.11.2007 முதல் ஓய்வு பெற்றார். தனியர் 32 வருடங்கள் 10 மாதங்கள் 26 நாட்கள் தகுதிப்பணி புரிந்தமையால், துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை நி,.மு.எண்.4731/எ4/2007, நாள் 22.01.2008 சான்றின்படி 01.12.2007 முதல் வயது முதிர்வு ஓய்வூதியமாக மாதம் ரூ.11,400/– இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/–மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.3,800/– தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.4,76,976/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது வாரிசுதாரர் கணவர் திரு.ஆர்.குருநாதன், அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.11,400/– 30.11.2014 முடிய, அதன் பின்னர் 01.12.2014 முதல் ரூ.6,840/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல் சம்பந்தமாக துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இவர் சென்னை மாநகராட்சி 1(B) வகுப்பு அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

ஆகையால், டாக்டர்.பி.எஸ். சித்ரகலா, மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை, அவர்களுக்கு 01.12.2007 முதல் ஓய்வூதியமாக மாதம் ரூ.11,400/– இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/–ல் தணிக்கைத்தடையின் காரணமாக 25 விழுக்காடு தொகையான ரூ.87,500/– பிடித்தம் செய்து மீத தொகையான ரூ.2,62,500/–ல் அதிகப்படியான சிறப்பூதிய தொகை ரூ.10,650/– போக மீதம் ரூ.2,51,850/– வழங்கவும், தனியரின் மீதுள்ள தணிக்கைத்தடைகளை நிவர்த்தி செய்தபின்பு பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்ட தொகையை விடுவிக்கவும், மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.3800/ஐ (ரூபாய் மூவாயிரத்து எண்ணூறு மட்டும்) தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ. 4,76,976/– (ரூபாய் நான்கு இலட்சத்து எழுபத்தி ஆறாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தி ஆறு மட்டும்) வழங்கவும், தொகுத்துப் பெறுவதால் அவரது ஓய்வூதியம் ரூ.11,400/–லிருந்து ரூ.7,600/– ஆக குறைத்து வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது வாரிசுதாரர் கணவர் திரு.ஆர்.குருநாதன், அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.11,400/– 30.11.2014 முடிய, அதன் பின்னர் 01.12.2014 முதல் ரூ.6,840/– வழங்கவும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**<u>பொ.து.ந.க.எண்.பி13/2538/2007</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 09.04.2008 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :167/2008 பொருள் எண்.59

**<u>ஓய்வூதியம்</u>**

டாக்டர்.கே. சுப்பிரமணி, மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, அவர்கள் பணியிலிருந்து 31.07.2007 பி.ப முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்றார். தனியர் 27 வருடங்கள் 08 மாதங்கள் 12 நாட்கள் தகுதிப்பணி புரிந்தமையால், துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை நி,.மு.எண்.2041/எ4/2007, நாள் 19.07.2007 சான்றின்படி 01.08.2007 முதல் வயது முதிர்வு ஓய்வூதியமாக மாதம் ரூ.9,110/– இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/–மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.3,036/– தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.3,81,079/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல் சம்பந்தமாக துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இவர் சென்னை மாநகராட்சி இரண்டாம் வகுப்பு அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

ஆகையால், டாக்டர்.கே.சுப்பிரமணி, மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை அவர்களுக்கு 01.08.2007 முதல் ஓய்வூதியமாக மாதம் ரூ.9,110/– இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/–ல் தணிக்கைத்தடையின் காரணமாக 25 விழுக்காடு தொகையான ரூ.87,500/– பிடித்தம் செய்து மீத தொகையான ரூ.2,62,500/–ல் கூடுதல் சுகாதார அலுவலர் அவர்களது குறிப்பு சு.து.ந.க.எண்.சி3/2538/2007, நாள். 07.03.2008ன்படி வாகன முன்பணம் அசல் ரூ.2000/– மற்றும் வட்டியாக ரூ.1,28,850/– ஆக மொத்தம் ரூ.1,30,850/–ஐ சரிசெய்து மீதத் தொகை ரூ.1,31,650/– வழங்கவும், தனியரின் மீதுள்ள தணிக்கைத்தடைகளை நிவர்த்தி செய்தபின்பு பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்ட 25 விழுக்காடு தொகையை விடுவிக்கவும், மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.3036/ஐ (ரூபாய் மூவாயிரத்து முப்பத்தி ஆறு மட்டும்) தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ. 3,81,079/– (ரூபாய் மூன்று லட்சத்து எண்பத்தி ஓராயிரத்து எழுபத்தி ஒன்பது மட்டும்) வழங்கவும், தொகுத்துப் பெறுவதால் அவரது ஓய்வூதியம் ரூ.9,110/–லிருந்து ரூ.6,074/– ஆக குறைத்து வழங்கவும், குடும்ப ஓய்வூதியமாக ரூ.5963/– 06.07.2014 முதல் வழங்கவும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி4/0876/2008**
**ஆணையாளர் அவர்களின் 19.03.2008 நாளிட்ட குறிப்பு**

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :168/2008 பொருள் எண்.60

**ஒய்வூதியம்**

சென்னை மாநகராட்சி, வருவாய் துறையில் உதவி வருவாய் அலுவலராக பணிபுரிந்து 31.12.2007 பி.ப அன்று வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்ற திரு.ஏ. வஜித்கான், என்பவருக்கு கீழ்கண்டவாறு ஓய்வூதியப் பயன்களை வழங்க உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் கடித எண்.115/எ4/2008, நாள்.13.02.2008ல் சான்று வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஓய்வூதியம் 01.01.2008 முதல் மாதம் | ரூ.7032/– |
| இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடை | ரூ.3,27,179/– |
| மாதத் தொகுப்புத் தொகை | ரூ.2344/– |
| குறைக்கப்பட்ட மாத ஓய்வூதியம் | ரூ.4688/– |
| தொகுப்பு மதிப்பீட்டுத் தொகை | ரூ.2,94,219/– |
| ஓய்வூதியரின் காலத்திற்கு பின்னர் அன்னாரது மனைவி திருமதி.சான் சுல்தானாபேகம், என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் மாதம் | ரூ.7032/– 09.12.2014 வரை<br>ரூ.4219/– 10.12.2014 முதல் |

தனியர் 34 ஆண்டுகள் 08 மாதங்கள் 15 நாட்கள் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்துள்ளார்.

மேற்படி அலுவலரிடமிருந்து கீழ்கண்ட தொகைகள் பிடித்தம் செய்ய வேண்டியுள்ளது.

| | |
|---|---|
| 25 விழுக்காடு இறப்பு மற்றும் ஓய்வுக்காலப் பணிக்கொடைத் தொகையிலிருந்து தணிகைத் தடைகள் நிவர்த்திக்காக | ரூ.81,795/– |

இவர் சென்னை மாநகராட்சி 2ம் வகுப்பு அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, மேற்படி தொகைகளை பிடித்தம் செய்து உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் சான்றின்படி ஓய்வூதியப் பயன்களை அளிக்கவும், பிடித்தம் செய்யப்படும் 25 விழுக்காடு தொகையை தணிக்கை தடை தீர்வு செய்யப்பட்ட பின்பு வழங்கவும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி4/7291/2008**

**ஆணையாளர் அவர்களின் 10.04.2008 நாளிட்ட குறிப்பு**

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :169/2008 பொருள் எண்.61

**ஓய்வூதியம்**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–7, வருவாய் துறையில் உதவி வருவாய் அலுவலராக பணிபுரிந்து 31.08.2007 பி.ப அன்று வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்ற திரு.சு.தியாகராஜன், என்பவருக்கு கீழ்கண்டவாறு ஓய்வூதியப் பயன்களை வழங்க உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் கடித எண்.115/எ4/2008, நாள்.13.02.2008ல் சான்று வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஓய்வூதியம் 01.09.2007 முதல் மாதம் | ரூ.6825/– |
| இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடை | ரூ.3,17,576/– |
| மாதத் தொகுப்புத் தொகை | ரூ.2275/– |
| குறைக்கப்பட்ட மாத ஓய்வூதியம் | ரூ.4550/– |
| தொகுப்பு மதிப்பீட்டுத் தொகை | ரூ.2,85,558/– |
| ஓய்வூதியரின் காலத்திற்கு பின்னர் அன்னாரது மனைவி திருமதி. தி.மகாலஷ்மி, என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் மாதம் | ரூ.6825/– 03.08.2014 வரை<br>ரூ.4095/– 04.08.2014 முதல் |

இவர் 34 ஆண்டுகள் 07 மாதங்கள் 29 நாட்கள் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்துள்ளார்.

மேற்படி அலுவலரிடமிருந்து கீழ்கண்ட தொகை பிடித்தம் செய்யப்பட வேண்டியுள்ளது.

| | |
|---|---|
| 25 விழுக்காடு இறப்பு மற்றும் பணிக்கொடைத் தொகையிலிருந்து தணிக்கைத்தடைகள் நிவர்த்திக்காக | ரூ.79,394/– |

மேற்படி தனியரின் இறப்பு மற்றும் பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்ட 25 விழுக்காடு தொகை அன்னாரின் மீதான தணிக்கைத்தடைகள் தீர்வு செய்யப்பட்ட பின்பு மீள வழங்கவும்,

இவர் சென்னை மாநகராட்சி 2ம் வகுப்பு அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, மேற்படி தொகைகளை பிடித்தம் செய்து உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் சான்றின்படி மேற்கண்ட ஓய்வூதியப் பயன்களை அளிக்கவும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி4/0788/2008**
**ஆணையாளர் அவர்களின் 19.03.2008 நாளிட்ட குறிப்பு**

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :170/2008 பொருள் எண்.62

**ஓய்வூதியம்**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–7, வருவாய் துறையில் உதவி வருவாய் அலுவலராக பணிபுரிந்து 31.12.2007 பி.ப அன்று வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்ற திரு.ஜி.ஜெயராஜ், என்பவருக்கு கீழ்கண்டவாறு ஓய்வூதியப் பயன்களை வழங்க உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் கடித எண்.090/எ4/2008, நாள்.31.01.2008ல் சான்று வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஓய்வூதியம் 01.01.2008 முதல் மாதம் | ரூ.6413/– |
| இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடை | ரூ.2,98,370/– |
| மாதத் தொகுப்புத் தொகை | ரூ.2137/– |
| குறைக்கப்பட்ட மாத ஓய்வூதியம் | ரூ.4276/– |
| தொகுப்பு மதிப்பீட்டுத் தொகை | ரூ.2,68,236/– |
| ஓய்வூதியரின் காலத்திற்கு பின்னர் அன்னாரது மனைவி திருமதி. ஜே.தனலட்சுமி, என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் மாதம் | ரூ.6413/– 03.12.2014 வரை<br>ரூ.3848/– 04.12.2014 முதல் |

தனியர் 32 ஆண்டுகள் 09 மாதங்கள் 12 நாட்கள் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்துள்ளார்.

மேற்படி அலுவலரிடமிருந்து கீழ்கண்ட தொகைகள் பிடித்தம் செய்ய வேண்டியுள்ளது.

| | |
|---|---|
| 25 விழுக்காடு இறப்பு மற்றும் பணிக்கொடைத் தொகையிலிருந்து தணிகைத் தடைகள் நிவர்த்திக்காக | ரூ.74,593/– |

இவர் சென்னை மாநகராட்சி 2ம் வகுப்பு அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, மேற்படி தொகைகளை பிடித்தம் செய்து உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் சான்றின்படி ஓய்வூதியப் பயன்களை அளிக்கவும் இறப்பு மற்றும் பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட வேண்டிய 25 விழுக்காடு தொகை அன்னாரின் மீதான தணிக்கை தடைகள் தீர்வு செய்யப்பட்ட பின்பு மீள வழங்கவும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி4/7546/2008**
**ஆணையாளர் அவர்களின் 10.04.2008 நாளிட்ட குறிப்பு**

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :171/2008 பொருள் எண்.63

**ஒய்வூதியம்**

சென்னை மாநகராட்சி, பாலங்கள் துறையில் உதவி செயற் பொறியாளராக பணிபுரிந்து 31.03.2007 பி.ப அன்று வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்ற திரு.எஸ்.ராஜேந்திரன், என்பவருக்கு கீழ்கண்டவாறு ஓய்வூதியப் பயன்களை வழங்க உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் கடித எண்.606/எ4/2008, நாள்.04.03.2008ல் சான்று வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஒய்வூதியம் 01.04.2007 முதல் மாதம் | ரூ.7875/– |
| இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடை | ரூ.3,50,000/– |
| மாதத் தொகுப்புத் தொகை | ரூ.2625/– |
| குறைக்கப்பட்ட மாத ஓய்வூதியம் | ரூ.5250/– |
| தொகுப்பு மதிப்பீட்டுத் தொகை | ரூ.3,29,490/– |
| ஒய்வூதியரின் காலத்திற்கு பின்னர் அன்னாரது மனைவி திருமதி.ஆர்.கற்பகம் என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் மாதம் | ரூ.7875/– 07.03.2014 வரை<br>ரூ.4725/– 08.03.2014 முதல் |

இவர் 34 ஆண்டுகள் 06 மாதங்கள் 09 நாட்கள் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்துள்ளார்.

மேற்படி அலுவலரிடமிருந்து கீழ்கண்ட தொகைகள் பிடித்தம் செய்யப்பட வேண்டியுள்ளது.

| | |
|---|---|
| 25 விழுக்காடு இறப்பு மற்றும் பணிக்கொடைத் தொகையிலிருந்து தணிக்கைத்தடைகள் நிவர்த்திக்காக | ரூ.87,500/– |

மேற்படி தனியரின் இறப்பு மற்றும் பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்ட 25 விழுக்காடு தொகை அன்னாரின் மீதான தணிக்கைத்தடைகள் தீர்வு செய்யப்பட்ட பின்பு மீள வழங்கவும்,

இவர் சென்னை மாநகராட்சி 2ம் வகுப்பு அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, மேற்படி தொகைகளை பிடித்தம் செய்து உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் சான்றின்படி மேற்கண்ட ஓய்வூதியப் பயன்களை அளிக்கவும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.எண்.பி4/19300/07**
**ஆணையாளர் அவர்களின் 19.03.2008 நாளிட்ட குறிப்பு**

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :172/2008 பொருள் எண்.64

**ஒய்வூதியம்**

திருமதி.அ.புனிதவதி, முதன்மை கணக்கு அலுவலர், மத்திய கணக்கு குழுமம், அவர்கள் கடந்த 30.09.2006 பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஒய்வு பெற்றார். தனியருக்கு ஏற்கனவே ஓய்வூதியம் மற்றும் இதர பயன்கள் வழங்கப்பட்டது.

உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடித எண்.நி.மு.எண்.1148/எ4/2007, நாள்.07.06.2007ல் திருத்திய ஓய்வூதிய பயன்களின் விவரம் பின்வருமாறு.

வயது முதிர்வு திருத்திய ஓய்வூதியம் ரூ.9207/– 01.10.2006 முதல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியம் தொகை ரூ.9109/–ஐ நேர் செய்து மீதம் வழங்கவும், தொகுப்புத் தொகை ரூ.3,85,221/–ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.3,81,079/–ஐ நேர்செய்து மீதம் தொகையான ரூ.4,142/–ஐ வழங்கவும் ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது கணவர் திரு.முனிராஜ், என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் ரூ.5524/– 02.09.2013 முதல் வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அன்னார் சென்னை மாநகராட்சி பணியில் வகுப்பு–1 (எ) அலுவலர் என்பதால் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, 07.06.2007 நாளிட்ட தணிக்கைச்சான்றின்படி 01.10.2006 முதல் தனியருக்கு திருத்திய ஒய்வூதியப்பயன்கள் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.எண்.பி4/6928/2008**

**ஆணையாளர் அவர்களின் 02.04.2008 நாளிட்ட குறிப்பு**

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :173/2008 பொருள் எண்.65

**ஒய்வூதியம்**

திருமதி.பி.சந்திரலேகா, உதவி கணக்கு அலுவலர், மத்திய கணக்கு குழுமம், அவர்கள் கடந்த 31.03.2006 பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஒய்வு பெற்றார். தனியருக்கு ஏற்கனவே ஒய்வூதியம் மற்றும் இதர பயன்கள் வழங்கப்பட்டது.

உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடித எண்.நி.மு.எண்.289/எ4/2008, நாள்.18.02.2008ல் தனியருக்கு அனுமதிக்கப்பட்ட திருத்திய ஒய்வூதிய பயன்களின் விவரம் பின்வருமாறு.

வயது முதிர்வு திருத்திய ஒய்வூதியம் ரூ.7238/– 01.04.2006 முதல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒய்வூதியம் தொகை ரூ.4350/–ஐ நேர் செய்து மீதம் வழங்கவும், இறப்பு மற்றும் ஒய்வுக்காலப் பணிக்கொடை ரூ.2,96,159/–ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.2,39,729/–ஐ நேர்செய்து மீத தொகை ரூ.56,430/–ல் தணிக்கைத் தடைக்காரணமாக 25% பிடித்தம் ரூ.14,107/– போக மீதம் ரூ.42,323/– வழங்கவும், தொகுப்புத் தொகை ரூ.3,02,755/–ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.1,82,004/–ஐ நேர்செய்து மீத தொகையான ரூ.1,20,751/–ஐ வழங்கவும், ஒய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது கணவர் திரு.கே.வெங்கடேசன், என்பவருக்கு குடும்ப ஒய்வூதியம் ரூ.4343/– 05.03.2013 முதல் வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அன்னார் சென்னை மாநகராட்சி பணியில் வகுப்பு–2 அலுவலர் என்பதால் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, 18.02.2008 நாளிட்ட தணிக்கைச்சான்றின்படி வயது முதிர்வு ஓய்வுபெற்ற திருமதி.பி.சந்திரலேகா, உதவி கணக்கு அலுவலர், அவர்களுக்கு மேற்கண்டவாறு திருத்திய ஒய்வூதியப்பயன்கள் 01.04.2006 முதல் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>பொ.து.ந.க.எண்.பி9/7298/2008</u>

<u>ஆணையாளர் அவர்களின் 15.04.2008 நாளிட்ட குறிப்பு</u>

## <u>03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண் :174/2008 பொருள் எண்.66

### <u>ஓய்வூதியம்</u>

திரு.ஜி.லோகநாதன், உதவி செயற்பொறியாளர், மண்டலம்—1, அவர்கள் கடந்த 31.08.2007 முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்றார். உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடித எண். நி.மு.எண்.519/எ4/2008ன்படி ஓய்வூதியப் பயன்கள் அளிக்க சான்றளிக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு.

வயது முதிர்வு ஓய்வூதியம் ரூ.7875/—01.09.2007 முதல் வழங்கவும், இறப்பு மற்றும் ஓய்வுக்காலப் பணிக்கொடை ரூ.3,50,000/—ல் தணிக்கைத்தடை காரணமாக 25% தொகை ரூ.87500/— பிடித்தம் செய்து மீதத் தொகை ரூ.2,62,500/— வழங்கவும், ஓய்வூதியத்தில் ரூ.2625/— தொகுத்துப்பெறவும், அவ்வாறு தொகுத்துப்பெறும் தொகுப்பு மதிப்பீட்டுத் தொகை ரூ.3,29,490/— வழங்கவும், தொகுப்பு பெறுவதால் தனியரது ஓய்வூதியம் ரூ.7825/— லிருந்து ரூ.5250/— ஆக குறைத்து வழங்கவும், மேலும் தனியரது காலத்திற்குபின் குடும்ப ஓய்வூதியமாக அன்னாரது வாரிசுதாரரும் மனைவியுமான திருமதி.வி.எல். சாந்தா, அவர்களுக்கு மாதம் ரூ.7875/— 18.08.2014 வரையிலும், அதன் பின்னர் குறைக்கப்பட்ட குடும்ப ஓய்வூதியம் ரூ.4725/— 19.08.2014 முதல் வழங்கவும் சான்றளிக்கப்பட்டுள்ளது. கடைசி ஊதிய சான்றின்படி தனியருக்கு வழங்கப்பட்ட மிகை ஊதியம் ரூ.1943/— பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட வேண்டும்.

இவர் 32 வருடங்கள், 02 மாதங்கள் 28 நாட்கள் தகுதிப் பணிக்காலம் புரிந்த தனியர் சென்னை மாநகராட்சி பணியில் இரண்டாம் வகுப்பு அலுவலர் என்பதால் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, தனியருக்கு மேற்கண்டவாறு ஓய்வூதியப்பயன்கள் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ—18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்.பி4/7289/2008

ஆணையாளர் அவர்களின் 15.04.2008 நாளிட்ட குறிப்பு

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :175/2008 பொருள் எண்.67

**ஒய்வூதியம்**

திரு.ஆ. ஜெயக்குமார், மேற்பார்வை பொறியாளர், (மின்சாரம்) அவர்கள் கடந்த 31–01–2006 பி.ப. முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றார் அன்னாரின் பதவி வரன்முறையும் அரசின் உறுதியாக்கம் பெற வேண்டிருந்ததால் 31.05.2007 நாளிட்ட ஆணையரது செயல்முறையில் தனியருக்கு ஏற்கனவே தற்காலிக ஓய்வூதியம் மற்றும் தற்காலிக இறப்பு மற்றும் ஓய்வுக்கால பணிக்கொடை பயன்கள் வழங்கப்பட்டது. உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் 04.03.2008 நாளிட்ட கடிதத்தின்படி தணிக்கைச் சான்று நி.மு.எண்.5036/எ4/2006, நாள் 07.12.2006–ன்படி கீழ்கண்டவாறு அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியம் பயன்களில் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியப் பயன்களை நேர்செய்து தனியருக்கு வழங்கப்பட வேண்டும்.

| | |
|---|---|
| ஓய்வூதியம் | ரூ. 12,255/– |
| இறப்பு மற்றும் பணிக்கொடை | ரூ. 3,50,000/– |
| தொகுப்புத் தொகை | ரூ. 5,12,750/– |
| மாத தொகுப்புத் தொகை | ரூ.4085/– |
| குறைக்கப்பட்ட ஓய்வூதியம் | ரூ. 8170/– |
| ஓய்வூதியரின் மனைவி திருமதி.ஜே.சுமதி, என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் | 7515/– 05.01.2013 முதல் |

அன்னார் சென்னை மாநகராட்சி பணியில் வகுப்பு 1.ஏ அலுவலர் என்பதால் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, 31.01.2006 பி.ப முதல் வயது முதிர்வு ஓய்வுபெற்ற திரு.ஆ. ஜெயக்குமார், மேற்பார்வை பொறியாளர், (மின்சாரம்) அவர்களுக்கு 01.02.2006 முதல் வயது முதிர்வு ஓய்வூதியம் ரூ.12,225/– ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தற்காலிக ஓய்வூதியம் தொகை ரூ.9191/–ஐ நேர் செய்து மீதம் வழங்கவும், இறப்பு மற்றும் ஓய்வுக்காலப் பணிக்கொடை ரூ.3,50,000/–ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தற்காலிக இறப்பு மற்றும் ஓய்வுக்காலப் பணிக்கொடை தொகை ரூ.2,62,500/–ஐ நேர் செய்து மீத தொகை ரூ.87,500/–ல் தணிக்கைத் தடைக்காரணமாக 25% பிடித்தம் ரூ.87,500/– நேர் செய்து தனியர் மீதான தணிக்கைத் தடைகள் தீர்வு செய்யப்பட்ட பின்பு மீள வழங்கவும் அன்னாரின் ஓய்வூதியத்தில் ரூ.4085/–யை தொகுப்பு செய்வதால் தொகுப்புத் தொகை ரூ.5,12,750/–ஐ வழங்கவும் குடும்ப ஓய்வூதியமாக அன்னாரின் மனைவி திருமதி.ஜே.சுமதி, அவர்களுக்கு ரூ.7515/– 05.01.2013 முதல் வழங்கவும், மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி4/7516/2008**
**ஆணையாளர் அவர்களின் 15.04.2008 நாளிட்ட குறிப்பு**

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :176/2008 பொருள் எண்.68

**ஓய்வூதியம்**

சென்னை மாநகராட்சி, வருவாய் துறையில் உதவி வருவாய் அலுவலராக பணிபுரிந்து 31.01.2008 பி.ப அன்று வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்ற திரு.என்.கணிகண்ணன், என்பவருக்கு கீழ்கண்டவாறு ஓய்வூதியப் பயன்களை வழங்க உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் கடித எண்.485/எ4/2008, நாள்.03.03.2008ல் சான்று வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஓய்வூதியம் 01.02.2008 முதல் மாதம் | ரூ.6207/– |
| இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடை | ரூ.2,88,783/– |
| மாதத் தொகுப்புத் தொகை | ரூ.2069/– |
| குறைக்கப்பட்ட மாத ஓய்வூதியம் | ரூ.4138/– |
| தொகுப்பு மதிப்பீட்டுத் தொகை | ரூ.2,59,701/– |
| ஓய்வூதியரின் காலத்திற்கு பின்னர் அன்னாரது மனைவி திருமதி.பூங்குழலி, என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் மாதம் | ரூ.6207/– 16.01.2015 வரை<br>ரூ.3724/– 17.01.2015 முதல் |

இவர் 32 ஆண்டுகள் 10 மாதங்கள் 19 நாட்கள் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்துள்ளார்.

மேற்படி அலுவலரிடமிருந்து கீழ்கண்ட தொகை பிடித்தம் செய்யப்பட வேண்டியுள்ளது.

| | |
|---|---|
| 25 விழுக்காடு இறப்பு மற்றும் பணிக்கொடைத் தொகையிலிருந்து தணிக்கைத்தடைகள் நிவர்த்திக்காக | ரூ.72,195/– |

மேற்படி தனியரின் இறப்பு மற்றும் பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்ட 25 விழுக்காடு தொகை அன்னாரின் மீதான தணிக்கைத்தடைகள் தீர்வு செய்யப்பட்ட பின்பு மீள வழங்கவும்,

இவர் சென்னை மாநகராட்சி 2ம் வகுப்பு அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, மேற்படி தொகைகளை பிடித்தம் செய்து உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் சான்றின்படி மேற்கண்ட ஓய்வூதியப் பயன்களை அளிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

வ.து.ந.க.எண்.அ1/04187/2008
ஆணையாளர் அவர்களின் 15.4.2008 நாளிட்ட குறிப்பு

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :177/2008 பொருள் எண்: 69

**பணிவரன்முறைப்படுத்துதல்**

திரு.எஸ். சம்பத்குமார், (உதவி வருவாய் அலுவலர்) வரிமதிப்பீட்டாளராக பணிபுரிந்தபோது அவர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் அவர் கடுமையாக எச்சரித்து விடப்பட்டதின் அடிப்படையில் 2005–06–ஆம் ஆண்டில் இறுதி செய்யப்பட்ட உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான இறுதிப் பட்டியலில் திரு.எஸ். தியாகராஜன் அவர்களுக்கு அடுத்ததாகவும் திரு.ஜி. புருஷோத்தம் அவர்களுக்கு மேலாகவும் வரிசை எண்.2ல் வைத்து திரு.எஸ்.சம்பத்குமார்அவர்களுக்கு பணிமூப்பை அடிப்படை விதி 27 பிரிவு 17–ன்படி கருத்தியலாக அவரது இளையவர் திரு.ஜி. புருஷோத்தம், உதவி வருவாய் அலுவலர் பதவியில் பணியில் சேர்ந்த 21.06.2006 முதல் மறு நிர்ணயம் செய்து, இதனால் ஏற்படும் நிலுவைத் தொகையை அவர் பெற உரிமையின்றி அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு ரூ.8000–275–13500 என்ற சம்பள விகிதத்தில் உதவி வருவாய் அலுவலராக ஆணையரின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண். ஈ2/40940/2005, நாள்.07.09.2006–ன்படி பதவி உயர்வு வழங்கப்பட்டது. அன்னார் 7.9.2006 அன்று பணியில் சேர்ந்தார்.

இப்பணி நியமனத்திற்கு அரசாணை (ப) எண்.537 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந–3) துறை நாள். 5.11.2007ல் அரசு உறுதியாக்கம் வழங்கியுள்ளதை தொடர்ந்து தனியரது பணிகள் உதவி வருவாய் அலுவலர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 7.9.2006 முதல் பணிவரன்முறைப்படுத்தப்பட நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: வ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.உ.சு.அ.9/அ1/316/08**
**ஆணையாளர் அவர்களின் 24.03.2008 நாளிட்ட குறிப்பு**

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :178/2008 பொருள் எண்.70

**தேர்வுநிலை வழங்க அனுமதி**

திரு.ஜி.டி.தங்கராஜன், உதவி சுகாதார அலுவலர், மண்டலம்–9, அவர்களின் 28.02.2008 நாளிட்ட கடிதத்தில் தான் உதவி சுகாதார அலுவலராக 16.06.1989 அன்று பணியமர்த்தப்பட்டு அப்பதவியில் 10 ஆண்டுகள் பணி முடித்தமைக்கு தேர்வுநிலை ஊதிய விகிதம் வழங்க வேண்டி கோரியுள்ளார்.

தனியர் உதவி சுகாதார அலுவலராக 16.06.1989ல் சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்தார். இவரது பணி நியமனத்திற்கு அரசு உறுதியாக்கம் வழங்கியுள்ளது. இதனைத் தொடர்ந்து 16.06.1989 முதல் பணிவரன் முறைப்படுத்தப்பட்டு 16.06.1991 முதல் தகுதிகாண் பருவ உரிமை வழங்கப்பட்டுள்ளது.

அப்பதவியில் 10 ஆண்டுகள் பணி முடித்தமைக்கு 16.06.1999 அன்று முதல் தேர்வுநிலை ஊதிய விகிதம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். தனியரின் பணிப்பதிவேட்டினை ஆய்வு செய்ததில் இதுநாள் வரை ஊதியமில்லா விடுப்பு எதுவும் துாய்க்கவில்லை.

| பெயர் மற்றும் பதவி | உதவி சுகாதார அலுவலர் பதவியில் பணி நியமனமான நாள் | உதவி சுகாதார அலுவலர் பதவியில் பணிவரன்முறைப் படுத்தப்பட்ட நாள் | தகுதிகாண் பருவம் பூர்த்தியான நாள் | சம்பளம் இல்லா விடுப்பு |
|---|---|---|---|---|
| திரு.ஜி.டி.தங்கராஜன் உதவி சுகாதார அலுவலர் | 16.06.1989 | 16.06.1989 | 16.06.1991 | --- |

| 10 ஆண்டு கால பணி முடித்த நாள் | முந்தைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட தண்டனை விவரம் | தண்டனை முடிவுற்றதா | உதவி சுகாதார அலுவலர் பதவியில் தேர்வுநிலை வழங்கப்பட வேண்டிய நாள் |
|---|---|---|---|
| 15.06.1999 பிற்பகல் | ஏதும் இல்லை | ஏதும் இல்லை | 16.06.1999 |

கணக்கு அலுவலர்–9, அவர்களின் 04.03.2008 நாளிட்ட குறிப்பில் தனியர் 10 ஆண்டுகள் அப்பதவியில் பணி முடித்தமைக்கு சாதாரண ஊதிய விகிதமான ரூ.9100–275–14050லிருந்து தேர்வுநிலை ஊதிய விகிதமான 10000–325–15200 என்ற விகிதத்தில் அடிப்படை ஊதியமாக ரூ.10975+50 தனி ஊதியம் 16.06.1999 முதல் நிர்ணயம் செய்யலாம் என கருத்துரை அளித்துள்ளார்.

அதனடிப்படையில் தனியர் வகுப்பு–2ஐ சார்ந்துள்ளதால் திரு.ஜி.டி. தங்கராஜன், அவர்களுக்கு தேர்வு நிலை ஊதிய விகிதமான ஊதியத்தில் அடிப்படை ஊதியமாக ரூ.10000–325–15200ல் ரூ.10975+50 ஆக 16.06.1999 முதல் நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.9
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ.உ.சு.அ.7/எச்1/68/08

ஆணையாளர் அவர்களின் 24.03.2008 நாளிட்ட குறிப்பு

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :179/2008 பொருள் எண்.71

**தேர்வுநிலை வழங்க அனுமதி**

மருத்துவர் திரு.கே. சண்முகம், என்பவர் மருத்துவ அலுவலராக, 22.12.1989 பிற்பகலில் சென்னை மாநகராட்சி பணியில் சேர்ந்தார். இவரது பணி நியமனத்திற்கு அரசு உறுதியாக்கம் வழங்கியுள்ளது. பின்னர் செயல்முறை ஆணை, சு.து.ந.க.எண்.சி1/933/90, நாள்.16.05.1990ன்படி 17.05.1990 பிற்பகல் முதல் உதவி சுகாதார அலுவலராக பதவி உயர்வு அளிக்கப்பட்டார். இப்பதவியில் அரசின் உறுதியாக்கம் பெறப்பட்டு 17.05.1990 பிற்பகல் முதல் பணிவரன் முறைப்படுத்தப்பட்டு 16.05.1992 பிற்பகல் முதல் தகுதிகாண் பருவ உரிமை வழங்கப்பட்டுள்ளது.

மருத்துவர் திரு.கே.சண்முகம், உதவி சுகாதார அலுவலர், பதவியில் பத்தாண்டு காலம் பணி முடித்துள்ளமைக்கு 18.05.2000 அன்று தேர்வுநிலை வழங்கப்பட வேண்டும். அன்னார் பத்தாண்டுகளில் சம்பளமில்லா விடுப்பு ஏதும் துய்க்காததால் 18.05.2000 முதல் உதவி சுகாதார அலுவலர் பதவியில் தேர்வு நிலை வழங்கி தேர்வு நிலையில் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

தனியர் உதவி சுகாதார அலுவலர் பதவியில் 10 ஆண்டு கால பணி முடித்த விவரம் பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது.

| பெயர் மற்றும் பதவி | உதவி சுகாதார அலுவலர் பதவியில் பணி நியமனமான நாள் | உதவி சுகாதார அலுவலர் பதவியில் பணிவரன்முறைப் படுத்தப்பட்ட நாள் | தகுதிகாண் பருவம் பூர்த்தியான நாள் | சம்பளமில்லா விடுப்பு விவரம் |
|---|---|---|---|---|
| திரு.கே.சண்முகம் உதவி சுகாதார அலுவலர் | 17.05.1990 பிற்பகல் | 17.05.1990 பிற்பகல் | 16.05.1992 பிற்பகல் | ஏதும் இல்லை |

| 10 ஆண்டு கால பணி முடித்த நாள் | முந்தைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட தண்டனை விவரம் | தண்டனை முடிவுற்றதா | உதவி சுகாதார அலுவலர் பதவியில் தேர்வுநிலை வழங்கப்பட வேண்டிய நாள் |
|---|---|---|---|
| 17.05.2000 பிற்பகல் | 1 ஆண்டு ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி நிறுத்தம் செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி7/6534/94 நாள். 26.08.1994 | தண்டனை காலம் முடிவுற்றது. | 18.05.2000 |

இது குறித்து தெரிவிப்பது, கணக்கு அலுவலர், மண்டலம்–7, அவர்களின் 08.02.2008 நாளிட்ட குறிப்புரையில் தனியர் 18.05.2000 முதல் உதவி சுகாதார அலுவலர் பதவியில் தேர்வு நிலை வழங்க தனியர் வகுப்பு–2ல் வருவதால், பொதுத்துறை மூலம் கருத்துரு பெற வேண்டும் என தெரிவித்துள்ளார். பொதுத்துறை தனது 15.02.2008 நாளிட்ட குறிப்பில் அதிகாரப் பங்களிப்பு செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.இ3/471/98 நாள்.13.01.1999ன்படி இது குறித்து மேல் நடவடிக்கை எடுக்கலாம் என தெரிவித்துள்ளது.

**ம.அ.உ.சு.அ.7/எச்1/68/08**

இது குறித்து மேலும் தெரிவிப்பது, உதவி சுகாதார அலுவலர் பதவி, சென்னை மாநகராட்சி பணியமைப்பில், வகுப்பு–2ன் கீழ் வருகின்றது. இப்பதவி வகிப்பவர்களுக்கு தேர்வு நிலை அனுமதிக்க மன்றம், அதிகாரம் பெற்றுள்ளது. தனியர் பத்தாண்டு காலம் உதவி சுகாதார அலுவலர் பதவியில் பணிமுடித்துள்ளமையால் 18.05.2000 முதல் அவருக்கு தேர்வு நிலை வழங்கப்பட வேண்டும். இவர் உதவி சுகாதார அலுவலர் பதவியில் ரூ.9100–275–14050 என்ற ஊதிய விகிதத்தில் 01.04.2000 அன்று ரூ.10,750/–அடிப்படை ஊதியமாக பெற்று வந்துள்ளார். இந்நிலையில் உதவி சுகாதார அலுவலர் பதவியின் தேர்வு நிலை ஊதிய விகிதமான ரூ.10000–325–15200ல் ரூ.10975+50 தனி ஊதியம் ஆக நிர்ணயம் செய்யப்படவேண்டும்.

எனவே, திரு.கே. சண்முகம், உதவி சுகாதார அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்–7, அவர்களுக்கு இப்பதவியில் பத்தாண்டு கால பணி முடித்தமைக்கு 18.05.2000 முதல் தேர்வு நிலை வழங்கவும், அன்னாரது ஊதியத்தை உதவி சுகாதார அலுவலர் பதவியின் தேர்வுநிலை ஊதியமான ரூ.10000–325–15200ல் ரூ.10975+50 தனி ஊதியம் ஆக நிர்ணயம் செய்யவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.7.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மா.கு.ந(ம)ம.கு.ந.எண்.எப்4/0458/2008**
**ஆணையாளர் அவர்களின் 17.03.2008 நாளிட்ட குறிப்பு**

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :180/2008 பொருள் எண்.72

**தேர்வு நிலை வழங்க அனுமதி**

மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக பணிபுரியும் டாக்டர் திருமதி. எம்.புஷ்பம், மருத்துவ அலுவலர் அவர்கள் பத்தாண்டு பணியை முடித்துள்ளார். அவருக்கு தேர்வு நிலை கால சம்பள ஊதியம் அனுமதிக்கப்பட வேண்டும்.

டாக்டர் திருமதி. எம்.புஷ்பம் மருத்துவ அலுவலராக 15.11.88 அன்று மதுரை மாநகராட்சியில் பணியில் பணியமர்த்தப்பட்டார். பின்னர் மனமொத்த மாறுதல் அடிப்படையின் மூலம் சென்னை மாநகராட்சி பணிக்கு மாற்றம் செய்யப்பட்டு 05.12.90 முதல் தொடர்ந்து பணியாற்றி வருகிறார். தனியர் அவர்களுக்கு மதுரை மாநகராட்சியில் மருத்துவ அலுவலர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டு 14.11.90 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டு அன்னாரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. தனியர் துறைத்தேர்வு அனைத்தும் தேர்ச்சி பெற்றுள்ளார்கள்.

கணக்கு அலுவலர், மாவட்ட குடும்ப நலத்துறை அவர்கள் டாக்டர் திருமதி.எம்.புஷ்பம், மருத்துவ அலுவலர் 15.01.99 முதல் தேர்வு நிலை கால சம்பள விகிதம் அனுமதித்து அவரது அடிப்படை ஊதியத்தை ரூ.9650+300 சிறப்பு ஊதியம் என தேர்வு நிலை கால சம்பளம் 9100–275–14050ல் நிர்ணயிக்கலாம் என குறிப்புரை வழங்கியும் அத்துடன் பணப்பயன் 24.02.2005 முதல் வழங்கப்பட வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

தனியர் மீது துறை ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை. இவருக்கு தண்டனை ஏதும் வழங்கப்படவில்லை. இவரது பணிக்காலத்தை பற்றிய விவரங்கள் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | மருத்துவ அலுவலரின் பெயர் | முதன் முதலில் நியமன நாள்/ பணிவரன் முறை செய்த நாள் | தகுதிகாண் பருவம் பூர்த்தி அடைந்த நாள் | சம்பளமில்லா விடுப்பு துய்த்த நாள் |
|---|---|---|---|---|
| 01 | டாக்டர் திருமதி.எம்.புஷ்பம் | 15.11.1988 | 14.11.1990 | 60நாட்கள் 19.05.1997 முதல் 17.07.1997 வரை |

| பத்தாண்டு பணியை முடித்த நாள் | முந்தைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட தண்டனை விவரம் | தண்டனை முற்று பெற்ற நாள் | தேர்வு நிலை ஊதியம் பெற தகுதியுடையவரா | தேர்வு நிலை வழங்கப்பட வேண்டிய நாள் |
|---|---|---|---|---|
| 14.01.1999 | ஏதும் இல்லை | –– | ஆம் | 15.01.1999 |

தனியருக்கு தேர்வு நிலை கால சம்பளம் வழங்குவதால் மருத்துவ அலுவலர் பதவியில் கூடுதலாக பணியிடங்கள் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை.

எனவே, டாக்டர் திருமதி.எம்.புஷ்பம், மருத்துவ அலுவலர் பதவியில் 10 ஆண்டு பணியை 14.01.1999 அன்று பூர்த்தி செய்ததால் அவருக்கு 15.01.1999 முதல் அடிப்படை சம்பளம் 9650+300 சிறப்பு ஊதியம் என சிறப்பு நிலை கால சம்பளமாக ரூ.9100–275–14050ல் நிர்ணயிக்க, அனுமதியும் மற்றும் அ.ஆ.எண்.31 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் துறை, நாள்.24.02.2005ன்படி பணப்பயனை 24.02.2005 முதல் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.4.ந.க.எண்.சுது/அ3/1262/2007**
**ஆணையாளர் அவர்களின் 27.03.2008 நாளிட்ட குறிப்பு**

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :181/2008 பொருள் எண்.73

**தேர்வு நிலை வழங்க அனுமதி**

மருத்துவர் திருமதி. ரேவதி ரோசலின், அவர்கள் மருத்துவ அலுவலர், பதவியிலிருந்து சிறப்பு அதிகாரி மன்றம் தீர்மானத்தின்படி, சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/8543/94, நாள். 18.08.1994ன்படி 25.08.1994 முதல் தற்காலிகமாக உதவி சுகாதார அலுவலராக பதவி உயர்வு அளிக்கப்பட்டது. பிறகு அரசு ஆணை (பத்தாண்டு) எண்.353, ந.நி.ம.கு.வ. துறை நாள். 14.08.1996ன்படியும் மற்றும் அரசு ஆணை (பத்தாண்டு) எண்.565, ந.நி.(ம)கு.நீ.வ.(மா.ந.3) துறை, நாள்.15.12.1999ன்படி, தனியரின் உதவி சுகாதார அலுவலர் பணிநியமனத்திற்கு பின்னேற்பு அளித்தும் அவர் அப்பதவிக்கு முழுமையான தகுதி பெற்ற நாளான 28.12.1997 முதல் பணிவரன்முறை செய்தும் அரசு ஆணை வெளியிடப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதன் தொடர்பாக தெரிவிக்கப்படுவது என்னவெனில், திருமதி. ரேவதி ரோசலின், உதவி சுகாதார அலுவலர் அவர்கள் உதவி சுகாதார அலுவலர் பதவியில் பணிவரன் முறைப்படுத்தப்பட்ட நாளான 28.12.1997 முதல் 27.12.2007 வரை ஒரே பதவியில் பத்தாண்டுகள் பணி முடித்தமையால், தேர்வு நிலையில் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட வேண்டியுள்ளது. அன்னார் பத்தாண்டுகளில் சம்பளமில்லா விடுப்பு ஏதும் எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. அன்னாருக்கு தற்போது 28.12.2007 முதல் உதவி சுகாதார அலுவலர் பதவியில் தேர்வு நிலையில் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். அன்னார் 28.12.2007 அன்று உதவி சுகாதார அலுவலர் பதவியில் சாதாரண நிலையில் ரூ.9100–275–14050 என்ற ஊதியவிகிதத்தில் ரூ.12,950/– அடிப்படை ஊதியமாக பெற்று வருகிறார்.

தனியர் வகித்த உதவி சுகாதார அலுவலர், பதவியில் பத்தாண்டு கால பணியை முடித்துள்ளமைக்கு உதவி சுகாதார அலுவலர் பதவியில் தேர்வு நிலை அனுமதிக்கப்பட வேண்டும். இவர் 10 ஆண்டு கால பணி முடித்த விவரம் பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | உதவி சுகாதார அலுவலர் பதவியில் பணி நியமனமான நாள் | சம்பளமில்லா விடுப்பு துய்த்த விவரம் | 10 ஆண்டு கால பணி முடித்த நாள் |
|---|---|---|---|---|
| 01 | திருமதி.ரேவதி ரோசலின், உதவி சுகாதார அலுவலர் | 28.12.1997 | ஏதும் இல்லை | 27.12.2007 |

| உதவி சுகாதார அலுவலர் பதவியில் தேர்வு நிலை தகுதியுடை நாள். | முந்தைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட தண்டனை விவரம் | தண்டனை முடிவுற்றதா | உதவி சுகாதார அலுவலர் பதவியில் தேர்வு நிலையில் 28.12.2007 அன்று நிர்ணயம் செய்ய வேண்டிய ஊதியம் |
|---|---|---|---|
| 28.12.2007 | ஏதும் இல்லை | –– | ரூ.12925+300 த.ஊ. |

கணக்கு அலுவலர், மண்டலம்–4 அவர்களின் 03.03.2008 நாளிட்ட குறிப்புரையில், மருத்துவர் திருமதி. டாக்டர் ரேவதி ரோசலின், உதவி சுகாதார அலுவலர், மண்டலம்–4, அவர்களுக்கு உதவி சுகாதார பதவியில் 28.12.2007 முதல் தேர்வு நிலை அனுமதித்து, அவரது ஊதியத்தை உதவி சுகாதார அலுவலர் பதவியின் தேர்வு நிலை ஊதிய விகிதமான ரூ.10,000–325–15200இல் 28.12.2007 முதல் ரூ.12,925/– + 300 தனி ஊதியம் நிர்ணயம் செய்யலாம் என தெரிவித்துள்ளார்.

**ம.அ.4.ந.க.எண்.சுது/அ3/1262/2007**

தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் தொடரப்படவில்லையென்றும், தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. உதவி சுகாதார அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு–2ன் கீழ் வருகின்றது. இப்பதவி வகிப்பவர்களுக்கு தேர்வு நிலை ஊதியம் அனுமதிக்க மன்றம் அரசாணை (நிலை) எண்.1381, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை நாள். 03.09.1982ன்படி அதிகாரம் பெற்றுள்ளது.

எனவே, திருமதி. டாக்டர் ரேவதி ரோசலின், உதவி சுகாதார அலுவலர், மண்டலம்–4, அவர்களுக்கு உதவி சுகாதார அலுவலர் பதவியில் 10 ஆண்டுகள் பணி முடித்தமைக்கு, 28.12.2007 முதல் உதவி சுகாதார அலுவலர் பதவியில் தேர்வு நிலை அனுமதித்து, அவரது ஊதியத்தை உதவி சுகாதார அலுவலர் பதவியின் தேர்வு நிலை ஊதிய விகிதமான ரூ.10,000–325–15200இல் 28.12.2007 முதல் ரூ.12,925 + 300 தனி ஊதியம் நிர்ணயிக்க மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.4.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(சு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>ம.அ3.ந.க.எண்.சு1/425/2007</u>

<u>ஆணையாளர் அவர்களின் 31.03.2008 நாளிட்ட குறிப்பு</u>

## <u>03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண் :182/2008 பொருள் எண். 74

### <u>தேர்வு நிலை வழங்க அனுமதி</u>

டாக்டர் அருள் சாந்தி ராணி, மருத்துவ அலுவலர், அவர்களின்.14.12.2007 நாளிட்ட கடிதத்தில் அன்னார் மருத்துவ அலுவலராக பணியில் சேர்ந்து 10 வருட காலமாகிவிட்டதாகவும் எனவே அன்னாருக்கு தேர்வு நிலையில் ஊதியம் நிர்ணயம் செய்து தருமாறு கேட்டுக்கொண்டு உள்ளார்.

இதுகுறித்து தெரிவிப்பது தனியர் மருத்துவ அலுவலராக 11.12.97 முதல் பணி நியனம் செய்யப்பட்டார். அன்னார் பணி நியமனம் செய்யப்பட்டு 10.12.2007 வரை 10 வருட காலம் ஒரே பதவியில் பணிபுரிந்தமையால் 11.12.2007 முதல் தேர்வு நிலையில் ஊதியம் நிர்ணயம் செய்து வழங்கப்படவேண்டும். ஆனால் அன்னார் 79 நாட்கள் சம்பளமில்லா விடுப்பில் சென்றதால் அன்னாருக்கு 28.02.2006 முதல் தேர்வு நிலையில் ஊதியம் நிர்ணயம் செய்து வழங்கப்படவேண்டும்.

மருத்துவ அலுவலரின் பணி நியமனத்திற்கு அரசின் உறுதியாக்கம் பெறப்பட்டு 11.12.97 முதல் பணிவரன் முறைப்படுத்தப்பட்டு உள்ளது. 11.12.99 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டு உள்ளது.

மேலும் தனியர் 12.10.2001 முதல் 12.02.2002 வரை மேல்படிப்புக்காக படிப்பு வகுப்பு அளித்து சம்பளமில்லா விடுப்பில் பட்ட மேல் படிப்புக்கு செல்ல அனுமதி அளிக்கப்பட்டது. ஆதலால் தனியர் 12.10.2001 முதல் 12.02.2002 வரை சம்பளமில்லா விடுப்பு துய்த்துள்ளார்.

மன்றத் தீர்மான எண்.144/2005 நாள். 18.05.2005ல் அரசாணை எண்.31 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.சி3) துறை நாள்.24.02.05ன்படி சென்னை மாநகராட்சியில் அமுல்படுத்திட ஆணை பிறப்பித்து அதில் சென்னை மாநகராட்சி மற்றும் பிற மாநகராட்சிகள் நகராட்சி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்கள் மேற்படிப்பிற்காக (With Stipends) பயிற்சி கால உதவி தொகையுடன் படிக்க செல்லும் காலத்தினை சம்பளம் தவிர ஆண்டு ஊதிய உயர்வு, ஓய்வூதியம், தகுதிகாண்பருவம் போன்ற இதர காரணங்களுக்காக பணி காலமாக நிர்ணயிக்கவும் இவ்வாணையை 21.11.1979 முதல் அமுல்படுத்தலாம் என்றும் இதற்குண்டான பணப்பயன்கள் 24.02.2005 முதல் (அரசாணை பெறப்பட்ட நாள்) வழங்கலாம் என அறிவுறுத்தி ஆணை வெளியிடப்பட்டதை மன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கணக்கு அலுவலர்–3 அவர்களின் குறிப்பு நாள்.06.03.2008ல் தனியருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் தேர்வுநிலை ஊதியம் ரூ.10750/–ல் 28.02.2008 முதல் காலமுறை சம்பளம் ரூ.9100–275–14050ல் அனுமதிக்கலாம் என்று குறிப்புரை வழங்கியுள்ளார்.

மேற்கண்ட மருத்துவ அலுவலர், மண்டலம்–3, அவர்கள் மீது துறை மூலமோ அல்லது விழிப்புப் பணிக்குழு சார்ந்த குற்றச்சாட்டுக்கள் மற்றும் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

சென்னை மாநகராட்சியில் மருத்துவ அலுவலர் பதவியானது வகுப்பு–2 பிரிவில் வருவதால் தனியருக்கு தேர்வு நிலை ஊதியம் வழங்க மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டும்.

எனவே, டாக்டர். அருள் சாந்தி ராணி, மருத்துவ அலுவலர், மண்டலம்–3, அவர்களுக்கு 10 வருடங்கள் ஒரே பதவியில் தொடர்ந்து பணிபுரிந்தமையால் 28.02.2006 முதல் தேர்வுநிலை காலமுறை ஊதியம் ரூ.9100–275–14050ல் அடிப்படை ஊதியம் ரூ.10750/– என நிர்ணயம் செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.3.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ8.சு.து.ந.க.எண்.எச்1/2414/05**

**ஆணையாளர் அவர்களின் 17.03.2008 நாளிட்ட குறிப்பு**

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :183/2008 பொருள் எண்.75

**சிறப்பு நிலை வழங்க அனுமதி**

டாக்டர் கே.ஏ.மீனாட்சி, சிறப்பு நிலை மருத்துவ அலுவலர், மண்டலம்–8, சுகாதாரத்துறை அவர்கள் 15.12.2005 நாளிட்ட கடிதத்தில், அவர் மருத்துவ அலுவலர் பதவியில் 30 வருட பணிக்காலம் முடித்தமைக்கு சிறப்பு நிலை உதிய விகிதத்தில் ஒரு ஊக்க ஊதிய உயர்வு கோரியுள்ளார்.

தனியர் சென்னை மாநகராட்சியில் ஆணையரின் செயல்முறை ஆணை எண். பொ.து.ந.க.எண்.எ1/74203/75 நாள். 11.11.75ன்படி உதவி அறுவை சிகிச்சையாளராக சிறப்பு சத்துணவு திட்டத்தின் கீழ் பணியமர்த்தப்பட்டு 14.11.75 முதல் பணியில் சேர்ந்துள்ளார். பின்னர் இத்தனியர் மருத்துவராக பணிநியமனம் செய்யப்பட்டு, 29.05.79 முதல் மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வருகிறார். அரசாணை நிலை எண்.387, நாள்.11.03.80 (சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை)படி சிறப்பு சத்துணவு திட்டத்தின் கீழ் பணியமர்த்தப்பட்ட நாள் முதல் பணிவரன் முறைப்படுத்தவும், தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவித்தும் ஆணை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாணை, சென்னை மாநகராட்சியில் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி தனியரின் பணி 14.11.75 முதல் வரன்முறைப்படுத்தப்பட்டு 14.11.77 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சிறப்பு சத்துணவு திட்டத்தின் கீழ் உதவி அறுவை சிகிச்சையாளராக பணியமர்த்தப்பட்ட காலத்தை ஊதிய உயர்வு / ஓய்வூதியம் மற்றும் அனைத்து பயன்களுக்கும் எடுத்துக்கொள்ளவும் ஆணை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாணையின்படி தனியரின் 14.11.75 முதல் 28.05.79 வரை உதவி அறுவை சிகிச்சையாளராக பணிபுரிந்த காலம் வரன்முறைபடுத்தி தகுதிகாண் பருவம் முடித்தவராகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. தனியர் 10 வருட காலம் பணிமுடித்தமைக்கு 07.12.85 முதல் தேர்வு நிலை மருத்துவ அலுவலராக அனுமதிக்கப்பட்டு தேர்வு நிலை ஊதிய விகிதமான 1575–90–1845–100–2245–110–2685 என்ற ஊதிய விகிதத்தில் ரூ.1945+40 பிபி என்ற அடிப்படை ஊதியத்தில் நிர்ணயம் செய்து ஆணையரின் செயல்முறை ஆணை ம.அ8.ந.க.எண்.எச்/7461/94 நாள்.28.07.94ன்படி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் தனியர் 20 வருடகாலம் பணிமுடித்தமைக்கு 07.12.95 முதல் சிறப்பு நிலை மருத்துவராக அனுமதிக்கப்பட்டு சிறப்பு நிலை ஊதிய விகிதமான 3000–100–3500–125–4500 என்ற ஊதிய விகிதத்தில் ரூ.3500+100 தனி ஊதியம் என நிர்ணயம் செய்து (மன்றத் தீர்மானம் எண்.157/2002 நாள். 29.04.2002) மன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கணக்கு அலுவலர் மண்டலம்–8, அவர்களின் 20.02.2006 நாளிட்ட குறிப்பில் தனியர் அப்பதவியில் 30 வருட பணிக்காலம் முடித்தமைக்கு சிறப்பு நிலை ஊதிய விகிதத்தில் ஒரு ஊக்க ஊதிய உயர்வு அளித்து தனியரது அடிப்படை ஊதியத்தை 07.12.05 முதல் 10000–325–15200 என்ற ஊதிய விகிதத்தில் ரூ.14550/– என நிர்ணயம் செய்ய பரிந்துரைத்துள்ளார்.

மேலும் தனியர் தனது சிறப்பு நிலையில் ஊதிய மில்லா விடுப்பு ஏதும் துய்க்கவில்லை தனியர் மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை.

எனவே, டாக்டர்.கே.ஏ.மீனாட்சி, சிறப்பு நிலை மருத்து அலுவலர் அவர்களுக்கு 07.12.2005 முதல் 30 வருட பணிக்காலம் முடித்தமைக்கு 10000–325–15200 என்ற சிறப்பு நிலை காலமுறை ஊதிய விகிதத்தில் ரூ.14550/– அடிப்படை ஊதியம் வழங்க மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.8.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ.6.ந.க.எண்.சுது/எச்1/1216/2007
ஆணையாளர் அவர்களின் 25.03.2008 நாளிட்ட குறிப்பு

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :184/2008 பொருள் எண்.76

**சிறப்பு நிலை வழங்க அனுமதி**

மருத்துவர் திரு.வெ.தங்கசாமி, என்பவர் சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/19070/1984, நாள். 20.02.1986ன்படி மருத்துவ அலுவலராக 07.03.1986 முதல் சென்னை மாநகராட்சிப் பணியில் சேர்ந்தார்.

இதன் தொடர்பாக தெரிவிக்கப்படுவது என்னவெனில், அன்னாரது பணி அரசாணை எண்.937, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, நாள். 01.06.1989ன்படி உறுதியாக்கம் செய்யப்பட்டும், பிறகு ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/19070/89, நாள். 20.10.1989ன்படி 07.03.1988 முதல் அன்னார் தகுதிகாண் பருவம் முடித்தவராக அங்கீகரிக்கப்பட்டும் ஆணை வழங்கப்பட்டுள்ளது. தனியர் மருத்துவ அலுவலர் பதவியில் பத்தாண்டுக் கால பணி முடித்தமைக்கு 07.03.1996 முதல் மருத்துவ அலுவலர் பதவியில் தேர்வு நிலை அனுமதிக்கப்பட்டுள்ளது.

தனியர் மருத்துவ அலுவலர் பதவியில் இருபதாண்டு கால பணியை முடித்துள்ளமைக்கு மருத்துவ அலுவலர் பதவியில் சிறப்பு நிலை அனுமதிக்கப்பட வேண்டும். இவர் 20 ஆண்டு கால பணி முடித்த விவரம் பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண் | மருத்துவ அலுவலரின் பெயர் | முதன் முதலில் நியமனமான நாள் | தகுதிகாண் பருவம் பூர்த்தியான நாள் | சம்பளமில்லா விடுப்பு தூய்த்த விவரம் |
|---|---|---|---|---|
| 01 | மருத்துவர் திரு. வெ.தங்கசாமி | 07.03.1986 | 07.03.1988 | ஏதும் இல்லை |

| 10 ஆண்டு கால பணி முடித்த நாள் | முந்தைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட தண்டனை விவரம் | தண்டனை முடிவுற்றதா | தேர்வு நிலை வழங்கப்பட்ட நாள் | சிறப்பு நிலை வழங்கப்பட வேண்டிய நாள் |
|---|---|---|---|---|
| 07.03.1996 | ஏதும் இல்லை | -- | 07.03.1996 | 07.03.2006 |

கணக்கு அலுவலர், மண்டலம்–6 அவர்களின் 04.03.2008 நாளிட்ட குறிப்புரையில், மருத்துவர் திரு.வெ.தங்கசாமி, மருத்துவ அலுவலர், அவர்களுக்கு 07.03.2006 முதல் சிறப்பு நிலை அனுமதித்து, அவரது ஊதியத்தை மருத்துவ அலுவலர் பதவியின் சிறப்பு நிலை ஊதிய விகிதமான ரூ.10000–325–15200ல் 07.03.2006 முதல் ரூ. 11,950+175 தனி ஊதியமாக நிர்ணயம் செய்யலாம் என தெரிவித்துள்ளார்.

மருத்துவ அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு–2ன் கீழ் வருகின்றது. இப்பதவி வகிப்பவர்களுக்கு சிறப்பு நிலை அனுமதிக்க மன்றம் அரசாணை (நிலை) எண்.1381, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள்.03.09.1982ன்படி அதிகாரம் பெற்றுள்ளது.

தனியர் இருபதாண்டு பணிக்காலத்தில் ஊதியமில்லா விடுப்பு ஏதும் துய்க்கவில்லை. மேலும் தற்போது தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் தொடரப்படவில்லையென்றும், தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. அன்னாருக்கு சிறப்பு நிலை காலமுறை ஊதியம் வழங்குவதால் மருத்துவ அலுவலர் பதவியில் கூடுதலாக பணியிடங்கள் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை.

**<u>ம.அ.6.ந.க.எண்.சுது/எச்1/1216/2007</u>**

எனவே, மருத்துவர் திரு.வெ.தங்கசாமி, மருத்துவ அலுவலர், சுகாதரத்துறை, மண்டலம்–6, அவர்களுக்கு 07.03.2006 முதல் மருத்துவ அலுவலர் பதவியில் சிறப்பு நிலை அனுமதித்து, அவரது ஊதியத்தை மருத்துவ அலுவலர் பதவியின் சிறப்பு நிலை ஊதிய விகிதமான ரூ.10000–325–15200ல் 07.03.2006 முதல் ரூ. 11,950+175 தனி ஊதியமாக நிர்ணயிக்க மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.6.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.க.கு.ந.க.எண்.அ10/9565/07**

**ஆணையாளர் அவர்களின் 29.03.2008 நாளிட்ட குறிப்பு**

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :185/2008 பொருள் எண்.77

**பணிவரன்முறைப்படுத்துதல்**

சென்னை மாநகராட்சி, மத்திய கணக்கு குழுமத்தில் கொல்லா பதவியில் திரு.ஸ்ரீராமலு, முதன் முதலாக 02.12.1999 அன்று கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் காலமுறை ஊதியம் ரூ.2610–60–3150–65–3540ல் பணிநியனம் செய்யப்பட்ட நாளிலிருந்து ஓராண்டிற்குள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையக்குழுமத்தால் நடத்தப்படும் தமிழ் மொழித் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டார்.

அன்னார் பணியில் சேர்ந்த பொழுது பள்ளியிறுதி வகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தார். ஆயினும் தெலுங்கு மொழியினை முதல் பாடமாக கொண்டும் இந்தியை இரண்டாம் பாடமாகக் கொண்டும் பயின்றுள்ளார்.

இதன் பொருட்டு தெரிவிப்பது யாதெனில் சார்நிலை பணி விதிகளின்படி வகுப்பு மூன்றாம் நிலையில் பணியமர்த்தப்படுபவர்கள் இரண்டாண்டு பணிக்காலத்திற்குள் தமிழல்லாத பிற மொழி மூலம் பள்ளியிறுதி வகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் தமிழ்நாடு தேர்வாணையம் நடத்தும் தமிழ் மொழி தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

தனியர் இரண்டாண்டு பணிக்காலத்திற்குள் தமிழ் மொழி தேர்வில் தேர்ச்சி பெறவில்லை. அன்னார் 02.12.1999 அன்று பணியமர்த்தப்பட்டு 24.05.2006 அன்று தமிழ் மொழி தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். குறிப்பிட்ட கால கெடுவான இரண்டு ஆண்டுகளுக்கு, பிறகு தேர்ச்சி பெற்றுள்ளதால் அன்னாருக்கு கொல்லா பதவியில் பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் உரிமை வழங்கவும், ஆண்டு ஊதிய உயர்வுகள் வழங்கவும் அரசின் ஒப்புதல் பெற வேண்டும்.

தனியருக்கு அடிப்படை விதியின்படி ஒவ்வொரு ஆண்டும் ஊதிய உயர்வு வழங்கி அதற்கான பணப்பயனை அன்னார் தேர்ச்சி பெற்ற நாள் முதல் வழங்கலாம். அன்னாரது பணியினை பணியில் சேர்ந்த நாள் முதல் 02.12.1999 முதல் வரண் முறைப்படுத்தலாம். மேற்கண்டவாறு பணிவரன்முறை, தகுதிகாண் பருவ உரிமை மற்றும் ஆண்டு ஊதிய உயர்வு வழங்கி தேர்வில் தேர்ச்சி பெற்ற நாள் முதல் பணப்பயன் அளிப்பதற்கு அரசின் ஒப்புதல் தேவைப்படுகிறது.

எனவே, மத்திய கணக்கு குழுமத்தில் 02.12.1999 அன்று கொல்லா பதவியில் பணியமர்த்தப்பட்ட திரு.ந.ஸ்ரீராமலு, கொல்லா, அவர்கள் பணியை 02.12.1999 முதல் காலமுறை ஊதிய ரூ.2610–60–3150–65–3540ல் வரன்முறைப்படுத்தவும் அவரை தேர்வில் தேர்ச்சி பெற்ற நாளான 24.05.2006 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கவும், மேலும் தொடர்ந்து 01.10.2000, 01.10.2001, 01.10.2002, 01.10.2003, 01.10.2004, 01.10.2005, 01.10.2006, மற்றும் 01.10.2007, ஆகிய தேதிகளில் வருடாந்திர ஊதிய உயர்வு அனுமதிக்கவும், பணப்பயனை அன்னார் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையக்குழுமத்தால் நடத்திய தமிழ் மொழி தேர்வில் தேர்ச்சி பெற்ற நாளான 24.05.2006ம் அதற்கு அடுத்த நாளான 25.05.2006 முதல் வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலும் மற்றும் அரசின் உத்தரவு வேண்டி செயற்குறிப்பு அனுப்பவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.க.கு.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.6.ந.க.எண்.சுது/எச்1/178/2008**
**ஆணையாளர் அவர்களின் 17.03.2008 நாளிட்ட குறிப்பு**

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :186/2008 பொருள் எண்.78

**பணியமைப்பு**

மருத்துவர் திருமதி. இ. சரஸ்வதி, என்பவர் சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.சி1/6947/1999, நாள். 20.06.2006 மற்றும் மன்றத் தீர்மான எண்.197/2006, நாள். 30.05.2006ன்படி, மருத்துவ அலுவலர் பதவியிலிருந்து அரசின் உறுதியாக்கத்திற்கு உட்பட்டு உதவி சுகாதார அலுவலராக ரூ.9100–275–14050 என்ற சம்பள விகிதத்தில் பதவி உயர்வு பெற்று, 23.06.2006 முதல் பணியில் சேர்ந்தார்.

இதன் தொடர்பாக தெரிவிக்கப்படுவது என்னவெனில், திருமதி. இ. சரஸ்வதி, உதவி சுகாதார அலுவலர் என்பவருக்கு, அரசாணை (பத்தாண்டு) எண்.429, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 27.10.2006ன்படி தனியருக்கு உதவி சுகாதார அலுவலர் பணி நியமனத்திற்கு அரசு உறுதியாக்கம் பெறப்பட்டுள்ளது. மன்றத் தீர்மான எண்.477/2006, நாள். 29.12.2006ன்படி தனியருக்கு உதவி சுகாதார அலுவலர் பதவியில் 23.06.2006 முதல் பணிவரன் முறைப்படுத்தப்பட்டுள்ளது. அன்னார் தற்போது 23.06.2006 அன்று தேர்வுநிலை மருத்துவ அலுவலர் பதவியின் ஊதிய விகிதமான ரூ.9100–275–14050ல் அடிப்படை ஊதியம் ரூ.11300/ பெற்று வருகிறார்.

தனியர் தற்போது பெற்று வரும் தேர்வுநிலை மருத்துவ அலுவலர் பதவியின் ஊதிய விகிதமும், உதவி சுகாதார அலுவலர் ஊதிய விகிதமும், சமமாக உள்ளபடியால், அன்னார் பதவி உயர்வு பெற்ற நாளான 23.06.2006 அன்று ஒரு ஊதிய உயர்வு வழங்கப்பட்டு உதவி சுகாதார அலுவலர் ஊதிய விகிதமான ரூ.9100–275–14050இல் அடிப்படை ஊதியமாக ரூ.11575/–ஐ நிர்ணயம் செய்யப்பட வேண்டியுள்ளது.

கணக்கு அலுவலர், மண்டலம்–6 அவர்களின் 28.02.2008 நாளிட்ட குறிப்புரையில், திருமதி.இ.சரஸ்வதி, உதவி சுகாதார அலுவலர், மண்டலம்–6, அவர்களுக்கு அப்பதவியில் ரூ.11575/–ஐ 23.06.2006 முதல் ரூ.9100–275–14050 என்ற கால ஊதிய விகிதத்தில் ஊதியம் நிர்ணயம் செய்து வழங்கலாம் என கருத்துரு வழங்கப்பட்டுள்ளது.

தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் தொடரப்படவில்லையென்றும், தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. உதவி சுகாதார அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு–2ன் கீழ் வருகின்றது. இப்பதவி வகிப்பவர்களுக்கு ஊதியம் நிர்ணயம் செய்ய அனுமதிக்க மன்றம் அரசாணை (நிலை) எண்.1381, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை நாள். 03.09.1982ன்படி அதிகாரம் பெற்றுள்ளது.

எனவே, திருமதி. இ. சரஸ்வதி, உதவி சுகாதார அலுவலர், மண்டலம்–6, என்பவர் தற்போது பெற்று வரும் தேர்வு நிலை மருத்துவ அலுவலர் பதவியின் ஊதிய விகிதமும், உதவி சுகாதார அலுவலர் ஊதிய விகிதமும் சமமாக உள்ளபடியால், அன்னார் பதவி உயர்வு பெற்ற நாளான 23.06.2006 அன்று ஒரு ஊதிய உயர்வு வழங்கப்பட்டு, உதவி சுகாதார அலுவலர் ஊதிய விகிதமான ரூ.9100–275–14050இல் அடிப்படை ஊதியமாக ரூ.11575/–ஐ நிர்ணயிக்க மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.6.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

## 03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :187/2008 பொருள் எண்.79

### பணியமைப்பு

திரு.எம்.ஆர். கஜேந்திரன், மலேரியா தூர்வாரும் பணியாளர், பகுதி–15, அவர்கள் 01.04.1995 முதல் தொடர்ந்து முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக தனியருக்கு 15.04.1996 அன்று குற்றக்குறிப்பாணை வழங்கப்பட்டு விளக்கம் பெறப்பட்டது. தனியர் மீதுள்ள குற்றச்சாட்டை விசாரணை செய்ய விசாரணை அலுவலர் நியமனம் செய்ய கோப்பு மற்றும் பணிப்பதிவேடு பொதுத்துறைக்கு 12.06.96 அன்று அனுப்பப்பட்டது. ஆனால் சம்மந்தப்பட்ட கோப்பு மற்றும் பணிப்பதிவேடு இந்நாள் வரையில் மண்டலம்–5ல் திரும்பப் பெறப்படாததால் இது குறித்து ஒழுங்கு நடவடிக்கை கோப்பினை கண்டறிய பொதுத் துறைக்கு குறிப்பு அனுப்பப்பட்டது.

அதன்படி துணை ஆட்சியர்(நி) அவர்களின் 21.08.2001 நாளிட்ட குறிப்பில், மேற்கண்ட பணியாளரின் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தமாக முழுக்கோப்பும் 02.07.96 அன்று விசாரணை அலுவலர் திரு.கோமதிநாயகம், செயற்பொறியாளர், மண்டலம்–6க்கு அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து மண்டலம்–6க்கு பல நினைவூட்டுக் குறிப்புகள் அனுப்பப்பட்டது.

உதவி ஆணையர் (பொ.நி.ம.ப) அவர்களின் 17.06.05 நாளிட்ட குறிப்பில் தெரிவித்துள்ளபடி விசாரணை அலுவலர் நியமனம் செய்யப்பட்ட கோப்பினை மண்டலம்–6க்கு 27.01.96 அன்று அனுப்பப்பட்டது. 29.06.05 நாளிட்ட செயற்பொறியாளர், மண்டலம்–6 அவர்களது குறிப்பில் சம்மந்தப்பட்ட கோப்பு மண்டலம்–6ல் இல்லை என தெரிவித்துள்ளார்.

30.06.05 நாளிட்ட ஆணையர் அவர்களின் ஆணையின்படி, தனியர் மீது ஏற்படுத்தப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகளை நிலுவையில் வைத்தும், அவ்வொழுங்கு நடவடிக்கை மீதான இறுதி ஆணைகளுக்கு குந்தகமின்றியும், தனியர் தொடர்பான சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நீண்ட கால கடன் நிலுவைத் தொகை ஏதேனும் நிலுவையில் இருப்பின் அதனை அன்னாரது பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்கு உட்படுத்தி 30.06.05 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல விடுவிக்கப்பட்டதாகக் கருதி (Deemed to be Relieved) பணியிலிருந்து 30.06.05 பிற்பகல் முதல் விடுவிக்கப்பட்டார்.

மேலும் விசாரணை அலுவலர் நியமனம் வேண்டி அனுப்பப்பட்ட கோப்பினை திரும்ப பெறுவதற்கு உடனடியாகத் தேவையான நடவடிக்கையினை தொடாரமல் வெறும் நினைவூட்டுக் குறிப்புகளை மட்டும் அவ்வப்போது அனுப்பிவிட்டு தேவையற்ற முறையில் 10 வருடங்களாக காலதாமதம் ஏற்பட்டதற்கு காரணமாகிய மண்டலம்–5ன் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீதும் தனியே ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தனியர் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததை விசாரணை செய்ய அனுப்பப்பட்ட கோப்பு கிடைக்கப்பெறாததற்கு துறைகள் மற்றும் மண்டலங்களுக்கு சுற்றறிக்கை 29.09.05 அன்றும் 14.02.06 அன்று நினைவூட்டுக் குறிப்பும் அனுப்பப்பட்டு கோப்பு மண்டலம்–6ல் இல்லாததற்கான இன்மைச் சான்றிதழ் பெறப்பட்டுள்ளது.

30.06.05 அன்று வயது முதிர்வு ஓய்வில் செல்ல விடுவிக்கப்பட்டதாகக் கருதி (Deemed to be relieved) ஓய்வு பெற்ற திரு.எம்.ஆர்.கஜேந்திரன், ம.தூ.ப. பகுதி–15, அவர்களுக்கு ஓய்வுகால பணப்பயன்கள் தீர்வு செய்ய காலதாமதமாகும் சூழ்நிலையில் ஓய்வூதிய பயன்கள் வழங்க பணியாளருடன் சமகால அளவில் பணிபுரிந்தவர்களது ஆவணங்களுடன் சரிபார்த்து புதிய பணிப்பதிவேடு துவங்க ஆணையாளர் அவர்களின் ஆணை பெறப்பட்டு பணிப்பதிவேடு துவங்கப்பட்டது. தற்காலிக ஓய்வூதியம் மற்றும் தற்காலிக பணிக்கொடை வழங்கப்பட்டது.

எனவே, திரு.எம்.ஆர்.கஜேந்திரன், மலேரியா தூர்வாரும் பணியாளர், பகுதி–15, அவர்கள் 01.04.95 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை முடிவுறாத நிலையில், தனியர் ஓய்வு பெற்று விட்டதால், ஒழுங்கு நடவடிக்கையின் மீது இறுதி ஆணையும், தனியர் பணிக்கு வராத காலமான 01.04.95 முதல் பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட நாளான 30.06.05 வரையிலான என காலத்தை வரன்முறைப்படுத்த அடிப்படை விதி 18(2)ஐத் தளர்வு செய்து அரசாணை பெறவும், அரசுக்கு செயற் குறிப்பு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.5.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

மி.து.ந.க.எண்.அ1/5135/04

ஆணையாளர் அவர்களின் 10.04.2008 நாளிட்ட குறிப்பு

## 03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :188/2008 பொருள் எண்.80

### பணியமைப்பு

திரு. இ. ஹாஜாஷெரிப், கணினி இயக்குபவர் (கம்ப்யூட்டர் ஆப்ரேட்டர்) மத்திய கணக்கு குழுமம் அவர்கள் ஐக்கிய அரபு குடியரசு துபாய் நகரில் தனியார் கம்பெனியில் பணி செய்வதற்கு அனுமதியுடன் மூன்றாண்டுகளுக்கு 28.11.1996 முதல் விடுப்பு வழங்கப்பட்டது. விடுப்பு முடிந்தவுடன் மீண்டும் பணியில் சேரவில்லை. எனவே, குற்றச்சாட்டுகள் சுமத்தி விளக்கம் கோரப்பட்டது. தனியர் விளக்கம் ஏதும் சமர்ப்பிக்கவில்லை. மேலும் இரு ஆண்டுகள் விடுப்பு நீட்டிப்பு காலம் 21.11.2001 அன்று முடிவுற்றது. 22.11.2001 அன்று மீண்டும் பணியில் சேரவில்லை. எனவே தனியருக்கு குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டது. விளக்கம் சமர்ப்பிக்கவில்லை விசாரணை அலுவலர் நியமிக்கப்பட்டு தனியர் விசாரணைக்கு வராத நிலையில் ஆவணங்களின் அடிப்படையில் விசாரணை அறிக்கை நகல் தனியருக்கு அளிக்கப்பட்டது. கூடுதல் விளக்கம் ஏதும் பெறப்படவில்லை.

தனியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நிருபணம் ஆவதாக விசாரணை அலுவலரின் அறிக்கை பெறப்பட்டது. நிருப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு தண்டனையாக ஆணையர் அவர்கள் 18.02.2004 நாளிட்ட ஆணையில் தனியரை ''பணியிலிருந்து நிரந்தர நீக்கம்'' செய்ய ஆணையிட்டார்கள். அதன்படி12.05.2004 நாளிட்ட ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை, திரு.இ. ஹாஜாஷெரிப், கணினி இயக்குபவர் (கம்யூட்டர் ஆப்ரேட்டர்) மத்திய கணக்கு குழுமம் அவர்களுக்கு பதிவு அஞ்சல் ஒப்புகை அட்டையுடன் அனுப்பப்பட்டது. மேற்கண்ட செயல்முறை ஆணை தனியரது குடும்பத்தினரால் 26.05.2004 அன்று பெறப்பட்டது.

திரு. இ. ஹாஜாஷெரிப், கணினி இயக்குபவர் (கம்யூட்டர் ஆப்ரேட்டர் '' நிரந்தர பணி நீக்கம்'' செய்யப்பட்டவர்) அவர்கள் தனது 12.07.2004 நாளிட்ட தலைவர், நியமனக்குழு அவர்களுக்கு அளித்துள்ள மேல்முறையீட்டு மனுவில் தான் ஐக்கிய அரபு குடியிரசு துபாயில் தனியார் கம்பெனியில் வேலை செய்வதற்காக சென்னை மாநகராட்சியில் முன் அனுமதியும், வெளி நாடு செல்ல விடுப்பும் பெற்று 22.11.1998 முதல் மூன்று ஆண்டுகளுக்கு அனுமதிக்கப்பட்டு வெளிநாட்டில் பணியில் சேர்ந்ததாகவும், பின்னர் தனியரது வேண்டுகோளின் மீது மேலும் 2 ஆண்டுகளுக்கு விடுப்பு நீட்டிப்பு செய்து 22.11.2001 வரையில் பணிபுரிந்து வந்ததாகவும், தனியார் கம்பெனியிடம் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி அங்கு வேலையை முடித்துக் கொள்ள இயலாததால் தனியர் 22.11.2001ல் சென்னை மாநகராட்சியில் மீண்டும் பணியில் சேர இயலவில்லை என்றும், அங்கு முறைப்படி தனது பணியை முடித்துக் கொள்ள முடியாததால் துபாயிலிருந்து தனியரால் திரும்ப வரவும் முடியவில்லை என்ற காரணத்தினால் தனியருக்கு அனுமதிக்கப்பட்ட ஐந்து ஆண்டுகள் முடிந்த பின்னரும் தனியரால் பணியில் சேர முடியவில்லை எனவும், இந்த விவரங்களை தனியர் ஏற்கனவே வெளிநாட்டிலிருந்து இவ்வலுவலகத்திற்கு தெரிவித்திருந்தும் தனியர் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தி ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு 12.05.2004 நாளிட்ட ஆணையரின் செயல்முறை ஆணையில் தனியரை நிரந்தர பணி நீக்கம் செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாவும், இச்செயல்முறை ஆணையில் தனியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு தனியர் விளக்கம் அளிக்காததாகவும் நேரடி விசாரணைக்கு அழைத்தபோது ஆஜராகவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மேலும் தனியர் தான் 04.03.2002 நாளிட்ட குற்றச்சாட்டு குறிப்பு ஆணைக்கு தான் 05.04.2002 அன்று விளக்கமும், விசாரணைக்கு ஆஜராக இயலாது என்பதை தெரிவித்து மற்றொரு நாளில் விசாரணை நடத்துமாறு வேண்டுகோள் விடுத்து துபாயிலிருந்து தலைமை கணக்கு அலுவலர், மத்திய கணக்கு குழுமம் அவர்களுக்கு தபாலில் அனுப்பியிருந்ததாகவும், ஆனால் தனக்கு விசாரணைக்கு மறு தேதி எதுவும் குறிப்பிட்டு தகவல் அனுப்பாமல் தன்னை பணி நீக்கம் செய்துள்ளது ஆச்சர்யமாக உள்ளதாக தெரிவித்துள்ளார்.

தனியர் மேலும் தனக்கு இன்னும் 20 ஆண்டுகள் பணி உள்ள நிலையில் தன்னை இவ்வாறு உரிய நடைமுறைகளை பின்பற்றாமல் நிரந்தர பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளது தனக்கு அதிர்ச்சியை ஏற்படுத்துவதுடன் தனக்கு 2 பிள்ளைகள் மற்றும் மனைவியை காப்பாற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்றும், தனது பணி நீக்கத்தை ரத்து செய்து மீண்டும் தன்னை பணியில் சேர அனுமதித்தால் தனது குடும்பத்தை காப்பாற்றுவதற்கு உதவிகரமானதாக இருக்கும் என்றும் மேலும் கணினி சம்மந்தமாக வெளிநாட்டில் உயர் தொழில் நுட்பங்களில் தான் கற்று அனுபவத்தில் தேர்ந்துள்ளதால் சென்னை மாநகராட்சியில் கணினி நடைமுறைப்படுத்துதல் மிகுந்த உபயோகமாகவும் இருப்பதாவும் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் திரு. இ. ஹாஜாஷெரிப், கணினி இயக்குபவர் ( கம்யூட்டர் ஆப்ரேட்டர்) ‘‘ நிரந்தர பணி நீக்கம்’’ செய்யப்பட்டவர் அவர்களது மேல்முறையீட்டு மனு நியமனக்குழுவால் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்ட தீர்மானத்தை தீர்மான எண்.262/04 நாள் 10.08.04-ல் நிறைவேற்றியுள்ளது.

> ‘‘இம்மேல்முறையீட்டு மனு நியமனக்குழுவால் கவனமாக பரிசீலிக்கப்பட்டது. தனியரின் விளக்கம் மற்றும் கடந்த காலத்தில் தண்டனை ஏதும் பெறாமல் பணியாற்றி வந்துள்ளதையும் கருத்தில் கொண்டும், மனிதாபிமான அடிப்படையிலும் நிர்வாகம் தனியரை பணிநீக்கம் செய்து வழங்கிய தண்டனையை மாற்றியமைத்து மீண்டும் பணியில் சேர அனுமதித்து திரண்ட பயனுடன் மூன்று ஆண்டுகள் தனியரின் ஊதிய உயர்வினை நிறுத்தம் செய்து தண்டனை வழங்கவும், பணிக்கு வராத காலத்தை விதிகளின்படி வரன்முறைப்படுத்தவும் நியமனக்குழு தீர்மானித்துள்ளது.’’

எனவே, நியமனக்குழு தீர்மானத்தின்படி திரு. இ. ஹாஜாஷெரிப், கணினி இயக்குபவர் (கம்ப்யூட்டர் ஆப்ரேட்டர்) மத்திய கணக்கு குழுமம், தற்போது மின்துறை அவர்களை பணிநீக்கம் செய்து வழங்கிய தண்டனையை மாற்றியமைத்து மீண்டும் பணியில் சேர அனுமதித்தும், தண்டனையாக திரண்ட பயனுடன் மூன்று ஆண்டுகள் தனியரின் ஊதிய உயர்வினை நிறுத்தம் செய்தும், அன்னார் பணிக்கு வராத காலத்தை விதிகளின்படி வரன்முறைப்படுத்தவும் ஆணையிடப்பட்டது. இதனடிப்படையில் அன்னார் கணினி பிரிவில் 07.09.2004 முதல் பணியமர்வு செய்யப்பட்டுள்ளார். இதனால் இவர் அயல்நாட்டில் பணி ஏற்க அனுமதி அளித்த நாளிலிருந்து பணி சேர்ந்துள்ள நாள் வரை இந்நிகழ்விற்காக 7 ஆண்டுகள் 9 மாதங்கள் மற்றும் 11 நாட்கள் விடுப்பில் இருந்துள்ளார். அயல்நாட்டில் பணிபுரிவதற்காக அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச விடுப்புக்காலம் 5 ஆண்டுகள் ஆகும் இந்நிகழ்வில் அன்னார் தமிழ்நாடு விடுப்பு விதிகள் 1933ன்படி அடிப்படை விதி 18(2) மீறியுள்ளதால் அரசின் தளர்வாணை பெறப்படல் வேண்டும்.

எனவே, திரு. இ. ஹாஜாஷெரிப், கணினி இயக்குபவர், கடந்த 28.11.1996 முதல் 06.09.2004 வரையில் அயல் நாட்டில் பணியிலிருந்த காலம் வரையறுக்கப்பட்ட 5 ஆண்டிற்கு மேலாக, மேலும் 2 ஆண்டுகள் 9 மாதங்கள், 11 நாட்கள் நீட்டிக்கப்பட்டதால் அடிப்படை விதி 18(3)ன்படி அரசின் தளர்வானை பெறுவதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மி.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ-18. மன்றச் செயலாளர்

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :189/2008 பொருள் எண்.81

**ஓமியோபதி மருத்துவமனைகளின் தற்காலிக பணியிடங்களை நிரந்தரமாக தக்கவைத்துக்கொள்ள அனுமதி**

அரசு ஆணை (எம்.எஸ்.) எண்.1015 சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, நாள் 12.5.1982 மற்றும் அரசு ஆணை (எம்.எஸ்) எண்.62, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை, நாள் 13.6.1985ன்படி முறையே வடசென்னை மற்றும் தென் சென்னையில் அமைந்துள்ள ஓமியோபதி மருந்தகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட கீழ்கண்ட பணியிடங்களுக்கு 01.07.2003 முதல் 31.3.2006 வரை தற்காலிக பணிநீட்டிப்பு அரசாணை(வாலாயம்) எண்.180, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் மா.ந.3 துறை, நாள் 16.05.2005ன்படி மூலம் வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அரசாணை வாலாயம் எண்.167 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.14.09.2007ல் இப்பதவிகளை 31.03.2008 வரை நீட்டிக்க அரசு அனுமதி அளித்துள்ளது.

வடசென்னை ஓமியோபதி மருந்தகம்

| வ. எண். | பதவியின் பெயர் | எண்ணிக்கை | காலமுறை ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 1. | மருத்துவ அலுவலர் (ஓமியோபதி) ( Medical Officer ) | 01 | ரூ.8000–275–13500 |
| 2. | அலுவலக உதவியாளர் (Hospital Servant) | 01 | ரூ.2550–55–2660–60–3200 |

தென்சென்னை ஓமியோபதி மருந்தகம்

| | | | |
|---|---|---|---|
| 1. | மருத்துவ அலுவலர் (ஓமியோபதி) (Medical Officer ) | 1 | ரூ.8000–275–13500 |
| 2. | மருந்தாளுநர் (ஓமியோபதி) (Pharmacist) | 1 | ரூ.4500–125–7000 |
| 3. | அலுவலக உதவியாளர் (Hospital Servant) | 1 | ரூ.2550–55–2660–60–3200 |

கடைசியாக தொடர் நீட்டிப்பு செய்த அரசு ஆணையில் மேற்காணும் பணியிடங்களை நிரந்தரமாக்குவது குறித்து பரிசீலனைகளுக்குப் பின்னர் வடசென்னை மற்றும் தென்சென்னையில் அமைந்துள்ள மாநகராட்சி ஓமியோபதி மருந்தகங்களில் உள்ள தற்காலிக பணியிடங்களை 31.03.2008 வரையிலோ அல்லது தொழில்நுட்பக்குழுவின் அறிக்கை பெறும் வரையிலோ இதில் எது முன்னரோ அதுவரையில் தற்காலிக பணிநீட்டிப்பு வழங்கி அரசு ஆணை வழங்கியுள்ளது.

இதன் பொருட்டு தெரிவிப்பது ஓமியோபதி மருந்துவ சிகிச்சைகள் பக்க விளைவுகள் ஏதும் இல்லாததாலும், மருந்தினை கொடுப்பது எளிதாக இருப்பதாலும், இம் மருந்திற்க்காக உணவுக்கட்டுப்பாடு ஏதும் இல்லாததாலும், சில நாட்பட்ட நோய்களும் பூரண குணமாவதாலும், மேற்கண்ட ஓமியோபதி மருந்தகங்களுக்கு சிகிச்சைக்காக பொது மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாக இருப்பதாலும், ஆங்கில மருத்துவத்திலுள்ள குறைபாடுகள் இதில் இல்லாமல் இருப்பதாலும், ஏழை, எளியோர்கள் சிகிச்சை பெறுவதாலும் மற்ற மருந்துகளுக்கு ஆகும் செலவைவிட ஓமியோபதி மருந்ததுகளுக்கு ஆகும் செலவு குறைவாக உள்ளதாலும், மேற்கண்ட மருந்தகங்களை இயக்குவது அத்தியாவசியமாகிறது. மேலும் கடந்த 5 ஆண்டுகளில் வடசென்னை ஓமியோபதி மருத்துவமனையில் ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக 31,000 பேரும், தென்சென்னை ஓமியோபதி மருத்துவமனையில் சராசரியாக 29,000க்கும் மேலான புறநோயாளிகள் சிகிச்சைப் பெற்றுள்ளனர் எனவே, இம்மருந்தகங்களில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்கள் மற்றும் இதர அலுவலர்களின் பணி இன்றியமையாத ஒன்றாக இருப்பதாலும் மேலே குறிப்பிட்டுள்ள பணியிடங்களை 1.4.2008க்குப் பிறகு நிரந்தரமாக தக்க வைத்துக்கொள்வது அவசியமாகிறது.

**சு.து.ந.க.எண்.சி1/1508/2002**

மேலும், தொழில் நுட்பக்குழு சென்னை மாநகராட்சி முன்னால் இணை ஆணையாளர் (பணிகள்) அவர்களின் தலைமையில் 16.8.2004 அன்று கூடியது. இத்தொழில் நுட்பக்குழு கூட்டத்தின் தொடக்கத்திலேயே நிதித்துறையின் துணை செயலாளர் அவர்கள் தற்காலிக பணியிடங்களை நிரந்தரம் செய்ய முடிவெடுக்கும் முன்னர் சென்னை மாநகராட்சியில் நிரந்தரம் செய்யப்பட்ட பணியிடங்களுடன் தற்காலிக பணியிடங்களையும் அப்பணியிடங்களின் அவசியத்தையும் ஒப்பிட்டு பார்த்து பின்னர் முடிவெடுக்க இயலும் என்றும், மேலும் அனைத்து துறைகளிலும் துறைத்தலைவர்கள் தங்கள் துறைகளிலுள்ள நிரந்தரப்பணியிடங்கள் மற்றும் தற்காலிக பணியிடங்கள் ஆகியவற்றின் பணித்தன்மையை ஆய்வு செய்து தற்காலிக பணியிடங்களை நிரந்தரம் செய்வதற்கான நியாயமான அவசியத்தின் அறிக்கையை அளித்த பின்னர் கூட்டலாம் என்று தெரிவித்ததை தொடர்ந்து, அனைத்து துறைத்தலைவர்களுக்கும் இது குறித்து அறிக்கை அனுப்ப கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். அதன் மீதான நடவடிக்கை தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் மீதான முடிவுகள் பெற கால தாமதம் ஆகும். எனவே, மேற்குறிப்பிட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் சென்னை மாநகராட்சியில் வடசென்னை மற்றும் தென்சென்னை ஓமியோபதி மருந்தகங்களுக்கு தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்டு 31.3.2008 வரை தொடர அனுமதிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட பணியிடங்களை 1.4.2008க்குப் பிறகு நிரந்தரமாக தக்கவைத்துக் கொள்ள அரசுக்கு பிரேரணைகள் அனுப்பி ஆணை பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மா.கு.ந(ம)ம.கு.ந.எண்.எப்4/3849/2007**
**ஆணையாளர் அவர்களின் 24.03.2008 நாளிட்ட குறிப்பு**

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :190/2008 பொருள் எண்.82

**பணியமைப்பு– வெளிநாடு செல்ல தடையின்மை சான்று வழங்கியதற்கு பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சி மாவட்ட குடும்ப நலத்துறை, வடபழனி நலவாழ்வு மையத்தில் மருத்துவ அலுவலராக பணிபுரியும் டாக்டர். திருமதி. சி.எம்.பானுமதி, என்பவர் மலேசியா நாட்டில் இருக்கும் தன் கணவரை காண்பதற்காக பயணம் மேற்கொள்ளும் பொருட்டு தடையின்மை சான்று அளிக்குமாறு வேண்டியுள்ளார்.

தனியரிடம் 07.02.2003 அன்று கடவுசீட்டு எவ்வாறு அலுவலக அனுமதியின்றி புதுப்பிக்கப்பட்டது என விளக்கம் கேட்கப்பட்டது. தனியர் கடவு சீட்டு புதுப்பிப்பதற்கு தலைமை அலுவலகத்தில் அனுமதி பெறப்பட வேண்டும் என்பது குறித்து தெரியாத காரணத்தினால் புதுப்பிக்கப்பட்டதாகவும் இந்த செயலுக்கு தன்னை மன்னிக்குமாறு விளக்க கடிதம் கொடுத்துள்ளார்கள்.

தனியர் சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் 23.08.84 பிற்பகல் முதல் மருத்துவ அலுவலராக பணியில் சேர்ந்துள்ளார். அரசாணை எண்.806 சுகாதாரம் (ம) குடும்ப நலத்துறை நாள்.30.05.91ன்படி தனியரது பணி 23.08.84 முதல் வரன்முறைப்படுத்தப்பட்டு 07.09.1986 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. தனியர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை. சென்னை மாநகராட்சி, விழிப்பு குழுமத்திலும் விசாரணை ஏதும் இல்லை என்ற அறிக்கை பெறப்பட்டுள்ளது. காவல்துறை கண்காணிப்பாளர் பாதுகாப்பு பிரிவு, குற்ற புலனாய்வு அவர்களிடமிருந்து வெளிநாடு செல்ல ஆட்சேபணை இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது. அரசு பணியாளர்கள் அயல்நாடு பயணம் மேற்கொள்ள அனுமதி வழங்க கடைபிடித்தொழுகும் நிபந்தனைகளை கடைபிடித்து இவருக்கு தடையின்மை சான்றிதழ் வழங்கலாம் என பரிந்துரைக்கப்படுகிறது. சென்னை மாநகராட்சி பணியமைப்பில் மருத்துவ அலுவலர் பதவி வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் தனியர் வெளிநாடு செல்ல மன்றத்தின் அனுமதி பெறவேண்டும்.

சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் வெளிநாடு செல்வதற்கு அரசாணை எண்.288, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள்.04.12.97ல் குறிப்பிட்டுள்ள கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.

1. வெளிநாடு செல்லவிருக்கும் இவர் வெளிநாட்டில் தங்கும்போது வேலை வாய்ப்பை ஏற்கவோ அல்லது பயிற்சியிலோ மற்றும் படிப்பிலோ கலந்து கொள்ள கூடாது.
2. வெளிநாட்டில் தங்கும்போது வியாபாரத்திலோ அல்லது பணி நியமனத்திற்காகவோ இது போன்ற சம்பந்தப்பட்ட வேலைகளில் ஈடுபடக்கூடாது.
3. வெளிநாடு செல்லும் பயணச்செலவு உட்பட எந்தவிதமான செலவுகளையும் சென்னை மாநகராட்சி ஏற்காது.
4. அவர் வெளிநாட்டில் இருக்கும் போது சென்னை மாநகராட்சியின் பணியைத் துறக்க விண்ணப்பிக்கக்கூடாது. மீறி அவர் பணி துறக்க விண்ணப்பித்தால் எக்காரணம் கொண்டும் அக்கோரிக்கை ஏற்கப்படமாட்டாது.
5. வெளிநாடு செல்வதற்கு முன்பு தனியருக்கு தகுதியுள்ள விடுப்புகள் துய்க்க அனுமதி வேண்டி விண்ணப்பித்து அவ்விடுப்பு அனுமதி அளித்த பிறகே அவர் வெளிநாடு செல்ல வேண்டும்.
6. வழங்கப்படும் தடையின்மை சான்றிதழ் மூலம் பெற்ற கடவுச்சீட்டு பயன்படுத்தி முறையான முன்னனுமதியின்றி அடுத்த வெளிநாடு பயணத்திற்கு பயன்படுத்தக்கூடாது.
7. இவ்வாணை வழங்கப்பட்ட நாளிலிருந்து ஆறு மாதங்களுக்கு மட்டும் செல்லத்தக்கது.
8. இத்தடையின்மை சான்று தற்போது மலேசியா நாட்டிற்கு செல்லவிருக்கும் பயணத்திற்கு மட்டுமே பொருந்தும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தனியரின் பயணச் செலவினை தன் கணவர் ஏற்றுக்கொள்வதாக தெரிவித்துள்ளார். அதற்குரிய இசைவுக் கடிதம் பெறப்பட்டுள்ளது.

<u>மா.கு.ந(ம)ம.கு.ந.எண்.எப்4/3849/2007</u>

காலதாமத்தினை தவிர்க்கும் பொருட்டு மேற்கண்ட நிபந்தனைகளுடன் டாக்டர் திருமதி. சி.எம்.பானுமதி, மருத்துவ அலுவலர், மலேசியா நாட்டில் வசிக்கும் தனது கணவரை காண பயணம் செய்வதற்கு மன்றத்தின் பின்னேற்புகுட்பட்டு தடையின்மை சான்றிதழ் இவ்வலுவலக 04.02.2008 தேதியிட்ட செயல்முறை ஆணை வழங்கப்பட்டதற்கும் 07.02.2003 அன்று தனியர் கடவுச்சீட்டு புதுப்பித்ததற்கும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும் நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்புஅனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மா.கு.ந(ம)ம.கு.ந.எண்.எப்4/4314/2007**

**ஆணையாளர் அவர்களின் 24.03.2008 நாளிட்ட குறிப்பு**

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :191/2008 பொருள் எண்.83

**மருத்துவ அலுவலர் பணி நியமனம் பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் தற்பொழுது மருத்துவ அலுவலர் பதவிக்கான 25 பணியிடங்கள் காலியாக உள்ளது.

இப்பதவியினை வரையறுக்கப்பட்ட பணிவிதிகளின்படி (அரசாணை எண்.161 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.28.08.98) நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட வேண்டும். அதன் விவரம் பின்வருமாறு.

| வகுப்பு | பதவியின் பெயர் | காலமுறை ஊதிய விகிதம் | நியமன முறை வயது வரம்பு | கல்வித் தகுதி |
|---|---|---|---|---|
| 2 | மருத்துவ அலுவலர்/ உதவி அறுவையாளர் | ரூ.8000–275–13500 | நேரடி நியமனம் வயது 35க்குட் பட்டவராக இருக்க வேண்டும் | பல்கலைகழக மான்யக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலை கழகத்தால் வழங்கப்பட்ட மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சையில் பட்டம் (MBBS) மகப்பேற்றில் பட்ட மேற்படிப்பு (அ) பட்டையம் விரும்ப தக்கது. |

மருத்துவ அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி, பணியமைப்பில் வகுப்பு–2ன் கீழ் வகைப்படுத்தப் பட்டுள்ளதால் சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919, 85 (3) (b)ன் படி அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு பணிநியமனம் செய்ய மன்றம் அதிகாரம் பெற்றுள்ளது.

அரசாணை எண். 65, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை 30.03.2007ன் படி வேலை வாய்ப்பு அலுவலத்திலிருந்து பெறப்படும் பட்டியலிலிருந்து 1 : 1 என்ற விகிதாச்சார அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட வேண்டும்.

அரசாணை எண் 98 பணியாளர் மற்றும் நிர்வாக சீர் திருத்தத்துறை நாள் 17.7.06ன் படி பணி நியமனத்திற்கு வயது வரம்பினை மேலும் 5 ஆண்டு காலத்திற்கு நீட்டித்து அரசு தளர்வாணை வழங்கியுள்ளது.

மேற்படி பணிவிதிகள் மற்றும் அரசாணைகளின் அடிப்படையில் வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பணி மூப்பு / இன சுழற்சியின் படி தகுதி வாய்ந்த நபர் பட்டியல். பெறப்பட்டு நேர்காணலுக்கு கலந்து கொண்டவர்கள் விவரம் பின்வருமாறு:–

| வ. எண். | மருத்துவர் பெயர் மற்றும் வேலை வாய்ப்பு அலுவலக பதிவு எண். | இனம் | படிப்பு | தாய்மொழி தமிழ் / தமிழ் மொழி கல்வி தேர்ச்சி விவரம் | தற்போது வயது | தேர்ந் தெடுக்கப் பட்டவர்கள் |
|---|---|---|---|---|---|---|
| 01. | **K. கற்பகம்**<br>2001 F 11704 SF 04.09.2001 | S.C | M.B.B.S | தாய்மொழி தமிழ் / தமிழ் மொழி தேர்ச்சி | 37 | ஆம் |
| 02. | **E. ஷீபா**<br>2001 F 124228 SF 10.09.2001 | S.C | M.B.B.S | தாய்மொழி தமிழ் / தமிழ் மொழி தேர்ச்சி | 32 | ஆம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 03. | **R. பூங்குழலி** 2001 F 12520 SF 12.09.2001 | S.C | M.B.B.S | தாய்மொழி தமிழ் / தமிழ் மொழி தேர்ச்சி | 36 | ஆம் |
| 04. | **M. சசிகலா** 2001 F 21054 SF 28.12.2001 | M.BC | M.B.B.S | தாய்மொழி தமிழ் / தமிழ் மொழி தேர்ச்சி | 32 | ஆம் |
| 05. | **B. கௌரி ராஜேஸ்வரி** 1997 F 09764 SF 10.11.1997 | B.C | M.B.B.S | தாய்மொழி தெலுங்கு / தமிழ் மொழி தேர்ச்சி | 33 | ஆம் |
| 06. | **D. ஞான சௌந்தரி** 2001 F 11540 SF 03.09.2001 | B.C | M.B.B.S | தாய்மொழி தமிழ் / தமிழ் மொழி தேர்ச்சி | 36 | இல்லை |
| 07. | **N. கிருஷ்ணவேணி** 2001 F 11544 SF 03.09.2001 | B.C | M.B.B.S | தாய்மொழி தமிழ் / தமிழ் மொழி தேர்ச்சி | 35 | இல்லை |
| 08. | **N. காயத்திரி** 2001 F 15490 SF 05.10.2001 | B.C | M.B.B.S | தாய்மொழி தமிழ் / தமிழ் மொழி தேர்ச்சி | 29 | ஆம் |
| 09. | **K. சந்திரா** 2001 F 18376 SF 24.12.2001 | F.C | M.B.B.S | தாய்மொழி தமிழ் / தமிழ் மொழி தேர்ச்சி | 30 | ஆம் |
| 10. | **A. சோபியா சகாயராணி** 2001 F 20804 SF 24.12.2001 | B.C | M.B.B.S | தாய்மொழி தமிழ் / தமிழ் மொழி தேர்ச்சி | 32 | ஆம் |
| 11. | S. சாந்தி மீனா 2002 F 00268 SF 07.01.2002 | B.C. | M.B.B.S | தாய்மொழி தமிழ் / தமிழ் மொழி தேர்ச்சி | 41 | இல்லை |
| 12 | K. வெண்ணிலா செல்வி 2002 F 00724 SF 18.01.2002 | S.C. | M.B.B.S | தாய்மொழி தமிழ் / தமிழ் மொழி தேர்ச்சி | 39 | ஆம் |

மேற்படி பட்டியலில் வரிசை எண்.6ல் உள்ள டாக்டர்.டி.ஞானசௌந்தரி மற்றும் வரிசை எண்.11ல் உள்ள டாக்டர் திருமதி.எஸ்.சாந்தி மீனா ஆகிய இருவர் எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றதற்கு அசல் சான்றிதழுக்கு (Original Certificat) பதில் Provisinal Certificate தற்காலிக சான்றிதழ் 17.12.2007 அன்று நடந்த நேர்காணலில் காண்பித்துள்ளதால் அவர்கள் பெயர்கள் ஒத்தி வைக்கப்பட்டது. மேலும் ஒருவார காலத்திற்குள் அசல் சான்றிதழ் சமர்ப்பிக்குமாறு மேற்கூறப்பட்டவர்களுக்கு கடிதம் மூலம் தகவல் அனுப்பப்பட்டு இதுவரை உரிய அசல் சான்றுகள் சமர்ப்பிக்காத காரணத்தினால் இவர்களது பெயர் பரிசீலிக்க இயலாத நிலை உள்ளது.

மேற்படி பட்டியல் வரிசை எண்.1, 3, 12 உள்ள நபர்கள் முறையே கே.கற்பகம், ஆர்.பூங்குழலி, கே.வெண்ணிலாசெல்வி, ஆகிய மூவர் வரையறுக்கப்பட்ட பணி விதிகளின்படி 35 வயது கடந்துள்ள போதிலும் அரசாணை எண்.98, பணியாளர் மற்றும் நகராட்சி நிர்வாக சீர்த்திருத்தத்துறை, நாள்.17.07.2006ன்படி வயது வரம்பு மேலும் 5 ஆண்டுகளுக்கு நீட்டித்து தளர்வாணை வழங்கியுள்ளதால் இவர்களுக்கு வயது வரம்பு பொருந்தாது.

இன சுழற்சி அடிப்படையில் கீழ்கண்ட வகையில் பணி நியமன ஆணை இரண்டு கட்டங்களாக வழங்கப்பட்ட நபர்களின் விவரம்

<u>மா.கு.ந(ம)ம.கு.ந.எண்.எப்4/4314/2007</u>

1) ஆணையர் அவர்களின் 20.12.2007 நாளிட்ட செயல்முறை ஆணை மா.கு.ந.(ம)ம.கு.ந. எண்.எப்4/4314/2007.

| வ. எண். | மருத்துவர் பெயர் மற்றும் வேலை வாய்ப்பு அலுவலக பதிவு எண். | இனம் | படிப்பு | தாய்மொழி தமிழ் / தமிழ் மொழி கல்வி தேர்ச்சி விவரம் | தற்போது வயது | தேர்ந் தெடுக்கப் பட்டவர்கள் |
|---|---|---|---|---|---|---|
| 01. | B. கௌரி ராஜேஸ்வரி 1997 F 09764 SF 10.11.1997 | B.C | M.B.B.S | தாய்மொழி தெலுங்கு / தமிழ் மொழி தேர்ச்சி | 33 | ஆம் |
| 02. | K. சந்திரா 2001 F 18376 SF 24.12.2001 | F.C | M.B.B.S | தாய்மொழி தமிழ் / தமிழ் மொழி தேர்ச்சி | 30 | ஆம் |
| 03. | M. சசிகலா 2001 F 21054 SF 28.12.2001 | M.BC | M.B.B.S | தாய்மொழி தமிழ் / தமிழ் மொழி தேர்ச்சி | 32 | ஆம் |
| 04. | N. கிருஷ்ணவேணி 2001 F 11544 SF 03.09.2001 | B.C | M.B.B.S | தாய்மொழி தமிழ் / தமிழ் மொழி தேர்ச்சி | 35 | ஆம் |
| 05. | A. சோபியா சகாயராணி 2001 F 20804 SF 24.12.2001 | B.C | M.B.B.S | தாய்மொழி தமிழ் / தமிழ் மொழி தேர்ச்சி | 32 | ஆம் |
| 06. | K. கற்பகம் 2001 F 11704 SF 04.09.2001 | S.C | M.B.B.S | தாய்மொழி தமிழ் / தமிழ் மொழி தேர்ச்சி | 37 | ஆம் |
| 07. | K. வெண்ணிலா செல்வி 2002 F 00724 SF 18.01.2002 | S.C. | M.B.B.S | தாய்மொழி தமிழ் / தமிழ் மொழி தேர்ச்சி | 39 | ஆம் |
| 08. | E. ஷீபா 2001 F 12428 SF 10.09.2001 | S.C | M.B.B.S | தாய்மொழி தமிழ் / தமிழ் மொழி தேர்ச்சி | 32 | ஆம் |
| 09. | R. பூங்குழலி 2001 F 12520 SF 12.09.2001 | S.C | M.B.B.S | தாய்மொழி தமிழ் / தமிழ் மொழி தேர்ச்சி | 36 | ஆம் |

2) ஆணையர் அவர்களின் 08.02.2008 நாளிட்ட செயல்முறை ஆணை மா.கு.ந.(ம)ம.கு.ந. எண்.எப்4/4314/2007.

| வ. எண். | மருத்துவர் பெயர் மற்றும் வேலை வாய்ப்பு அலுவலக பதிவு எண். | இனம் | படிப்பு | தாய்மொழி தமிழ் / தமிழ் மொழி கல்வி தேர்ச்சி விவரம் | தற்போது வயது | தேர்ந் தெடுக்கப் பட்டவர்கள் |
|---|---|---|---|---|---|---|
| 01. | திருமதி.N. காயத்திரி 2001 F 15490 SF 05.10.2001 | B.C | M.B.B.S | தாய்மொழி தமிழ் / தமிழ் மொழி தேர்ச்சி | 29 | ஆம் |

**மா.கு.ந(ம)ம.கு.ந.எண்.எப்4/4314/2007**

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் தற்போது காலியாக உள்ள மருத்துவ அலுவலர் பதவிக்கான காலியிடங்களில் மேற்படி திருத்தப்பட்ட பட்டியலில் இடம் பெற்றுள்ள 10 நபர்களுக்கு அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு தற்காலிகமாக மருத்துவ அலுவலராக ரூ.8000–275–13500 என்ற காலமுறை ஊதிய விகிதம் மற்ற இதர படிகளுடன் தகுதிகாண் பருவம் காலத்திற்குள் தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் நடத்தப்படும் செயல் அலுவலருக்கான கணக்கு தேர்ச்சி மற்றும் மருத்துவ தொகுப்பில் தேர்ச்சி பெறவேண்டும் என்றும், மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டும், பணி நியமனம் செய்ததற்கு நியமனக்குழு மூலம் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்புஅனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**சு.து.ந.க.எண்.சி1/7532/06**
**ஆணையாளர் அவர்களின் 24.03.2008 நாளிட்ட குறிப்பு**

## 03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :192/2008 பொருள் எண்.84

### மருத்துவ அலுவலர் பணி நியமனத்திற்கு பின்னேற்பு அனுமதி

சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறையில் மருத்துவ அலுவலர் பதவிக்கான ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை 94 ஆகும். இவற்றில் காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை 31 ஆகும். மருத்துவ அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு 2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் இப்பதவி சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919 துணை விதி 85 (3) (பி)ன்படி அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு மன்றம் நியமனம் செய்யும் அதிகாரம் பெற்றுள்ளது.

சென்னை மாநகராட்சி பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ பணிவிதிகள் 1998ன்படி மருத்துவ அலுவலர் (அலோபதி) பதவியினை நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படவேண்டும். இப்பதவிக்கான காலமுறை ஊதிய விகிதம் ரூ.8000–275–13500 கல்வித்தகுதி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட எம்.பி.பி.எஸ். பட்டம் மற்றும் தமிழ் நாடு மருத்துவ அவையில் பதிவு செய்திருக்க வேண்டும்

அரசாணை எண்.57 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.13.02.2007ன்படி காலிப்பணியிடங்களை நிரப்ப அரசாணை எண்.85 பணியாளர்கள் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை நாள்.06.05.2000ல் குறிப்பிட்டுள்ள வழிமுறைகளின்படி இன சுழற்சி பின்பற்றப்பட்டு அரசாணை எண்.65 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (N2) துறை நாள்.30.03.2007ல் தெரிவித்துள்ளபடி வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பட்டியல் பெறப்பட்டு 07 மருத்துவ அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டனர். மீதமுள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப 18 நபர்கள் அடங்கிய பட்டியல் பெறப்பட்டு 07.11.07 அன்று நேர்காணலுக்கு அழைக்கப்பட்டு சான்றிதழ் சரிபார்ப்பிற்கு பின்னர் கீழ்கண்ட நபர்கள் மருத்துவ அலுவலர் பணி நியமனம் பெற தகுதியுடையவர்கள் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

| வ. எண் | வேலை வாய்ப்பு அலுவலகத்தின் பதிவு எண் | பெயர் மற்றும் விலாசம் | பிறந்த தேதி மற்றும் வயது | இன சுழற்சி |
|---|---|---|---|---|
| 1 | 2000 M 06282 SF 09.06.2000 | C. முரளிகாந்த் த/பெ. செல்லப்பன் நெ.3, கங்கா நகர், கோடம்பாக்கம், சென்னை–24 | 18.06.1967 (40 years) | Backward Caste |
| 2 | 2001 F 11349 SF 31.08.2001 | K. வசந்தா, நெ.43, நாரங்கி பிளாட்ஸ், கோவிந்தன் ரோடு, சென்னை–33 | 06.06.1976 (31 years) | Backward Caste |
| 3 | 2000 M 11480 SF 19.07.2000 | N.இளஞ்செழியன், நெ.52, திருவள்ளுவர் நகர், S.A.கோயில் தெரு, V.O.C.நகர் தண்டையார்பேட்டை, சென்னை–81 | 30.07.1975 (32 years) | Backward Caste |
| 4 | 2000 M 09343 SF 01.08.2000 | K. மகேஷ், 1055, 18வது சென்ட்ரல் கிராஸ் ரோடு, M.K.B.நகர், கணேஷ் ப்ரியா, சென்னை–39 | 14.08.1976 (31 years) | Scheduled Caste |
| 5 | Ex – Service man Exipkf 2005 M 0038 SF 08.03.2005 | C.R.V. நரசிம்மலு, 131/1 பாரதி காலனி, திருமங்கலம், அண்ணாநகர், சென்னை–40 | 29.05.1972 (36 years) | Backward Caste |
| 6 | 2006 F 13595 SF 20.06.2006 | J. லாவன்யா, 131/1 பாரதி காலனி, அண்ணாநகர் மேற்கு சென்னை–40 | 07.09.1974 (33 years) | Backward Caste |

இவர்களில் வ.எண்.5, 6லுள்ள டாக்டர். C.R.V. நரசிம்மலு, மற்றும் டாக்டர். J. லாவன்யா, ஆகியோர் பணியில் சேர கால அவகாசம் கோரியிருந்ததாலும் சென்னை மாநகராட்சி மருந்தகங்களில் மருத்துவர்கள் பற்றாக் குறையால் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டும் வரிசை எண். 1 முதல் 4 வரை குறிப்பிட்டுள்ள நபர்களுக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்கு உட்பட்டும் அரசின் உறுதியாக்கத்திற்கு உட்பட்டும் மருத்துவ அலுவலர்களாக 13.11.2007 மற்றும் 20.11.07 நாளிட்டு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன. இவர்கள் பணியில் சேர்ந்த நாள் விவரம் பின்வருமாறு.

**சு.து.ந.க.எண்.சி1/7532/06**

1. டாக்டர். முரளிகாந்த் 16.11.2007 பிற்பகல்
2. டாக்டர் வசந்தா 15.11.2007 முற்பகல்
3. டாக்டர். இளங்செழியன் 03.12.2007 முற்பகல்
4. டாக்டர். கே. மகேஷ் 16.11.2007 முற்பகல்

இவர்களுள் வரிசை எண்.4ல் கண்டுள்ள மருத்துவ அலுவலர் 19.11.2007 நாளிட்ட தனது கடிதத்தின் மூலம் பணி துறப்புத் செய்துள்ளார். பணியில் சேர கால அவகாசம் கோரிய டாக்டர். C.R.V. நரசிம்மலு, மற்றும் டாக்டர். J. லாவன்யா, ஆகியோருக்கும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டும் மருத்துவ அலவலர்களாக 06.02.2007 நாளிட்டு பணிநியமன ஆணை வழங்கப்பட்டது. இவர்கள் இருவரும் 11.02.2008 முற்பகலில் பணியில் சேர்ந்துள்ளனர்.

சென்னை மாநகராட்சியிலுள்ள மருந்தகங்களில் மருத்துவர்கள் பற்றாக்குறை உள்ளதால் மருத்துவ அலுவலர்களின் சேவையின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு டாக்டர்கள் 1. முரளிகாந்த் 2.கே.வசந்தா, 3. என். இளஞ்செழியன், 4. C.R.V. நரசிம்மலு, 5. J. லாவன்யா, ஆகியோரை ரூ.8000–275–13500 என்ற ஊதிய விகிதத்தில் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்கு உட்பட்டும் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டும் பணி நியமன ஆணை வழங்கியமைக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பும் இப்பணி நியமனங்களுக்கு அரசின் உறுதியாக்கம் பெறவும் அனுமதி கோரப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்புஅனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(சு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**சு.து.ந.க.எண்.சி1/7532/2006**

**ஆணையாளர் அவர்களின் 24.03.2008 நாளிட்ட குறிப்பு**

## 03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :193/2008 பொருள் எண்.85

### மருத்துவ அலுவலர் பணி நியமனத்திற்கு பின்னேற்பு அனுமதி

சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறையில் மருத்துவ அலுவலர் பதவிக்கான காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை 01.01.2007 அன்று 31 ஆகும். மருத்துவ அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு 2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் இப்பதவி சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919 துணை விதி 85 (3) (பி)ன்படி அரசின் உறுதியாக்கத்திற்கு உட்பட்டு நியமனம் செய்யும் அதிகாரம் மன்றம் பெற்றுள்ளது.

சென்னை மாநகராட்சி பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ பணிவிதிகள் 1998ன்படி மருத்துவ அலுவலர் (அலோபதி) பதவியினை நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படவேண்டும் இப்பதவிக்கான காலமுறை ஊதிய விகிதம் ரூ.8000–275–13500 கல்வித்தகுதி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட எம்.பி.பி.எஸ். பட்டம் மற்றும் தமிழ் நாடு மருத்துவ அவையில் பதிவு செய்திருக்க வேண்டும்

அரசாணை எண்.57 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.13.02.2007ன்படி 2006–2007ம் ஆண்டிற்கான 50 விழுக்காடு காலிப்பணியிடங்களை நிரப்ப அரசாணை எண்.85 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை நாள்.06.05.2000ல் குறிப்பிட்டுள்ள வழிமுறைகளின்படி இன சுழற்சி பின்பற்றப்பட்டு அரசாணை எண்.65 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (N2) துறை நாள்.30.03.2007ல் தெரிவித்துள்ளபடி ஒரு காலிப்பணியிடத்திற்கு ஒரு நபர் என்ற விகிதாசார அடிப்படையில் மருத்துவ அலுவலர் காலிப்பணியிடங்களை நிரப்ப மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பட்டியல் பெறப்பட்டு 10 மருத்துவ அலுவலர்கள் ஏற்கனவே பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் 3 மருத்துவ அலுவலர்களை பணிநியமனம் செய்ய கோப்பு தனியே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள காலிப்பணியிடங்களை நிரப்ப 15 நபர்கள் அடங்கிய பட்டியல் பெறப்பட்டு நேர்காணலுக்காக அழைக்கப்பட்டனர். அவர்களுள் கீழ்கண்ட 8 நபர்கள் மட்டுமே ஆஜரானார்கள்.

| Sl.No | Registration Number | Name and Address | Date of Birth | Community |
|---|---|---|---|---|
| 1 | 2001 M 10347 SF 09.08.2001 | S. Kanthavelu, Old 25. New.No.6, 7th Street, Kacipuram, ‘ B ‘ Block, Royapuram, Chennai-13 | 14.10.1976 (31 years) | Scheduled Caste |
| 2 | 2001 M 10671 SF 13.08.2001 | Kirubashanker, 44/957 Sathyamoorthy Nagar, Vysarpadi Chennai-39 | 07.07.1975 (32 years) | Scheduled Caste |
| 3 | 2000 M 10810 SF 17.08.2000 | A.S. Rajaguru, 4, Presanna Vinayakar Koil Street, II Lane, Mylai, Chennai-4 | 27.09.1976 (31 years) | Backward Caste |
| 4 | 2001 M 00802 SF 22.01.2001 | B. Vimalakaran AF2 Swagath No.43 Pondichery Road, Kottur, Ch. | 16.11.1978 (29 years) | Backward Caste |
| 5 | 2001 M 02112 SF 19.12.2001 | V.C. Swerna Saravanan 16/9 Veerapandian, 1st Street, Choolaimedu, Chennai-94 | 04.08.1976 (31 years) | Backward Caste |
| 6 | 2001 M 02539 SF 01.03.2001 | S. Muthamil Selvan, 53, Flat ‘ E’ Thiruvalluvar Street, Postal Audit Colony, Saligramam Chennai-92 | 15.05.1978 (29 years) | Backward Caste |
| 7 | 2001 M 2540 SF 01.03.2001 | S. Elaya Raja, 114 Godaveri Street, Chinmaya Nagar, Stage I, Chennai-92 | 17.07.1978 (29 years) | Backward Caste |
| 8 | 2001 M 10080 SF 06.08.2001 | P. Suresh, Plot B. 60, 70 Feet Road, Periyar Nagar, Agaram, Chennai-82 | 11.06.1977 (30 years) | Backward Caste |

**சு.து.ந.க.எண்.சி1/7532/2006**

சுகாதாரத்துறையில் போதிய மருத்துவர்கள் இல்லாததால் மருந்தகங்களில் சிகிச்சைக்கு வரும் ஏழை எளிய மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். நீண்ட காலமாக மருத்துவ அலுவலர் பணியிடங்களை நிரப்பப்படாத நிலையில் மருந்தகங்களுக்கு உடனடியாக மருத்துவ அலுவலர்களை பணி நியமனம் செய்யவும், பொது மக்களின் நலன் கருதி அவசியமாக கருதப்பட்டதால் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி மற்றும் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு மேற்கண்ட 8 நபர்களும் 24.12.07 நாளிட்ட செயல்முறை ஆணை மூலம் தற்காலிகமாக பணிநியமனம் செய்யப்பட்டனர். மேற்கண்ட நபர்களில் வ.எண். 3லுள்ள டாக்டர். திரு.ஏ.எஸ். ராஜகுரு என்பவரை தவிர மற்ற 7 மருத்துவ அலுவலர்களும் பணியில் சேர்ந்துள்ளனர். இவரை தொடர்பு கொண்டதில் இவருக்கு பணியில் சேர விருப்பமில்லை என்று தெரிவித்தார்.

எனவே, சுகாதாரத்துறையில் உள்ள மருத்துவ அலுவலர் காலிப்பணியிடங்களை காலமுறை ஊதியம் ரூ.8000–275–13500 என்ற அடிப்படையில் 1) டாக்டர்.எஸ்.கந்தவேலு, 2) டாக்டர்.கே.கிருபா சங்கர், 3) டாக்டர். விமலாகரன், 4) டாக்டர். வி.சி. சுவர்ண சரவணன், 5) டாக்டர்.எஸ். முத்தமிழ் செல்வன், 6) டாக்டர். எஸ். இளையராஜா, 7) டாக்டர். பி. சுரேஷ், ஆகியோர்களை அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும், அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டும், பணிநியமனம் செய்தமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்5/2018/2007**
**ஆணையாளர் அவர்களின் 03.03.2008 நாளிட்ட குறிப்பு**

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :194/2008 பொருள் எண்.86

**பணியமைப்பு – பணி செவிலியர் பணி நியமனம் வழங்கியமைக்கு பின்னேற்பு அனுமதி**

மாவட்ட குடும்ப நலத்துறை மருத்துவமனைகளில் காலியாக உள்ள 35 பணிச்செவிலியர் பணியிடங்கள் மற்றும் இப்பதவியில் உள்ளவர்களுக்கு தாய்சேய் நல அலுவலராக பதவி உயர்வு அளிப்பதன் மூலம் தோன்றும் 6 காலிப்பணியிடங்கள் ஆக மொத்தம் 41 பணிச்செவிலியர் பணியிடங்கள் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் தேர்வு செய்து நிரப்ப அனுமதித்து நியமனக்குழு தீர்மான எண்.397/07, நாள்.22.10.07–ல் ஒப்புதல் அளித்துள்ளது.

இதனை தொடர்ந்து மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து 41 பணிச்செவிலியர் பெயர் பட்டியல் கோரப்பட்டதில், 1:1 என்ற விகிதத்தில் 34 பணிச்செவிலியர் பெயர் பட்டியல் மட்டுமே பெறப்பட்டது. எஞ்சியுள்ள 7 பணிச்செவிலியர் பெயர் பட்டியல் பின்னர் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட 34 பணிச் செவிலியர்களை 22.11.07 அன்று நடைபெற்ற சான்று சரிபார்ப்புக்கான நேர்காணலில் கலந்து கொள்ள அழைப்பு கடிதம் அனுப்பப்பட்டதில், 21 நபர்கள் மட்டுமே கலந்து கொண்டனர். இதில் 2 நபர்கள் சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறையில் ஏற்கனவே தேர்வு செய்யப்பட்டுள்ளனர். ஒரு நபர் போதிய கல்வித்தகுதி பெற்றிருக்கவில்லை இதில் 18 நபர்கள் மட்டுமே தற்காலிகமாக தேர்வு செய்ய தகுதி பெற்றவர்களாக உள்ளனர். இதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | இட ஒதுக்கீட்டு சுழற்சி முறை | வேலை வாய்ப்பு அலுவலக பதிவு எண். | பெயர் மற்றும் விலாசம் | பிறந்த தேதி மற்றும் வயது | இனம் | கல்வித் தகுதி | தாய் மொழி |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | எஸ்.சி. முன்னுரிமை அற்ற | 1996 எப்00413 நாள்.20.6.96 | எ.சுகந்தி ப.எண்.25, பு.எண்.49, 85வது தெரு, காமராஜ் சாலை, அசோக்நகர், செ–83 | 05.02.74 வயது 33 | எஸ்.சி. | பணிச் செவி லியர் பட்டயம் | தமிழ் |
| 2 | எம்.பி.சி. முன்னுரிமை அற்ற | 1997 எப்00353 நாள்.11.4.97 | எ.அம்ரோசியாள் 21, நேதாஜிநகர், வில்லிவாக்கம், செ–49. | 28.07.73 வயது 34 | எம்பிசி | பணிச் செவி லியர் பட்டயம் | தமிழ் |
| 3 | பி.சி முன்னுரிமை அற்ற | 1996 எப்00437 நாள்.21.6.91 | ஆர்.சாந்தி 6/11, 10வது அவின்யு, இந்திராநகர், அடையாறு, செ–20 | 02.03.69 வயது 38 | பி.சி. | பணிச் செவி லியர் பட்டயம் | தமிழ் |
| 4 | பொது முன்னுரிமை அற்ற | 1994 எப்00457 நாள்.5.2.93 | கே.விஜயா 44, முதல் குறுக்குதெரு, ரங்கநாதபுரம், மேற்கு தாம்பரம், செ–45 | 13.06.68 வயது 39 | பி.சி. | பணிச் செவி லியர் பட்டயம் | தமிழ் |
| 5 | எம்.பி.சி. முன்னுரிமை அற்ற | 1998 எப்00729 நாள்.13.8.98 | எ.இன்னசென்சியா பு.எண்.9, ப.எண்.3/3, களிங்கராயன்பிரதான சாலை, பழைய வண்ணாரப்பேட்டை, செ–21 | 27.05.76 வயது 31 | எம்பிசி | பணிச் செவி லியர் பட்டயம் | தமிழ் |
| 6 | பி.சி முன்னுரிமை அற்ற | 1992 எப்00111 நாள்.11.2.92 | எஸ்.சாந்திசெல்வகுமாரி 28, முத்துகுமரன்நகர் 2வது தெரு, பூந்தமல்லி, செ–56 | 20.06.68 வயது 39 | பி.சி. | பணிச் செவி லியர் பட்டயம் | தமிழ் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 7 | பொது முன்னுரிமை அற்ற | 2000 எப்00277 நாள்.12.2.93 | டி.ஜெயந்தி 79, பிஷோப்காலனி, சின்னமலை, சைதாப் பேட்டை, செ–15 | 28.05.68 வயது 39 | பி.சி. | பணிச் செவி லியர் பட்டயம் | தமிழ் |
| 8 | பி.சி முன்னுரிமை அற்ற | 1992 எப்00229 நாள்.6.3.92 | பி.புஷ்பலதா 42, அண்ணல்காந்தி தெரு, எம்.ஜி.ஆர்.நகர், செ–78 | 27.4.69 வயது 38 | பி.சி. | பணிச் செவி லியர் பட்டயம் | தமிழ் |
| 9 | எஸ்.சி. முன்னுரிமை அற்ற | 1996 எப்00772 நாள்.27.9.96 | எம்.எ.நிர்மலா 50/37, வருண் அப்பார்ட் மெண்ட்ஸ், வேணு கோபால் தெரு, செ–37 | 03.11.73 வயது 34 | எஸ்.சி. | பணிச் செவி லியர் பட்டயம் | தமிழ் |
| 10 | எம்.பி.சி. முன்னுரிமை அற்ற | 1998 எப்01129 நாள்.10.12.98 | எம்.விஜயலட்சுமி 19/336,சுபேதார்தோட்டம், சூளைமேடு, செ–94 | 27.07.77 வயது 30 | எம்பிசி | பணிச் செவி லியர் பட்டயம் | தமிழ் |
| 11 | பி.சி முன்னுரிமை அற்ற | 1995 எப்00977 நாள்.25.6.92 | கே.சாந்தி 4/3,வி.சி.ஜி.ஸ்டாப் குவார்ட்டர்ஸ், 34, சர்தார் பட்டேல்ரோடு, கிண்டி, செ–32 | 28.7.70 வயது 37 | பி.சி. | பணிச் செவி லியர் பட்டயம் | தமிழ் |
| 12 | பொது முன்னுரிமை அற்ற | 1993 எப்00135 நாள்.1.3.93 | டி.பரிபூரணம் பு.எண்.4, ப.எண்.246, சோலையப்பன்தெரு, பழைய வண்ணாரப் பேட்டை, செ–21 | 25.01.69 வயது 38 | பி.சி. | பணிச் செவி லியர் பட்டயம் | தமிழ் |
| 13 | எம்.பி.சி. முன்னுரிமை அற்ற | 1999 எப்00443 நாள்.20.5.99 | எல்.கௌரி 9, சக்தி அவின்யு, கடற்படை சாலை, சேலையூர், செ–73 | 11.07.78 வயது 29 | எம்பிசி | பணிச் செவி லியர் பட்டயம் | தமிழ் |
| 14 | பி.சி முன்னுரிமை அற்ற | 1992 எப்00641 நாள்.2.7.92 | ஐ.இந்துமதி 26/27,ஈடன்கார்டன் தெரு, சிவாஜிநகர், பாண்டிச்சேரி–6 | 02.05.68 வயது 39 | பி.சி. | பணிச் செவி லியர் பட்டயம் | தமிழ் |
| 15 | பொது முன்னுரிமை அற்ற | 1997 எப்00728 நாள்.11.1.94 | மரியாகொரட்டி பெத்தல்நகர், ஆலப்பாக்கம், வல்லம் போஸ்ட், செங்கற்பட்டு | 10.06.68 வயது 39 | பி.சி. | பணிச் செவி லியர் பட்டயம் | தமிழ் |
| 16 | பி.சி முன்னுரிமை அற்ற | 1992 எப்00892 நாள்.17.9.92 | டி.மேரிராஜபுஷ்பம் 157, ஜி.ஏ.ரோடு, பழைய வண்ணாரப்பேட்டை, செ–21 | 18.08.64 வயது 43 | பி.சி. | பணிச் செவி லியர் பட்டயம் | தமிழ் |
| 17 | பி.சி முன்னுரிமை அற்ற | 1998 எப்00396 நாள்.31.12.92 | பி.ஜெயந்தி சி/26, முதல்தெரு, எச்.ஐ.ஜி.பிளாட்ஸ், தமிழ்நாடு அவுசிங் போர்டு, சிட்கோநகர், வில்லிவாக்கம், செ–49 | 24.06.71 வயது 36 | பி.சி. | பணிச் செவி லியர் பட்டயம் | தமிழ் |
| 18 | பி.சி. முன்னுரிமை அற்ற | 1993 எப்00002 நாள்.4.1.93 | எப்.அமலாஜோதி 6/1, ஷீபாநகர், மப்பேடு, புதூர் போஸ்ட், செ–73 | 07.07.67 வயது 40 | பி.சி. | பணிச் செவி லியர் பட்டயம் | தமிழ் |

மேற்தெரிவிக்கப்பட்டுள்ள 18 நபர்கள் சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறை மூன்று மற்றும் நான்காம் நிலை சார்நிலை பணியாளர்களின் நியமனங்களுக்கான துணை விதிகளின்படி பணிச்செவிலியர் பதவிக்கான போதிய கல்வி தகுதி மற்றும் தமிழ்மொழியில் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில் வரிசை எண்.16 மற்றும் 18–ல் இடம் பெற்றுள்ள இரண்டு நபர்கள் 40 வயதை கடந்துள்ளதால் இவர்களுக்கு மன்றத்தின் ஒப்புதலுடன் அரசின் தளர்வாணை பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு நியமனக்குழுவின் ஒப்புதல் பெற போதிய அவகாசம் இன்மையால் நியமனக்குழுவின் பின்னேற்புக்குட்பட்டும் இவர்களை ரூ.5000–150–8000 என்ற ஊதிய விகிதத்தில் பணிச்செவிலியராக மாவட்ட குடும்ப நலத்துறையில் பணியமர்வு செய்து ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை, நாள்.19.12.2007 வழங்கப்பட்டது.

<u>மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்5/2018/2007</u>

இதற்கு பின்னேற்பு வேண்டியும் வரிசை எண்.16 மற்றும் 18ல் இடம் பெற்றுள்ள திருமதி.டி.மேரிராஜபுஷ்பம் மற்றும் திருமதி.எப்.அமலாஜோதி ஆகியோருக்கு வயது வரம்பு தளர்வாணை பெற அரசுக்கு கடிதம் அனுப்பவும் மன்றத்தின் ஒப்புதல் நியமனக்குழுவின் மூலம் வேண்டப்படுகிறது.

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ப.து.ந.க.எண்.711/2008**
**ஆணையாளர் அவர்களின் 08.04.2008 நாளிட்ட குறிப்பு**

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :195/2008 பொருள் எண்.87

**தரப்படுத்தப்பட்ட விலை விவர அட்டவணை – ஏற்பு ஊதியம்**

பொதுப்பணித் துறை, மேற்பார்வைப் பொறியாளர், பாலார் வடிநில வட்டம், சேப்பாக்கம், சென்னை, அவர்களால் 2008–2009–ல் தயாரிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்ட, விலை விவர அட்டவணை (ஊதியம் மற்றும் பொருட்கள் அடிப்படை இனங்கள் மட்டும்) பெறப்பட்டது.

கடந்த காலங்களில், ஒவ்வொரு ஆண்டும் பொதுப்பணித் துறையிலிருந்து பெறப்படும் தரப்படுத்தப்பட்ட விலை விவர அட்டவணை மன்றத்தின் முன் வைக்கப்பட்டு ஒப்புதல் பெற்ற பிறகு சென்னை மாநகராட்சியின் அனைத்துத் துறைகளிலும் நடைமுறைக்கு ஏற்றுக் கொள்ளப்படும். அது போலவே, இந்த ஆண்டும் பொதுப்பணித் துறையிலிருந்து பெறப்பட்ட தரப்படுத்தப்பட்ட விலை விவர அட்டவணை (ஊதியம் மற்றும் பொருட்கள் –அடிப்படை இனங்கள் மட்டும்) சென்னை மாநகராட்சியின் அனைத்துத் துறைகளும் கையாள மற்றும் கீழே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு குறிப்பிட்ட முடிக்கப்பட்ட வேலைகளுக்கு விலைப்பட்டி (DATA) ஆதாரமாக கொண்டு தயாரிக்கப்படும் விலை விவரப்பட்டியல் (SCHEDULE OF RATES FOR FINISHED ITEMS), பணித் துறை, கட்டிடத் துறை, மழைநீர் வடிகால் துறை, பாலங்கள் துறை, பேருந்து சாலைகள் துறை, திடக்கழிவு மேலாண்மை துறை, மண்டல அலுவலகங்கள் மற்றும் அனைத்து பொறியியல் துறைகளும் நடைமுறைக்கு ஏற்றுக்கொள்வதற்காக, விலை விவர அட்டவணையின்படி

1. (அடிப்படை இனங்கள் மட்டும் – ஊதியம் மற்றும் பொருட்களின்) விலை விவர அட்டவணை பொதுப்பணித்துறையை போலவே 01.04.2008 முதல் சென்னை மாநகராட்சியில் அனைத்துத் துறைகளும் அமுல் படுத்துவதற்கும்,

2. சேர்க்கைகள் அல்லது திருத்தங்கள் பொதுப்பணித்துறையிலிருந்து/ நெடுஞ்சாலைத் துறையிலிருந்து/சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றுதல் வாரியத்திலிருந்து பெறப்படுமாயின் அதற்கேற்றவாறு சென்னை மாநகராட்சியில் கையாளவும்,

3. சென்னை மாநகராட்சியின் தற்காலிகத் தொழிலாளர்களுக்கு 01.04.2008 முதல் புத்தகத்தின்படி, ஊதியம் வழங்கவும்,

4. பொதுப் பணித்துறையிலிருந்து பெறப்பட்ட அட்டவணையில் இல்லாத இனங்களுக்கு விலைப்புள்ளி (QUOTATION) பெற்று குறைந்த விலையினை அந்தந்த துறை சம்பந்தப்பட்ட மேற்பார்வைப் பொறியாளர் முடிவு செய்யவும்,

5. தற்போது நடைமுறையிலுள்ள அனைத்து அடிப்படை விவரம் (DATA) அடிப்படையில் அந்தந்த துறை மேற்பார்வைப் பொறியாளர்கள் விலைப்பட்டி விவரம் தயாரிக்கவும் மற்றும் தொழிற் நுட்ப மாறுதல் இருப்பின்அதற்கேற்றவாறு விலைப்பட்டி விவரம் மாற்றி தயாரிக்கவும்,

6. பொதுப்பணித் துறையிலிருந்து பெறப்பட்ட திண்காரை (CEMENT) விலை ரூ.4,400/– ஒரு மெட்ரிக் டன்னுக்கு, இரும்புக் கம்பிக்கான (STEEL) விலை ரூ.45,000/– ஒரு மெட்ரிக் டன்னுக்கு. (பொருட்களின் விலை வேலை நடைபெறும் இடத்திற்கு வந்து சேர ஏற்படும் ஏற்றுதல், இறக்குதல், அடுக்குதல், எல்லா வரிகளும் உட்பட மற்றும் இதர செலவுகளும் சேர்த்து) சென்னை மாநகராட்சியின் அனைத்துத் துறைகளும் விலைப்பட்டியில் பொதுப்பணித் துறை போலவே கையாளவும், மேலும்

**ப.து.ந.க.எண்.711/2008**

பொதுப்பணித் துறையிலிருந்து திண்காரை (CEMENT) மற்றும் இரும்புக் கம்பிகளுக்கான (STEEL) விலைகளை பெறப்படும் பொழுதெல்லாம், அனைத்து துறைகளும், பொதுப்பணித் துறையின் விலைகளைப் போலவே அமுல் படுத்துவதற்கும், நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு ( வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“**10.04.2008** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். **86/08** , நாள்: 10.04.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி ) மற்றும் நியமனகுழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“**16.4.2007** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.**46/2008** நாள்: 16.4.2007-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகின்றது. “

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ப.து..
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ப.து.ந.க.எண்.757/2008**
**ஆணையாளரின் 10.04.2008 நாளிட்ட குறிப்பு**

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :196/2008 பொருள் எண்:88

சென்னை மாநகராட்சி நிதி நிலை அறிக்கை 2008–2009 – வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 12–03–08 அன்று நடந்த மாமன்ற கூட்டத்தில் பணித்துறை (நகரமைப்பு) பற்றிய மேம்பாட்டு திட்டங்களில் ஒன்றான 500 சதுர அடிக்கு வரைபட ஒப்புதல் சென்னை மாநகராட்சியில் வழங்க சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு உரிய பரிந்துரை அனுப்புதல் சம்பந்தமாக.

12–03–2008 அன்று நடந்த மாமன்ற கூட்டத்தின் நிதிநிலை அறிக்கையின் தொடக்க உரையின் போது வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் சென்னை மாநகரில் ஏற்பட்டு வரும் கட்டமைப்பு வளர்ச்சி காரணமாகவும், பெருகி வரும் மக்கள் தொகை, இதன் தொடர்ச்சியாக அதிக அளவில் தேவைப்படும் குடியிருப்பு வசதிகள் காரணமாகவும், மேலும் சென்னை மாநகரில் வீட்டு மனையின் மதிப்பு பல மடங்கு உயர்ந்து வருவதினை கருத்தில் கொண்டு நடுத்தர மக்களும், வீடுகள் கட்டும் வகையில் தொடர் கட்டிடங்கள் கட்ட அனுமதிக்கப்படும் பகுதிகளில் 500 சதுர அடிகள் இடம் உள்ள நிலத்திற்கும் கட்டிட வரைபடம் அனுமதி வழங்க, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு உரிய பரிந்துரையுடன் அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவித்தார்கள்.

சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட (Detached) பகுதிகளில் 90 ச.மீ. (968 ச.அடி) நிலத்திலும் தொடர் கட்டிட பகுதிகளில் 80 ச.மீ (862 ச.அடி) நில பரப்பிலும் கட்டிட வரைபட அனுமதி தற்போது வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி கட்டிட வரைபட அனுமதி வழங்குவதற்கான விதிமுறைகள் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தினால் வரையறுக்கப்படுகின்றன.

எனவே, சென்னை மாநகராட்சி எல்லையில் ஏழை மக்கள் மற்றும் நடுத்தர மக்கள் பயன்பெறும் வகையில் 500 சதுர அடி இடம் உள்ள இடத்தில் கட்டிட வரைபடம் அனுமதி வழங்க ஏதுவாக விதிமுறைகள் தளர்த்தி அமல்படுத்த சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு பரிந்துரை அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

> "11.04.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண். 04 / 2008 நாள் 11.04.2008ன்படி சென்னை மாநகராட்சியில் தரைதளம் மற்றும் முதல் தளத்திற்கு மட்டுமே திட்ட மற்றும் கட்டிட அனுமதி வழங்கப்படுகிறது. மேலும் ( i ) ஸ்டில்ட் ( Stilt ) தரைதளம் மற்றும் முதல் தளத்திற்கு ( ii ) தரைதளம் மற்றும் மூன்று தளங்களுக்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி சென்னை மாநகராட்சியிலே வழங்குவதற்கு, சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் சென்னை மாநகராட்சிக்கு அதிகார பகிர்வு அளிக்க வேண்டும் என்கின்ற திருத்தத்துடன் இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ப.து..
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.ஈ3/10341/2008**
**ஆணையாளர் அவர்களின் 15.04.2008 நாளிட்ட குறிப்பு**

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :197/2008 பொருள் எண்.89

**பணியமைப்பு – உதவி ஆணையர் (பொ.நி.ம.ப) பொறுப்பேற்ற விவரம்**

திருமதி. எம்.லட்சுமி, மாவட்ட வருவாய் அலுவலர், துணை ஆணையர்(வடக்கு) உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அவர்கள் அரசாணை எண்.1046, பொது.(சிறப்பு–அ) துறை, நாள். 12.03.2008ன் படி, சென்னை மாநகராட்சியில், உதவி ஆணையர் (பொ.நி.ம.ப) ஆக 17.03.2008 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் நியமனக்குழு மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
தகவலுக்காகவும், பதிவிற்காகவும் சமர்ப்பிக்கின்றது"

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.3.ந.க.எண்.பி1/10232/2007**
**ஆணையர் அவர்களின் 19.12.2007 நாளிட்ட குறிப்பு**

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :198/2008 பொருள் எண் :90

**பழுதடைந்த கட்டிடம் இடிக்க அனுமதி**

| வ.எண். | வார்டு எண்.48 | மண்டலம்–3 |
|---|---|---|
| 01. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | ஜட்காபுரம், சென்னை மாநகராட்சி துவக்கப் பள்ளியில் இயங்கி வரும் சத்துணவுக் கூட மைய எண்.858 |
| 02. | கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | கட்டடத்துறை, 50 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. |
| 03. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.5,495.13/– |
| 04. | கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | மிகவும் பழுதடைந்து இடியும் நிலையில் உள்ளது. |
| 05. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் பரப்பளவு | 80 ச.மீ. (860 ச.அ.) |
| 06 | திட்ட முன் மொழிதல் | சத்துணவுக் கூடத்துடன் உடற்பயிற்சிக் கூடமும் கட்டப்படவுள்ளது. |
| 07. | வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண். மற்றும் நாள் | 3வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.785 நாள் 26.11.2007 |

எனவே, மேற்கண்ட பழுதடைந்த கட்டிடம் இடிப்பதற்கு நிலைக்குழு (கல்வி), மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

08.04.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண்.39, நாள்:08.04.2008 ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.

10.04.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 84/08 , நாள்: 10.04.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.3.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.7.ந.க.எண்.இ1/2549/2008**
**ஆணையர் அவர்களின் 08.04.2008 நாளிட்ட குறிப்பு**

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :199/2008 பொருள் எண் :91

**பள்ளி கட்டிடம் இடிப்பதற்கு அனுமதி**

வார்டு எண்.109 மண்டலம்–7

| | | |
|---|---|---|
| 01. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–7, பகுதி–21, வார்டு–109, ஆயிரம் விளக்கு மாதிரி பள்ளி சாலையில் உள்ள உயர்நிலைப்பள்ளி பழுதடைந்த கட்டிடம் |
| 02. | கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | சென்னை மாநகராட்சி, 1959 |
| 03. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.1012/– |
| 04. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் பரப்பளவு | 2941.70 ச.அடி (273.29 ச.மீ.) |
| 05. | கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | பழுதடைந்த நிலையில் உள்ளதால் இடிக்க வேண்டியுள்ளது. |
| 06 | திட்ட முன் மொழிதல் | பழுதடைந்த நிலையில் உள்ள பள்ளி கட்டிடத்தை இடித்துவிட்டு புதிதாக கட்டும் பணி. |
| 07. | வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண். மற்றும் நாள் | 7வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.987 நாள் 11.03.2008 |

எனவே, மேற்கண்ட பள்ளி கட்டிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (கல்வி), மற்றும் நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

08.04.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண்.41, நாள்:08.04.2008 ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

10.04.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 85/08 , நாள்: 10.04.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.7.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ.10.சு.து.ந.க.எண்.எ1/1731/2008
ஆணையர் அவர்களின்15.04.2008 நாளிட்ட குறிப்பு.

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :200/2008 பொருள் எண்: 92

**புனித மேரி சாலையிலுள்ள கல்லறையினை தத்து எடுத்து பராமரிப்பு செய்வதற்கான ஒப்பந்த காலத்தை மேலும் 3 ஆண்டுகள் நீட்டிப்பு வழங்க அனுமதி**

சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறை, மண்டலம்–10, கோட்டம்–143, புனித மேரி சாலையிலுள்ள சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான கிறிஸ்தவ கல்லறையை, மாமன்றத் தீர்மானம் எண்.776/98 நாள்:25.09.1998ன்படி தத்து எடுத்தல் அடிப்படையில் எங்கள் வழிகாட்டும் மாதா தேவாலயம் கடந்த 28.12.1998 முதல் பராமரித்து வருகிறது.

இப்பராமரிப்பிற்கான ஒப்பந்தமானது 31.03.2008 வரை நீடித்து வழங்கப்பட்டுள்ளது. தற்போது ஒப்பந்தகாலம் முடிவடைந்துள்ள நிலையில் எங்கள் வழிகாட்டும் மாதா தேவாலயம், பங்குத் தந்தை அவர்கள், மீண்டும் ஒப்பந்த காலத்தை 01.04.2008 முதல் 31.03.2011 வரை நீட்டிப்பு செய்யும்படி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுக்கு மனு சமர்ப்பித்துள்ளார். வணக்கத்திற்குரிய மேயர் அவர்களும் இக்கோரிக்கையினை பரிந்துரைத்துள்ளார்.

கடந்த 9 ஆண்டுகளாக சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான புனித மேரி சாலையிலுள்ள கிறிஸ்தவ கல்லறையை எங்கள்வழிகாட்டும் மாதா தேவாலயம், பொதுமக்களின் எவ்விதமான குற்றச்சாட்டுமின்றி, வெகு சிறப்பான முறையில் பராமரித்து வருகின்றது. இதனால் இவர்களின் கோரிக்கையினை ஏற்று மேற்கண்ட கல்லறையினை 01.04.2008 முதல் 31.03.2011 வரை தத்து எடுத்தல் அடிப்படையில் பராமரிப்பு செய்வதற்கு அனுமதி வழங்க

கீழ்கண்ட இனங்களுக்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்) மூலம் மாமன்றத்தின் அனுமதி கோரும் குறிப்பு ஆணையர் அவர்களின் ஒப்புதலுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

1. சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான புனித மேரி சாலையிலுள்ள கிறிஸ்தவ கல்லறையை எங்கள் வழிகாட்டும் மாதா தேவாலயம் பராமரிப்பு செய்வதற்கான ஒப்பந்தத்தை மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டிக்க
2. ஏற்கனவே, ஏற்படுத்தப்பட்டுள்ள இனம் 1 முதல் 30 வரைக்கான சென்னை மாநகராட்சி விதிமுறை மற்றும் வறையறைக்குட்பட்டு வழங்கிடவும்,
3. அவவாறு வழங்குவதற்கு 20 ரூபாய் அரசு முத்திரையிட்ட பிணைப்பு பத்திரத்தில் சான்றுருதி அலுவலரால் சான்றொப்பமிட்ட பத்திரத்தில் ஒப்பந்தம் ஏற்படுத்தவும், மாநகராட்சி ஆணையர் சார்பாக, சுகாதார அலுவலர் எங்கள் வழிகாட்டும் மாதா தேவாலயத்தின் பங்குத் தந்தையுடன்ஒப்பந்தம் ஏற்படுத்தவும்

மேற்கண்ட இனங்களுக்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்) மூலம் மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு(பொது சுகாதாரம்)வின் கூட்டம் 03.04.2008 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டு 21.04.2008 அன்று தீர்மான எண்.26ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.10.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(சு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**<u>சு.து.ந.க.எண். 6270/2007</u>**
**<u>ஆணையர் அவர்களின் 07.01.2008 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :201/2008 பொருள் எண்.93

**<u>சென்னை மாநகராட்சி – பொது சுகாதாரத்துறை–மாநகர நோய் கண்காணிப்புத் திட்டம் சென்னையில் அமுல் படுத்த அனுமதி வேண்டுதல் – சம்மந்தமாக.</u>**

ஒருங்கிணைக்கப்பட்ட நோய் கண்காணிப்புத்திட்டம் (IDSP) தேசிய அளவில் மாநிலத்திற்கேற்ப நடைமுறைபடுத்த உள்ள திட்டமாகும். நோய் தொற்றை ஆரம்ப காலத்திலேயே கண்டுபிடித்து நோய் பரவாமல் உடனடியாக கட்டுப்படுத்துவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இத்திட்டம் (IDSP) கிராமப்புற மற்றும் சிறிய நகரங்களுக்கு என உருவாக்கப்பட்ட திட்டமாகும். தற்சமயம் டெல்லி, மற்றும் மும்பை நகரங்களில் நடைமுறையில் உள்ளது.

மாநகர நோய் கண்காணிப்புத்திட்டம் (Urban Surveillance Project), IDSP - ன் ஒரு விரிவாக்கமே.

IDSP–யை நடைமுறை படுத்த, நோய் கண்காணிப்புக் குழுமம் சென்னை மாநகராட்சியால் தமிழ்நாடு அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின் அறிவுறுத்தலின்படி அமைக்கப்பட்டது.

மாநகர நோய் கண்காணிப்புத் திட்டத்தின் முக்கியத்துவத்தை பற்றிய கூட்டம் இந்திய அரசு திட்ட அதிகாரியால் (NPO) புனேவில் கூட்டப்பட்டது. இக்கூட்டத்திற்கு இயக்குநர், தொற்றுநோய் மருத்துவமனை சென்னை மாநகராட்சி சார்பில் கலந்து கொண்டார். IDSP & USP பற்றிய விவரங்களை மாநில நோய் கண்காணிப்பின் தலைவர், சென்னை மாநகர சுகாதார அதிகாரிகள் மற்றும் மருத்துவ அதிகாரிகளுக்கு விளக்கினார். மாநகர நோய் கண்காணிப்புத் திட்டம் சென்னையில் செயலாக்கம் பற்றிய விவரமான முன்மொழிவு தேசிய திட்ட அலுவலர் (NPO) அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. சுகாதார அலுவலர் மற்றும் இயக்குநர், தொற்றுநோய் மருத்துவமனை அவர்களும் டெல்லியில் மாநகர நோய் கண்காணிப்புத் திட்டம் (USP) IDSP பற்றிய இறுதி முடிவு எடுக்க நடந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு திட்டத்தை முன்மொழிவைப் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தனர்.

தேசிய திட்ட அலுவலர் அவர்கள் சுகாதார அதிகாரி அவர்களுக்கு சென்னையில் மாநகர நோய் கண்காணிப்புத் திட்டம் அமுல்படுத்துவதின் ஒப்புதலை தெரிவித்து மற்றும் இத்திட்டத்திற்கு தேவையான நிதி ஒதுக்கீடுகளின் விவரங்களைப் பற்றியும் அதற்குத் தேவையான மற்ற ஏற்பாடு எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றி குறித்து அனுப்பிய கடிதம். இக்கடிதத்தில் இத்திட்டத்திற்காக முதல் வருடத்திற்கு ரூ.**86,08,000/–** நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகவும், நிதி ஒதுக்கீட்டின் விவரங்களை கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

Revised budget proposal is Submitted after deleting the Manpower requirement for approval:

Annex

| Proposed Urban Surveillance Budget for 2007-2008: Chennai Municipal Corporation | | | |
|---|---|---|---|
| Major Head | Minor Head | Details | Amount in Rupees |
| Metro Surveillance Unit | 1. Office Equipments | 1Telephone,1 Telefax, 1 LCD projector with annual fees and maintenance | 100000 |
| | 2. Computer & accessories | 4 Computers with accessories for the office of Metro surveillace Unit for data entry, analysis and MIS functions | 240000 |
| | 3. Operational Cost | To cover mobility and sundry expenses including meeting expenses for a year | 648000 |
| | 4. Printing of forms & manuals | Printing of reporting format and publishing cost of Reports etc | 300000 |
| Zonal Surveillance Unit | 5. Telephone | 1 per unit x 10 | 200000 |
| | 6. Computer & accessories | 1 per unit x 10 | 600000 |
| | 7. Operational Fund | Rs. 4,000/- per month per unit | 1200000 |
| | 8. Equipments / supply for 4 laboratories | District lab norm @ Rs. 600000 per lab | 2400000 |

| | | |
|---|---|---|
| IEC Budget | To cover regular insertion in print and periodic electronic medial coverage to particularly educate people in time of impending outbreaks & disease outbreaks on specific measures of containment | 500000 |
| Budget for GIS | To cover establishment of GIS system including aggregation of existing coordinates and creation of new where required, running open source software and induction training of core surveillance team | 1500000 |
| Training | To cover training for RRT, Metro Surveillance Unit officials of about 40 for 3 days intensive training, 1 day orientation training for 500 doctors, 1150 Health workers and about 200 Laboratory Technicians and other key personnel | 420000 |
| Collection of Hospital Data | Collection of data from major private hospitals by Private Agency | 500000 |
| | Total | 8608000 |

இத்திட்டத்தை சென்னை மாநகராட்சியில் அமுல்படுத்த கீழ்க்கண்ட நடவடிக்கைகள் அவசியமாக தேவைப்படுகின்றன:

1. நோய் கண்காணிப்புக் குழுமத்தை மேலும் சில முக்கியமான அலுவலர்களை சேர்த்து குழுமத்தை மாற்றி அமைத்தல்
2. இந்திய அரசின் சுகாதார மற்றும் குடும்ப நலத்துறையும் மற்றும் சென்னை மாநகராட்சி சுகாதாரத் துறையும் ஒருங்கிணைந்து இத்திட்டத்தை செயல்படுத்த உடன்படிக்கையில் கையெழுத்து இடுதல்
3. Disease Surveillance Health Society (IDSP), Chennai என்ற பெயரில் சுகாதார சங்கத்தை அமைத்து, இதனை பதிவாளர், சங்கங்கள், சென்னையில் பதிவு செய்து, இச்சங்கத்தின் கணக்குகளை பராமரிக்க இச்சங்கத்தின் பெயரில் புதியதாக சேமிப்புக்கணக்கு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் துவங்குதல்,

இத்திட்டத்தை சென்னை மாநகரில் அமுல்படுத்துவதினால் சென்னை மாநகராட்சியில் நோய் கண்காணிப்பு முறையை சிறப்பாக மேம்படுத்த முடியும். மேலும் இத்திட்டத்தை அமுல்படுத்துவதால் சென்னை மாநகராட்சிக்கு எவ்வித நிதிச்சுமையும் ஏற்படாது என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே நோய் கண்காணிப்புத் திட்டத்தை சென்னை மாநகராட்சியில் அமுல்படுத்த கீழ்க்கண்ட ஆணைகள் வேண்டப்படுகின்றன.

1. சென்னை மாநகரத்தில் மாநகர நோய் கண்காணிப்புத் திட்டத்தை, தேசிய திட்ட அலுவலர் அவர்களின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி அமுல்படுத்தவும்
2. இந்திய அரசின் சுகாதார மற்றும் குடும்ப நலத்துறையும் மற்றும் சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறையும் ஒருங்கிணைந்து இத்திட்டத்தை செயல்படுத்த உடன்படிக்கையில்(MUO) கையெழுத்து இடவும்
3. Disease Surveillance Health Society (IDSP), Chennai என்ற பெயரில் சுகாதார சங்கத்தை அமைத்து, இதனை பதிவாளர், சங்கங்கள், சென்னையில் பதிவு செய்யவும், இச்சங்கத்தின் கணக்குகளை பராமரிக்க இச்சங்கத்தின் பெயரில் புதியதாக சேமிப்புக்கணக்கு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் துவங்கவும்
4. ஏற்கனவே அமைக்கப்பட்ட நோய் கண்காணிப்புக் குழுவில் உள்ள அலுவலர்களுடன் சில முக்கியமான அலுவலர்களை சேர்த்து புதியதாக நோய் கண்காணிப்பு குழு கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்கவும்

| | | | |
|---|---|---|---|
| 01. | வணக்கத்திற்குரிய மேயர் | – | கௌரவ தலைவர் |
| 02. | ஆணையர், சென்னை மாநகராட்சி | – | தலைவர் |
| 03. | கூடுதல் ஆணையர் (சு), சென்னை மாநகராட்சி | – | உறுப்பினர் |
| 04. | ஆளுங்கட்சித் தலைவர் | – | உறுப்பினர் |
| 05. | எதிர்க்கட்சித் தலைவர் | – | உறுப்பினர் |
| 06. | தலைவர், நிலைக்குழு சுகாதாரம் | – | உறுப்பினர் |
| 07. | சுகாதார அலுவலர், சென்னை மாநகராட்சி | – | உறுப்பினர் மற்றும் செயலாளர் |
| 08. | கூடுதல் சுகாதார அலுவலர் (வடக்கு) சென்னை மாநகராட்சி | – | உறுப்பினர் |
| 09. | கூடுதல் சுகாதார அலுவலர் (தெற்கு) சென்னை மாநகராட்சி | – | உறுப்பினர் |

| | | | |
|---|---|---|---|
| 10. | இயக்குநர்,தொற்றுநோய் மருத்துவமனை | – | உறுப்பினர் |
| 11. | பேராசிரியர் நுண்ணுயிரியல் துறை,<br>அரசு சென்னை மருத்துவக்கல்லூரி | – | உறுப்பினர் |
| 12. | பேராசிரியர் நுண்ணுயிரியல் துறை,<br>அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி | – | உறுப்பினர் |
| 13. | பேராசிரியர் நுண்ணுயிரியல் துறை,<br>அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி | – | உறுப்பினர் |
| 14. | இயக்குநர், அரசு குழந்தைகள் நல மருத்துவமனை, எழும்பூர் | – | உறுப்பினர் |
| 15. | குழந்தை நல டிரஸ்ட் மருத்துவமனை பிரதிநிதி | – | உறுப்பினர் |
| 16. | இந்திய மருத்துவக்கழகம் பிரதிநிதி | – | உறுப்பினர் |
| 17. | இந்திய குழந்தைகள் நல சங்கம், பிரதிநிதி | – | உறுப்பினர் |
| 18. | சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்<br>கழிவு நீரகற்று வாரியத்தின் பிரதிநிதி | – | உறுப்பினர் |

இப்பொருள் ஒப்புதலுக்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"11.02.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.08 /2008 நாள் 11.02.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம் ) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது "

"22.2.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தின் தீர்மான எண்.19, நாள்: 22.2.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: சு.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**குந(ம)மகுநஎண்.மேதமபி/1178/2008**
**ஆணையர் அவர்களின்21.04.2008 நாளிட்ட குறிப்பு.**

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :202/2008 பொருள் எண்: 94

**சென்னை மாநகராட்சியில் மேலும் 8 மருத்துவ மனைகளை 24 மணி நேர மகப்பேறு அவசர சிகிச்சை அளிக்கும் மருத்துவமனைகளாக விரிவுபடுத்துதல்**

2008-2009ஆம் ஆண்டிற்கான மாநகராட்சி வரவு செலவு திட்ட அறிக்கையில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் சைதாப்பேட்டை மற்றும் பெருமாள்பேட்டை 24 மணி நேர மகப்பேறு அவசர சிகிச்சை மையங்களில் அளிக்கப்படும் மருத்துவ சேவை சென்னை மாநகர் வாழ் அனைத்து மக்களுக்கும் கிடைக்கும் வகையில் மேலும் 8 மருத்துவ மனைகளில் சிறப்பு மருத்துவர்களை நியமித்து 24 மணி நேர மகப்பேறு சேவை வழங்கும் வகையில் விரிவுப்படுத்தப்படவுள்ளது என தெரிவித்துள்ளார்கள்.

தற்போது சென்னை மாநகராட்சியின் கீழ் 19 மகபேறு மருத்துவ மனைகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் ஒரு வருடத்தில் சராசரியாக 14,000 பிரசவங்கள் நடைபெறுகின்றன. 7 மற்றும் 9வது மண்டலத்தில் உள்ள 24 மணி நேர மகப்பேறு அவசர சிகிச்சை மருத்துவ மனைகளான பெருமாள்பேட்டை மற்றும் சைதாப்பேட்டை ஆகிய மருத்துவ மனைகளில் அதிக அளவில் பிரசவங்கள் நடைபெறுகின்றன.

**மகப்பேறு மருத்துவமனைகளின் விவரம்**

| வரிசை எண். | மண்டலம் எண். | மகப்பேறு மருத்துவமனை |
|---|---|---|
| 01 | 01 | டாக்டர் ஆர்.கே.நகர், தெற்கு |
| 02 | | புது வண்ணாரப்பேட்டை |
| 03 | 02 | சஞ்சீவராயன் பேட்டை |
| 04 | | கொண்டித்தோப்பு |
| 05 | 03 | புளியாந்தோப்பு |
| 06 | | இளங்கோ நகர் |
| 07 | | பெருமாள் கோயில் தோட்டம் |
| 08 | | பெரம்பூர் கிழக்கு |
| 09 | 04 | அயனாவரம் |
| 10 | | அகரம் தெற்கு |
| 11 | | செம்பியம் |
| 12 | 05 | செனாய்நகர் |
| 13 | 06 | மீர்சாகிப்பேட்டை |
| 14 | 07 | பெருமாள் பேட்டை |
| 15 | 08 | வடபழனி |
| 16 | | தேனாம்பேட்டை |
| 17 | 09 | சைதாப்பேட்டை |
| 18 | 10 | வேளச்சேரி |
| 19 | | சாந்தோம் |

வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் அறிவித்த வண்ணம் ஏற்கனவே செயல்படும் 24 மணி நேர மகப்பேறு அவசர சிகிச்சை மருத்துவ மனைகளுடன், கீழ்கண்ட 8 மருத்துவ மனைகளை 24 மணி நேர மகப்பேறு அவசர சிகிச்சை மகப்பேறு மருத்துவ மனைகளாக விரிவு படுத்துவதற்கும்,

**புதிதாக விரிவு படுத்தப்படவுள்ள 24 மணி நேர மருத்துவ மனைகளின் பட்டியல்**

| வ.எண். | மண்டலம் எண். | புதிதாக விரிவுபடுத்தப்படவுள்ள 24 மணி நேர மகப்பேறு அவசர சிகிச்சை மருத்துவமனை | மண்டல மருத்துவ மனையுடன் இணைக்கப் படவேண்டிய மகப்பேறு மருத்துவமனை |
|---|---|---|---|
| 01 | 01 | டாக்டர். ஆர்.கே.நகர் தெற்கு | புதுவண்ணாரப்பேட்டை |
| 02 | 02 | சஞ்சீவராயன் பேட்டை | கொண்டித்தோப்பு |
| 03 | 03 | புளியந்தோப்பு | பெருமாள் கோயில் தோட்டம்<br>பெரம்பூர் கிழக்கு |

| | | | |
|---|---|---|---|
| 04 | 04 | அயனாவரம் | அகரம் தெற்கு, செம்பியம் |
| 05 | 05 | செனாய்நகர் | |
| 06 | 06 | மீசாகிப்பேட்டை | |
| 07 | 08 | வடபழனி | தேனாம்பேட்டை |
| 08 | 10 | அடையாறு | சாந்தோம் |

அதாவது மண்டலம்–1ல் இயங்கி வரும் புதுவண்ணாரப்பேட்டை மகப்பேறு மருத்துவமனை அதே மண்டலத்தில் இயங்கும் டாக்டர். ஆர்.கே. நகர் தெற்கு மருத்துவமனையுடன் இணைக்கவும், மண்டலம்–2ல் இயங்கி வரும் கொண்டிதோப்பு மருத்துவனை அதே மண்டலத்தில் இயங்கும் சஞ்சீவராயன்பேட்டை மருத்துவமனையுடன் இணைக்கவும், மண்டலம்–3ல் இயங்கும் பெருமாள் கோயில் தோட்டம் மற்றும் பெரம்பூர் கிழக்கு மருத்துவமனை அதே மண்டலத்தில் இயங்கி வரும் புளியாந்தோப்பு மருத்துவமனையுடன் இணைக்கவும், மண்டலம்–4ல் இயங்கிவரும் அகரம் தெற்கு மற்றும் செம்பியம் மருத்துவமனை அதே மண்டலத்தில் இயங்கிவரும் அயனாவரம் மருத்துவமனையுடன் இணைக்கவும், மண்டலம்–8ல் இயங்கி வரும் தேனாம்பேட்டை மருத்துவமனை அதே மண்டலத்தில் இயங்கிவரும் வடபழனி மருத்துவமனையுடன் இணைக்கவும் மண்டலம்–10ல் உள்ள சாந்தோம் மற்றும் அடையாறு மருத்துவமனைகள் இரண்டும் இடிக்கப்பட்டு வருவதால் மண்டலம்–10ல் உள்ள வேளச்சேரி மகப்பேறு மருத்துவமனையுடன் இணைக்கவும், மேலும் இவ்வாறு இணைக்கப்படுவதால் 10 மண்டல மகப்பேறு மருத்துவமனைகள் மட்டும் 24 மணி நேர மகப்பேறு அவசர சிகிச்சை மருத்துவமனைகளாக செயல்படும். மேலும் இதற்கு தேவையான எண்ணிக்கையில் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்ற பணியாளர்களை இடமாற்றம் செய்வதன் மூலம் மக்களுக்கு மகப்பேறு தொடர்பான அனைத்து மருத்துவ சேவைகளும் 24 மணி நேரமும் வழங்க முடியும்.

எனவே,

1. புதியதாக விரிவு படுத்தப்படவுள்ள பட்டியலில் குறிப்பிட்டுள்ள 8 மருத்துவ மனைகளை 24 மணி நேர மருத்துவ மனைகளாகவும்
2. தற்போது மண்டலம் வாரியாக இயங்கி வரும் மகப்பேறு மருத்துவமனைகளை அட்டவணையில் சுட்டிக்காட்டிய படி மண்டல மருத்துவ மனையுடன் இணைக்கவும்

நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு(பொது சுகாதாரம்)வின் கூட்டம் 03.04.2008 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டு 21.04.2008 அன்று தீர்மான எண்.27ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:மா.கு.ந.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பா.து.ந.க.எண்.பி3/875/96**

**ஆணையர் அவர்களின் 25.04.2008 நாளிட்ட குறிப்பு**

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :203/2008 பொருள் எண்.95

**பெரம்பூர் மேம்பாலப்பணி ஒப்பம் முடிவு செய்தல்**

வட சென்னையின் முக்கிய பகுதியான பெரம்பூரில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் பொருட்டு, பெரம்பூர் இரயில்வே நிலையம் அருகேயுள்ள சுரங்கப்பாதையின் மேல் ஒரு மேம்பாலம் அமைக்க திட்டமிடப்பட்டது. மேம்பாலத்தை வடிவமைக்க கலந்தறிதற்குரியவர்களாக சென்னை ஐ.ஐ.டி. நியமிக்கப்பட்டு அவர்கள் அளித்த வடிவமைப்பின்படி ரூ.21 கோடிக்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 1998ஆம் ஆண்டு இறுதியில் ஒப்பங்கள் கோரப்பட்டது.

இப்பணியை மேற்கொள்ள குறைந்த ஒப்பந்ததாரராக இந்திய அரசின் நிறுவனமான திருவாளர்கள். நேஷனல் பில்டிங்ஸ் கன்ஸ்டிரக்ஷன் கார்ப்பரேஷன் லிட். தெரிவு செய்யப்பட்டு அவர்களால் ஆழ்துளைக்கடைக்கால்கள் அமைக்கும் பணி 17.02.1999 அன்று துவங்கப்பட்டது.

அவ்வாறு அமைத்த ஆழ்துளைக்கடைக்கால்களின் மீது பளு தாங்கும் சோதனை மேற்கொள்ளப்பட்டது. வடிவமைப்பின்படி தேவையான பளுவினை கடைக்கால்கள் தாங்க இயலாத நிலையின் காரணமாக ஐ.ஐ.டியிடம் திருத்திய வடிவமைப்பு பெறப்பட்டு ரூ.34.84 கோடிக்கு திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டது.

அதன்படி மீண்டும் 2000ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஒப்பந்ததாரர் திருவாளர்கள். நேஷனல் பில்டிங்ஸ் கன்ஸ்டிரக்ஷன் கார்ப்பரேஷன் லிட். மூலமாகவே இப்பணி தொடரப்பட்டது. ஆனால் 2001ஆம் ஆண்டில் அரசால் அமைக்கப்பட்ட விசாரணை கமிஷன் காரணமாக ஆகஸ்ட் 2001ல் பணி நிறுத்திவைக்கப்பட்டது.

2006ஆம் ஆண்டில் மீண்டும் அரசு இப்பணியினை விரைந்து முடிக்க கேட்டுக்கொண்டது. விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட கால தாமதத்தினால் இப்பணியை ஏற்கனவே மேற்கொண்ட ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.என்.பி.சி.சி.லிட்., அவர்களிடம் செய்துகொண்ட ஒப்பந்த உடன்படிக்கையின் நிலையினை குறித்து தமிழக அரசு தலைமை வழக்கறிஞர் (Advocate General of Tamil Nadu) அவர்களிடம் கருத்து கோரப்பட்டது. தமிழக அரசு வழக்கறிஞர் மேற்படி ஒப்பந்ததாரரிடம் செய்து கொண்ட ஒப்பந்த உடன்படிக்கை செயலிழந்தது என தெரிவித்தார்.

இதனிடையே திருவாளர்கள். என்.பி.சி.சி.லிட்., அவர்கள் மத்திய அரசின் கூடுதல் தலைமை வழக்கறிஞர் (Additional Solicitor General) அவர்களிடம் இருந்து பெறப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கை சம்பந்தமான சட்டக்கருத்தினை வழங்கினர். மத்திய அரசின் கூடுதல் தலைமை வழக்கறிஞர் அவர்கள் வழங்கிய கருத்தில் ஒப்ப விதிகளின்படி ஒப்பந்ததாரரின் ஒப்ப உடன்படிக்கை செல்லத்தக்கது எனவும், மேலும் ஒப்பந்ததாரர் தொடர்ந்து பணியை மேற்கொள்ளலாம் எனவும் தெரிவித்திருந்தார்.

திருவாளர்கள்.என்.பி.சி.சி.லிமிடெட் அவர்கள் தங்களது 31.07.2006 மற்றும் 02.08.2006 நாளிட்ட கடிதங்கள் மூலம் ஈடு செய்தல் நிகழ்விற்கான தொகை மற்றும் ஒப்ப விலை சரிப்படுத்துதலின்படி தற்காலிகமாக பணி நிறுத்தி வைக்கப்பட்ட காலத்திற்கான தொகையாக ரூ.1.45 கோடி மற்றும் விலையேற்றத்தின் காரணமாக ரூ.8.05 கோடி கூடுதலாக கோரினர்.

திருவாளர்கள்.என்.பி.சி.சி.லிமிடெட்., அவர்களுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டதில் ஒப்பந்த உடன்படிக்கையில் உள்ள ஒப்ப விதிகள் 44.1(சி), 44.2 மற்றும் 47ன்படியும் மத்திய அரசின் கூடுதல் தலைமை வழக்கறிஞர் அவர்களின் கருத்துருவின்படியும் பணியினை மேற்கொண்டு தொடர தங்களுக்கு உரிமையுள்ளது என்று தெரிவித்தனர்.

தமிழக அரசு தலைமை வழக்கறிஞரிடம் மத்திய அரசின் கூடுதல் தலைமை வழக்கறிஞர் அவர்கள் வழங்கிய சட்டக்கருத்துருவினைப் பற்றி கருத்து கோரப்பட்டது. தமிழக அரசு தலைமை வழக்கறிஞர் அவர்களும் இது தொடர்பாக மறு ஆய்வு மேற்கொண்டு திருவாளர்கள். என்.பி.சி.சி.லிமிடெட் அவர்கள் ஒப்ப விலை சரிபடுத்துதலின்படி கோரிய தொகையினையும் மற்றும் ஒப்பக்கால நீட்டிப்பினையும் சென்னை மாநகராட்சி அளிக்கலாம் என தனது கருத்துருவில் தெரிவித்தார்.

இதன்படி நவம்பர்–2006இல் அன்றைய தேதியில் மீதமுள்ள இனங்களுக்கான தொகையாக ஒப்பந்த உடன்படிக்கையில் உள்ள ஒப்ப விலை சரிப்படுத்துதலுக்கான தொகை ரூ.7.98கோடி என கணக்கிடப்பட்டு திருவாளர்கள்.என்.பி.சி.சி.லிமிடெட்., அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. மேலும் திருவாளர்கள்.என்.பி.சி.சி.லிமிடெட் அவர்கள் கோரியுள்ள, பணி நிறுத்தி வைக்கப்பட்ட காலத்திற்கான ஈட்டுத்தொகையாக அவர்கள் கோரியிருந்த ரூ.1.45 கோடி ஏற்க இயலாது எனவும் சென்னை மாநகராட்சியால் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே பெரம்பூர் மேம்பாலப்பணிக்கான மதிப்பீட்டுத்தொகையான ரூ. 34.84 கோடியை ஒப்பந்ததாரருக்கு ஒப்ப விலை சரிப்படுத்துதலின்படி ஏற்படும் கூடுதல் தொகையான ரூ.7.98 கோடி ஆகியவற்றை சேர்த்து ரூ.45.67 கோடிக்கு திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசாணை பெறப்பட்டது.

இதன்விளைவாக திருத்திய ஒப்பத்தொகையான ரூ.27.78 கோடிக்கு பணியினை மேற்கொள்ள திருவாளர்கள்.என்.பி.சி.சி.லிட்., அவர்களுக்கு பணி ஆணை வழங்கி துணை ஒப்பந்த உடன்படிக்கை 10.11.2006 அன்று மேற்கொள்ளப்பட்டது.

என்.பி.சி.சி.லிட்., நிறுவனம் பழைய வடிவமைப்பின்படியே ஆழ்துளைக்கடைக்கால் அமைக்கும் பணியை 25.11.2006 அன்று துவக்கியது. ஆனால் அவர்கள் கொண்டு வந்திருந்த கருவியினால் 30மீ ஆழத்திற்குமேல் செல்ல முடியவில்லை. எனவே பணி நிறுத்தப்பட்டது.

பாலத்தின் தூண்கள் அமையவிருக்கும் பகுதியில், மண்ணின் கடினத்தன்மையை ஆராய்வதற்கு, விரிவான அடிமண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த பரிசோதனையில் 40மீ ஆழத்திலும் கடினப்பாறை கிடைக்கவில்லை. ஆனால் வடிவமைப்பின்படி ஆழ்துளைக்கடைக்கால்கள் கடினப்பாறையில் ஊடுருவ வேண்டும். எனவே, நிலத்தின் மாறுபடும் மண் தன்மைக்கேற்ப அதன் பளுதாங்கும் சக்தியை கருத்தில் கொண்டும் 2000ஆம் ஆண்டில் சென்னை நகரம் பூகம்ப மண்டலம்–2லிருந்து பூகம்ப மண்டலம்–3க்கு மாறியதால் மேம்பாலப்பணியின் வடிவமைப்பை பூகம்ப மண்டலம்–3ன் சரத்துக்களுக்கு ஏற்ப உறுதிப்படுத்தவும் இத்திட்டத்தை மாற்று வடிவமைப்பு செய்திட வேண்டியது அவசியமானது. இத்திட்டத்தினை நன்கு ஆராய்ந்து மாற்று வடிவமைப்பு செய்யும் பணி அண்ணா பல்கலைகழகத்திடம் வழங்கப்பட்டது.

அண்ணா பல்கலைக்கழகம் அடி மண் பரிசோதனை முடிவுகளை நன்கு ஆராய்ந்த பின் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கடைக்கால்களுக்கு பதிலாக திறந்தவெளி கடைக்கால் (Open foundation) அமைக்க பரிந்துரை செய்தது. திருத்திய வடிவமைப்பிற்கேற்ப தூண்களின் அளவுகளில் மாற்றங்கள் செய்ய வேண்டியது அவசியமானது. மேலும் அண்ணா பல்கலைக்கழகம் வழங்கிய திருத்திய வடிவமைப்பு மற்றும் வடிவமைப்பின்படி மேம்பாலத்தின் வளைவுப்பகுதிகளில் மாற்றங்கள் மற்றும் பாலத்தின் அணுகு சாலை பகுதிகளில் சிறு திருத்தங்கள் செய்யப்பட்டன. அண்ணா பல்கலைக்கழகம் வழங்கிய திருத்திய வடிவமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக பணியின் மதிப்பீட்டில் உள்ள இனங்களின் அளவுகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. இம்மாற்றங்களுக்கான இனங்களுக்கு திருவாளர்கள்.என்.பி.சி.சி.லிட்., அவர்களிடம் விலை விகிதம் கோரப்பட்டது.

ஒப்பந்ததாரர் தனது 17.12.2007 நாளிட்ட நிகிரி மூலம் அளித்த கடிதத்தில் மேம்பாலத்தின் மேல் பகுதியை தவிர மீதமுள்ள பகுதிகளுக்கு ரூ.22,65,85,650/– செலவினம் ஆகும் என தெரிவித்தனர். மேலும் அவர்கள் அளவீடுகள் உட்பட அனைத்து இனங்களும் நடைமுறையில் உள்ள ஒப்பந்தத்தில் உள்ள அளவீடுகள் மற்றும் இனங்களில் இருந்து முற்றிலும் மாறுபட்டவை. எனவே இப்புதிய இனங்களுக்கு இனவாரியாக புதிய விலை விகிதத்தினை அளித்துள்ளோம் என தெரிவித்தனர். மாநகராட்சி இதனை ஏற்றுக்கொள்ளாமல் நடைமுறையில் உள்ள ஒப்பந்தத்தின்படியே பணியினை தொடரவேண்டுமென ஒப்பந்ததாரருக்கு தெரிவித்தது. ஒப்பந்ததாரரிடமிருந்து முறையான பதில் ஏதுமில்லை.

இதற்கிடையே அண்ணா பல்கலைக்கழகத்திடமிருந்து மேலும் வரைபடங்கள் பெறப்பட்டன. இதனடிப்படையில் ஆழ்துளைக்கடைக்கால்கள் அமைக்கும் பணி, அதற்கான இரும்புக்குழாய்கள் மற்றும் ஆழ்துளைக்கடைக்கால்களை இணைக்கும் பகுதிகள் நீக்கப்பட்டு அதற்கு பதிலாக உறுதியான அணைப்பு இரும்புத்தகடுகள் (Sheet Pile) கூடிய கடைக்கால் இனம் மற்றும் நீரேற்றத்திற்கான இனம் மற்றும் இதற்குரிய திண்காரை பகுதிகள் ஆகிய புதிய இனங்கள் மாற்று வடிவமைப்பில் இடம்பெற்றுள்ளன. இதுபோன்று வட்ட வடிவமான தூண்களுக்கு பதிலாக சதுரவடிவ தூண்கள் அமைக்கப்படவுள்ளது.

ஒப்பத்தில் உள்ள பழைய இனங்களையும் மற்றும் மாற்று வடிவமைப்பின்படி தற்போது புதியதாக உள்ள இனங்களையும் ஒப்பிட்டு பார்த்ததில் தற்போது ஒப்பத்தில் உள்ள 33 இனங்கள் கட்டுமானப்பணிக்கு தேவையற்றதாகின்றன. இந்த 33 இனங்களுக்கான விலையானது ரூ.7.38 கோடியாகும். இத்தொகையானது ஏற்கனவே உள்ள ஒப்பத்தொகையில் 32.55 சதவீதம் ஆகும்.

ஒப்பத்தில் இல்லாத மாற்று இனங்களுக்கான விலையானது ரூ.5.83 கோடி ஆகும். இத்தொகையானது ஏற்கனவே உள்ள ஒப்பத்தொகையில் 25.71 சதவீதம் ஆகும். தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்ப கூறு –4ல் துணைவிதி–9ன்படி சாதாரணமாக பணியின் மதிப்பீட்டில் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ 25 சதவீதம் வரை மட்டுமே அனுமதிக்கலாம்.

இப்பணி ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரரான திருவாளர்கள். என்.பி.சி.சி.லிமிடெட் மூலம் தொடரப்பட்டால் மேற்குறிப்பிட்ட தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்ப விதி சட்டத்திற்கு மாறானதாக இருக்குமென்பதால் இந்நிலையில் ஏற்கனவே உள்ள ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து புதிய ஒப்பம் கோருவதற்கான வழி முறைகளை ஆராயலாம் என கருதப்பட்டது.

இது குறித்து ஒப்பக்குழுமத்திடம் கருத்து கோரப்பட்டது. ஏற்கனவே உள்ள ஒப்பத்தில் உள்ள இனங்களில் கட்டுமானத்திற்கு தேவையற்ற இனங்கள் மற்றும் புதிய இனங்கள் மற்றும் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்ப விதிகளையும் பரிசீலித்து கீழ்க்காண்பவற்றை ஒப்பக்குழுமம் பரிந்துரை செய்தது.

திருவாளர்கள்.என்.பி.சி.சி.லிமிடெட் ஒப்பந்தத்தில் உள்ள இனங்களிலிருந்து அண்ணா பல்கலைகழகம் மாற்றியமைத்த வடிவமைப்பின்படியான இனங்கள் பெரும்பாலானவை வேறுபட்டவை. மேல்தளத்திற்கான வடிவமைப்பு பெறப்படும் பட்சத்தில் மேலும் சில இனங்களும் வேறுபடக்கூடும்.

புதிய வடிவமைப்பின்படி பணியை மேற்கொள்வதால் திருவாளர்கள். என்.பி.சி.சி.லிமிடெட் அவர்களுடன் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி உள்ள இனங்கள் பெருவாரியாக மாற்றம் கண்டுள்ளன. விடுபடும் இனங்களின் மதிப்பு, பணியின் மதிப்பில் 32.55 சதவீதம் ஆகும். மாறுபடும் கூடுதல் இனங்களின் மதிப்பு பணியின் மதிப்பில் 25.71 சதவீதம் ஆகும். இவ்வாறு மாறுபடும் மொத்த இனங்களின் மதிப்பு 25 சதவீதத்தை விட அதிக அளவு கூடுதலாகும். இவ்வாறு மாறுபடும் இவ்விரு இனங்களும் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்ட விதி 2000, கூறு – 4ல் துணை விதி–9ன்படி புறம்பானதாகும். மேற்குறிப்பிட்ட சட்டவிதி சாதாரணமாக பணியின் மதிப்பீட்டில் 25 சதவீதம் மட்டுமே கூடுதலாகவோ குறைவாகவோ அளிக்கலாமெனத் தெரிவிக்கின்றது.

மேலும் திருவாளர்கள்.என்.பி.சி.சி.லிமிடெட்., அனைத்து இனங்களுக்கும் புதிய விலை விகிதத்தையே கோரினர். மாநகராட்சி கேட்டுக்கொண்டபடி ஏற்கனவே நடைமுறையில் இருந்த ஒப்ப உடன்படிக்கையின்படி பணியினை மேற்கொள்ள முன்வரவில்லை.

மேற்குறிப்பிட்டுள்ள காரணங்களால் ஒப்பக்குழுமம், திருவாளர்கள். என்.பி.சி.சி. லிமிடெட் அவர்களுடனான ஒப்பத்தை முடிவுக்கு கொண்டு வரவும், அண்ணா பல்கலைகழகம் வழங்கிய திருத்திய வடிவமைப்பின்படி மாற்றியமைக்கப்பட்ட இனங்களுடன் புதிய ஒப்பங்கள் கோரவும் பரிந்துரை செய்தது.

இப்பரிந்துரையை ஏற்பதற்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் அனுமதியும் 10.01.2008 அன்று பெறப்பட்டது. அதன்படி புதிய ஒப்பங்கள் கோரப்பட்டது. ஒப்பங்கள் கோரியமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி மன்றத்தீர்மானம் எண்.53/08 நாள் 31.01.2008 மூலம் பெறப்பட்டது.

புதிய ஒப்பத்திற்கான ஒப்பநாள் 22.02.2008 என்று குறிப்பிட்டு ஒப்ப அறிவிப்பு செய்யப்பட்டது. ஆனால் ஒப்பந்ததாரர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒப்ப நீட்டிப்பு 29.02.2008 என்றும், பின்னர் 07.03.2008 என்றும் அதன் பின்னர் 14.03.2008 என்றும் மூன்று முறை ஒப்பகால அவகாசம் நீட்டிப்பு செய்யப்பட்டது. அவ்வாறு ஒப்ப நீட்டிப்பு செய்தபின்னரும் ஒப்பநாளான 14.03.2008 அன்று இரண்டு ஒப்பந்ததாரர்கள் மட்டுமே கலந்து கொண்டனர். அதன் விவரம் கீழ்வருமாறு

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பத்தொகை |
|---|---|---|
| 1 | திருவாளர்கள்.ஐவிஆர்சிஎல் இன்பிராஸ்டரக்சர் பிராஜக்ட் லிமிடெட் | ரூ.415745555.00 |
| 2 | திருவாளர்கள்.மாதவா ஹைடெக் இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் | ரூ.460271270.00 |

இவற்றில் குறைந்த ஒப்பந்ததாரரிடம் விலைக்குறைப்பிற்கு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அவர்கள் தங்களது 25.03.2008 நாளிட்ட கடிதம் மூலம் 0.75 சதவீதம் விலைக்குறைப்பிற்கு சம்மதம் தெரிவித்தனர். மேலும் இரண்டாவது பேச்சுவார்த்தைக்குப்பின் ஒப்பந்ததாரர் தங்களது 10.04.2008 நாளிட்ட கடிதம் மூலம் தாங்கள் ஒப்ப ஆவணத்தில் குறிப்பிட்ட ஒப்பத்தொகையில் மொத்தம் ஒரு சதவீதம் விலைக்குறைப்பிற்கு சம்மதம் தெரிவித்தனர். அதன் விவரம் கீழ் வருமாறு.

<u>பா.து.ந.க.எண்.பி3/875/96</u>

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பத்தொகை இரண்டாவது பேச்சு வார்த்தைக்குப் பின் |
|---|---|---|
| 1 | திருவாளர்கள்.ஐவிஆர்சிஎல் இன்பிராஸ்டரக்சர் பிராஜக்ட் லிமிடெட் | ரூ.411588099.45 |

தற்பொழுது 2008–09 ஆம் வருட பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறையின் பொருட்களின் அடிப்படை விலை வெளிவந்துள்ளதால் திருத்திய மதிப்பீடு 2008–09ஆம் வருட விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்டுள்ளது. அதன்படி அலுவலக மதிப்பீட்டுத்தொகை ரூ.23,08,99,871.90ஆகும் இந்த தொகையுடன் ஒப்பிடும் போது ஒப்ப சதவீதம் கீழ்வருமாறு.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பத்தொகை இரண்டாவது பேச்சுவார்த்தைக்குப் பின் | அலுவலக மதிப்பீட்டுத்தொகை ( 2008–2009 விலை விவரப்படி) | ஒப்ப சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர்கள்.ஐவிஆர்சிஎல் இன்பிராஸ்டரக்சர் பிராஜக்ட் லிமிடெட் | ரூ.411588099.45 | ரூ.230899871.90 | (+)78.25% |

இதே மதிப்பீடு ஏப்ரல் மாதம் முதல் மற்றும் இரண்டாம் வாரங்களில் நிலவிய சந்தை விலையை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டது. அதன் விவரம் கீழ் வருமாறு

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பத்தொகை இரண்டாவது பேச்சு வார்த்தைக்குப் பின் | சந்தை விலைப்படி அலுவலக மதிப்பீட்டுத்தொகை | ஒப்பந்ததாரரின் ஒப்ப சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர்கள்.ஐவிஆர்சிஎல் இன்பிராஸ்டரக்சர் பிராஜக்ட் லிமிடெட் | ரூ.41,15,88,099.45 | ரூ.27,65,01,295 | (+)48.86% |

தற்போது குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். ஐவிஆர்சிஎல் இன்பிராஸ்டரக்சர் பிராஜக்ட்ஸ் லிமிடெட் அவர்கள் இரண்டாவது பேச்சுவார்த்தைக்கு பின்னர் அளித்துள்ள ஒப்பத்தொகையான ரூ.41,15,88,099.45 ஆனது 2008–09ஆம் ஆண்டு விலைவிவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகையான ரூ.230899871.90ஐ விட (+)78.25% அதிகம் ஆகும். மேலும் ஏப்ரல் இரண்டாவது வார சந்தை விலைவிவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகையான ரூ.27,65,01,295ஐ விட (+)48.86% அதிகம் ஆகும்.

இவர்களிடம் விலைக்குறைப்பு செய்ய இரண்டு முறை பேச்சுவார்த்தை செய்த பின்னர் அவர்கள் 1% மட்டுமே குறைக்க இயலும் அதற்கு மேல் குறைக்க இயலாது என்று தெரிவித்தனர்.

மேலும் திருவாளர்கள். ஐவிஆர்சிஎல் இன்பிராஸ்டரக்சர் பிராஜக்ட்ஸ் லிமிடெட் அவர்கள் தங்களுடைய 10.04.2008 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்ட காரணங்களை குறிப்பிட்டுள்ளனர். கடந்த ஆண்டில் கட்டுமான பொருட்களின் விலையேற்றம் மிக அதிகம். அதிலும் கடந்த மூன்று மாத காலத்தில் இயல்புக்கு மீறிய விலையேற்றம் அடைந்துள்ளது. RBI வெளியிட்டுள்ள விலையேற்றப்பட்டியலைவிட கம்பிகளின் சந்தை விலையேற்றம் ஏறக்குறைய 30 சதவீதம் அதிக நிலையை அடைந்துள்ளது. சந்தைவிலையேற்ற கூறு ஒப்ப ஆவணத்தில் இடம் பெற்று இருந்தாலும் பொருட்களின் இயல்புக்கு மீறிய விலையேற்றம் காரணமாக பணிக்காலம் முழுவதும் ஒரே விலையில் மேற்கொள்ள இயலாது. மேலும் பெரம்பூர் இரயில் நிலையம் அருகில் இரயில்வே இருப்புப்பாதையின் குறுக்கே பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதால் இரயில்வே அதிகாரிகளுடன் கலந்து பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது. இரயில்வே அதிகாரிகள் பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கும் கால அளவு பொதுவாக நாளொன்றுக்கு இரண்டு மணி நேரம் மட்டுமே இருக்கும். இத்தகைய சூழ்நிலையில் மேற் கொள்ளும் பாலப்பணிக்கான செலவினம் கூடுதலாகவே இருக்கும். பணியினை குறிப்பிட்ட கால அவகாசத்தில் முடிக்க வேண்டியுள்ளதால் பணிக்கு தேவைப்படும் வார்ப்படங்கள் (Moulds) அதிகப்படியாக தயாரிக்க வேண்டியுள்ளது. அதனால் அதிக அளவு முதலீடு செய்ய வேண்டியுள்ளது. மேலும் இவ்வார்ப்படங்கள் (Moulds) குறிப்பிட்ட இப்பணிக்கான அளவுகளுக்கே செய்யப் படுவதால் மீண்டும் மற்றொரு பணிக்கு உபயோகப்படாது. பணி அமையும் இடத்தில் போக்குவரத்து நெரிசல் மிகவும் அதிகமாக உள்ளதால். பணி நடைபெறும் சமயம் அதிக அளவு பாதுகாப்புடன் எந்தவித இடையூறு மற்றும் அசம்பாவிதமின்றி மேற்கொள்ள வேண்டியுள்ளது எனவும் இதற்காக அதிக தொழிலாளர்கள் நியமிப்பதன் மூலம் கூடுதல் செலவினம் ஏற்படும். சென்னை

மாநகரம் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஒழுங்கற்ற அதிகப்படியான மழையினை சந்தித்து வருகின்றது. பணிக்காலம் முடிவதற்குள் இரண்டு மழைக்காலங்களை சந்திக்க வேண்டி இருப்பதால் பொருட்கள் உபயோகப்படுத்த முடியாத நிலையிலும் உற்பத்தி குறைந்த அளவிலும் உள்ளது. இதனால் ஏற்படும் இழப்பீட்டினை திட்டத்திற்கான செலவினத்தில் மேற்கொள்ள வேண்டிய நிலை உள்ளது. மேலும், நாடு முழுவதிலும் பெருந்திட்டங்கள் செயல்படுத்தப்படுவதால் இத்திட்டத்திற்கு தேவைப்படும் கட்டுமானப்பொருட்கள் மற்றும் அனுபவமிக்க தொழிலாளர்கள் கிடைப்பது மிகவும் கடினமான விஷயமாகும் என்றும் மேற்கண்ட நிலையில் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என்று திருவாளர்கள். ஐவிஆர்சிஎல் இன்பிராஸ்டரக்சர் பிராஜக்ட்ஸ் லிமிடெட் அவர்கள் தங்களுடைய **10.04.2008** நாளிட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

மேற்பார்வை பொறியாளர்(பாலங்கள்) அவர்கள் **15.04.2008** அன்று சமர்ப்பித்த மேற்குறிப்பிட்ட விவரங்களை ஒப்பக்குழுமம் பரிசீலித்தது எனினும் ஒப்ப சதவீதம் மிக அதிகம் என்று கருதியதால் மீண்டும் விலைக்குறைப்பு செய்ய பரிந்துரை செய்தது.

ஒப்பக்குழுமம் பரிந்துரைத்தபடி ஒப்பந்ததாரரிடம் மறுபடியும் விலைக்குறைப்பு செய்ய பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அவர்கள் **22.04.2008** நாளிட்ட கடிதம் மூலம் தங்களது ஒப்பத்தொகையிலிருந்து **2.40%** சதவீதம் குறைத்து அளித்த ஒப்பத்தொகை ரூ.**405767661.68** ஆகும். இது **2008–2009** ஆம் ஆண்டு விலை விவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகையான ரூ.**230899871.90**ஐ விட (+)**75.73%** அதிகம் ஆகும். ஏப்ரல் **2**வது வார சந்தைவிலை ரூ.**276501294.90**ஐ விட (+)**46.75%** அதிகம் ஆகும்.

எனினும் ஒப்பந்ததாரரிடம் மேலும் விலைக்குறைப்பிற்கு மீண்டும் தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதன்படி ஒப்பந்ததாரர் தனது **24.04.2008** நாளிட்ட கடிதம் மூலம் இறுதிவிலைகுறைப்பாக தங்களது ஒப்பத்தொகையில் **3.40%** விலைகுறைப்பு செய்ய இசைவு அளித்தனர். அதன்படி ஒப்பத்தொகை ரூ.**40,16,10,206.13** ஆகும். இது **2008–2009** ஆம் ஆண்டு விலை விவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகையான ரூ.**230899871.90**ஐ விட (+)**73.93%** அதிகம் ஆகும். ஏப்ரல் **2**வது வார சந்தைவிலை ரூ.**276501294.90**ஐ விட (+)**45.25%** அதிகம் ஆகும். ஒப்பீடு செய்யப்பட்ட விவரம் பின்வருமாறு :

<u>திருவாளர்கள்.ஐவிஆர்சிஎல் இன்பிராஸ்டரக்சர் பிராஜக்ட்ஸ் லிமிடெட் அவர்கள் அளித்த ஒப்பத்தொகை ஒப்பீடு செய்யப்பட்டதன் விவரம்</u>

I – ஒப்பநாளன்று ஒப்பந்ததாரர் அளித்த ஒப்பத்தொகை பற்றிய விவரம்

| ஒப்பத்தொகை | அலுவலக மதிப்பீட்டுத்தொகை ( 2008–2009 விலை விவரப்படி) ரூ.**230899871.90** ஒப்ப சதவீதம் |
|---|---|
| **ரூ.415745555.00** | 80.05 % |

II – ஒப்பந்ததாரர் முதலாவது பேச்சுவார்த்தைக்குப்பின் அளித்த ஒப்பத்தொகை பற்றிய விவரம்.

| ஒப்பத்தொகை | அலுவலக மதிப்பீட்டுத்தொகை ( 2008–2009 விலை விவரப்படி) ரூ.**230899871.90** ஒப்ப சதவீதம் |
|---|---|
| **ரூ.412627463.34** | 78.70 % |

III – ஒப்பந்ததாரர் இரண்டாவது பேச்சுவார்த்தைக்குப்பின் அளித்த ஒப்பத்தொகை பற்றிய விவரம்.

| ஒப்பத்தொகை | அலுவலக மதிப்பீட்டுத்தொகை ( 2008–2009 விலை விவரப்படி) ரூ.**230899871.90** ஒப்ப சதவீதம் | சந்தை விலைப்படி மதிப்பீட்டுத்தொகை ரூ.27,65,01,294.90 ஒப்பந்ததாரரின் ஒப்ப சதவீதம் |
|---|---|---|
| ரூ.**411588099.45** | 78.25 % | 48.86 % |

<u>பா.து.ந.க.எண்.பி3/875/96</u>

IV – ஒப்பந்ததாரர் மூன்றாவது பேச்சுவார்த்தைக்குப்பின் அளித்த ஒப்பத்தொகை பற்றிய விவரம்.

| ஒப்பத்தொகை | அலுவலக மதிப்பீட்டுத்தொகை ( 2008–2009 விலை விவரப்படி) ரூ.**230899871.90** ஒப்ப சதவீதம் | சந்தை விலைப்படி மதிப்பீட்டுத்தொகை ரூ.27,65,01,294.90 ஒப்பந்ததாரரின் ஒப்ப சதவீதம் |
|---|---|---|
| ரூ.40,57,67,661.68 | 75.73 % | 46.75 % |

V – ஒப்பந்ததாரர் நான்காவது பேச்சுவார்த்தைக்குப்பின் அளித்த ஒப்பத்தொகை பற்றிய விவரம்.

| ஒப்பத்தொகை | அலுவலக மதிப்பீட்டுத்தொகை ( 2008–2009 விலை விவரப்படி) ரூ.**230899871.90** ஒப்ப சதவீதம் | சந்தை விலைப்படி மதிப்பீட்டுத்தொகை ரூ.27,65,01,294.90 ஒப்பந்ததாரரின் ஒப்ப சதவீதம் |
|---|---|---|
| ரூ.40,16,10,206.13 | 73.93 % | 45.25 % |

மேற்கண்ட விவரங்கள் ஒப்பக்குழுமத்தின் முன்னர் 25.04.2008 அன்று சமர்ப்பிக்கப்பட்டன. மேற்பார்வை பொறியாளர்(பாலங்கள்) அவர்கள் சமர்ப்பித்த பொருளின் மீது ஒப்பக்குழுமம் விவாதித்த விவரங்கள் பின்வருமாறு.

குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள். ஐவிஆர்சிஎல் இன்பிராஸ்டரக்சர் பிராஜக்ட்ஸ் லிமிடெட் அவர்களின் நான்காவது பேச்சுவார்த்தைக்குப்பின் அளித்த ஒப்பத்தொகை ரூ.40,16,10,206.13 ஆகும். இது 2008–2009ஆம் ஆண்டின் அலுவலக விலையான ரூ.23,08,99,871.90 ஐ விட (+)73.93% அதிகம் ஆகும். ஏப்ரல் மாத சந்தை விலையின்படி (+)45.25% அதிகம் ஆகும். சென்னை மாநகராட்சியில் எந்தவொரு பணிக்கும் இத்தகைய கூடுதல் சதவீதத்தில் பணிகள் வழங்கப்பட்டதில்லை.

இதே போன்று இப்பணியின் முன்னாள் ஒப்பந்ததாரரான திருவாளர்கள்.என்.பி.சி.சி.லிட்., அண்ணா பல்கலைக்கழகம் அளித்துள்ள புதிய வடிவமைப்பின்படி அடித்தளம் மற்றும் தூண்களுக்கான 6 இனங்களுக்கு 17.12.2007 அன்று அளித்த விலை 22,65,85,650/– ஆகும். இது அப்போதைய அலுவலக மதிப்பீட்டுத்தொகையான ரூ.12,18,58,546/–ஐ விட (+)86 % கூடுதல் ஆகும்.

டிசம்பர் –2007ல் இருந்து மார்ச் மாதம் வரை கட்டுமானப்பொருட்களின் விலையேற்றம் மிக அதிக அளவில் இருந்தது. புதிய ஒப்பம் 14.03.2008 அன்று பெறப்பட்டது. இந்த ஒப்பத்தொகையுடன் திருவாளர்கள். என்.பி,சி.சி.லிட்., அளித்த விலை விகிதத்தை ஒப்பிட்டு பார்க்க அவர்கள் டிசம்பரில் அளித்த விலையுடன் மூன்று மாத விலையேற்றத்தை RBI Index இன்படி சேர்க்க வேண்டும். எனினும் இன்று வரை 2008ஆம் ஆண்டின் முதல் காலாண்டிற்கான RBI Index வெளியிடப்படவில்லை. எனவே அதற்கு மாற்றாக திருவாளர்கள். என்.பி.சி.சி.லிட்., அவர்கள் டிசம்பர்–2007ல் 6 இனங்களுக்கு அளித்த விலையுடன், அவர்கள் முந்தைய ஒப்பத்தில் விலை விவரம் அளித்த இனங்களுக்கு டிசம்பர்–2007 வரை RBI Index ன்படி விலையேற்ற சதவீதத்தை சேர்த்து அத்துடன் கடந்த மூன்று மாத காலத்தில் சிமெண்ட் மற்றும் உருக்கு கம்பிக்கான சந்தை விலையேற்றத்தை சேர்த்து ஆய்வு செய்து பார்க்கும் போது அவர்களுடைய புதிய ஒப்பத்தொகை ரூ.41.66 கோடி ஆகுமென கணக்கிடப்பட்டுள்ளது.

ஆனால் புதிய ஒப்பத்தின் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். ஐவிஆர்சிஎல் இன்பிராஸ்டரக்சர் பிராஜக்ட்ஸ் லிமிடெட் அவர்கள் கடைசியாக அளித்த ஒப்பத்தொகை ரூ.40.16 கோடியே ஆகும்.

இதுமட்டுமன்றி பழைய ஒப்பந்ததாரரான திருவாளர்கள்.என்.பி.சி.சி.லிட் அவர்கள் டிசம்பர் – 2007ல் அடித்தளம் மற்றும் தூண்கள் என 6 புதிய இனங்களுக்கு அளித்த விலை ரூ.22,65,85,650/– ஆகும். இந்த மூன்று மாத காலத்தில் சிமெண்ட் மற்றும் உருக்கு கம்பிக்கான விலையேற்றத்தை சேர்த்தால் இத்தொகை ரூ.28,30,37,499/–ஆகுமென கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் அதே 6 இனங்களுக்கு திருவாளர்கள். ஐவிஆர்சிஎல் இன்பிராஸ்டரக்சர் பிராஜக்ட்ஸ் லிமிடெட் அவர்கள் தற்போது அளித்துள்ள குறைந்த ஒப்பத்தொகை ரூ.22,96,29,309/– என்பது குறிப்பிடத்தக்கது.

பாலங்கள் துறையில் மதிப்பீடுகள் MoRTH அடிப்படை விவரங்களை பின்பற்றியே தயாரிக்கப்பட்டாலும் MoRTH பரிந்துரை செய்யும் விற்பனை வரி , மதிப்பு கூட்டு வரி, வருமான வரி போன்ற அரசுக்கு செலுத்த வேண்டிய வரிகள் உட்பட ஒப்பந்ததாரரின் அலுவலக செலவுகள்(Over head Charges) 25 % மற்றும் 10 % ஒப்பந்ததாரரின் லாபம் ஆகியவற்றை தமிழ்நாடு பொதுப்பணித்துறை வரையறுத்துள்ள விதிகளின்படி சென்னை மாநகராட்சியின் விலைவிவரப்பட்டியலில் சேர்ப்பதில்லை.

மேலும் பெரம்பூர் மேம்பாலப்பணி போன்றவை பெரும் திட்டங்கள் என்பதால் இதில் பங்கேற்கும் ஒப்பந்ததாரர்கள் தேசிய அளவில் கலந்து கொள்ளும் தகுதி பெற்ற நிறுவனங்கள் ஆகும். அவர்கள் பணியிடத்தில் மின்சார வசதி, தொழிலாளர் குடியிருப்பு வசதி, பணியிட அலுவலக வசதி மற்றும் தொலை தொடர்பு வசதி, வாகன வசதி, பொறியாளர்கள் பணியமர்த்தல் பெருமளவு திண்காரை கலவை தயாரிப்பதற்கு தண்ணீர் வசதி, இயந்திரங்களை பணியிடத்திற்கு கொண்டுவருதல், ஆய்வுக்கூட வசதிகள், பணியிட பாதுகாப்பு வசதி ஆகியவைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

மாநகராட்சி சந்தை விலை அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் Over head Charges 25 % மற்றும் ஒப்பந்ததாரரின் லாபம் ஆகியவை சேர்த்துக்கொள்ளப்படவில்லை. ஆனால் பொதுவாக ஒப்பந்ததாரர்கள் குறிப்பிடும் தொகையானது Over head Charges அவர்களுடைய லாபம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

ஆனால் முழுமையான சந்தைவிலை கட்டுமானப்பொருட்களின் சந்தைவிலையுடன் அரசிற்கு செலுத்த வேண்டிய 2 % விற்பனை வரி, 0.3 % தொழிலாளர் நல சேம நிதி, மதிப்பு கூட்டு வரி 12.5 %, வருமான வரி 2 % மற்றும் சர் சார்ஜ் 10 %, கல்வி வரி 2 % ஆகியவை உட்பட ஒப்பந்ததாரரின் அலுவலக செலவு 25 % மற்றும் ஒப்பந்ததாரரின் லாபம் 10 % ஆக மொத்தம் 35% ஆகும். ஆக முழுமையாக கணக்கிடப்பட்ட சந்தைவிலையைவிட ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பத்தொகை 10 % அதிகமாக உள்ளது.

மேலும் தற்பொழுதுள்ள பண வீக்கம் (Inflation) 7.33% சதவீதம் ஆகும் . இது மேலும் ஏறுமுகமாகவே உள்ளது.

இது மட்டுமன்றி ஒப்ப விதிகளின்படி பணி முடிந்த பின்னர் இரண்டு ஆண்டுகளுக்கு பணியின் மதிப்பில் 2.5 சதவீதம் வைப்புத்தொகையாக பிடித்தம் செய்யப்படுகிறது. இப்பணியின் மதிப்பில் அது சுமார் 1 கோடி ஆகும். மேற்கொண்டு 3 வருடங்களுக்கு ஒப்பந்ததாரர் இண்டெம்னிட்டி பாண்ட் கொடுக்க வேண்டியுள்ளது. பிடித்தம் செய்யும் வைப்புத்தொகைக்கு எந்தவித வட்டியும் தரப்படுவதில்லை.

இப்பணி பெரம்பூர் இரயில்வே சுரங்கப்பாதையின் மேல் அமைந்துள்ள இரயில்வே தடங்களின் மேல் அமையவுள்ள மேம்பாலம் ஆகும். பொதுவாக இதுபோன்ற பணிகளை மேற்கொள்ளும் போது இரயில்வே தடங்களின் மேல் அமையும் பாலப்பகுதி இரயில்வே துறையினராலும், சாலையில் அமையும் பாலப்பகுதி பணி மாநகராட்சியாலும் மேற்கொள்ளப்படும். ஆனால் இம்மேம்பாலப்பணி இரயில்வே பகுதியில் அமையும் பாலப்பகுதி உட்பட முழுப்பணியினையும் மாநகராட்சியால் மேற்கொள்ளப்படவுள்ளது. இரயில்வே பகுதியில் அமையப்போகும் மையப்பகுதி இரயில்வேத்துறையின் மின்கம்பி வடங்களினால் ஏற்படும் மின் தாக்குதலை தவிர்ப்பதற்காக தரையிலிருந்து சுமார் 12.5 மீ உயரத்தில் 45 மீ நீளத்திற்கு அமையவுள்ளது.

இரயில்வே பகுதியில் அமைவிருக்கும் பாலத்தின் மையப்பகுதி பணிகளை இரயில்வேத்துறையினருடன் கலந்து அவர்களால் அனுமதிக்கப்படும் நாட்களில் நள்ளிரவு நேரங்களில் மட்டுமே பணி செய்ய இயலும். மேலும் மையப்பகுதிக்கான மேல்தளம் அமைக்கும் போது மின் தாக்குதல் இல்லாமல் இருப்பதற்காக அனைத்து விதமான பாதுகாப்பு சாதனங்களையும் பயன்படுத்த வேண்டி உள்ளது. எனவே சிரமம் மிக்க இப்பணிக்கான காலமும் செலவும் சாதாரணமாக அமையும் மேம்பாலங்களில் இருந்து மிக அதிகமாக அமையக்கூடும்.

மேலும் மேம்பாலம் அமையவுள்ள இடத்தில் மண்ணின் வேறுபடும் தன்மையினால், வடிவமைப்பின்படி பணியினை தொடர்ந்து மேற்கொள்ள இயலவில்லை. இதன் காரணமாகவே இரண்டு முறை இப்பணிக்கு திருத்திய வடிவமைப்பு பெற வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இம்மாறுபடும் மண்ணின் தன்மையினையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது அவசியமாகிறது.

பெரம்பூர் மேம்பாலப்பணிக்கான முயற்சி கடந்த 1996இல் எடுத்துக்கொள்ளப்பட்டு 1999இல் பணித்துவங்கப்பட்டு மண்ணின் மாறுபட்ட தன்மை காரணமாக இடையில் தடைபட்டது. பின்னர் வடிவமைப்பை மாற்றி மீண்டும் நவம்பர் –2000ல் மேற்கொள்ளப்பட்டது. விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டதன் விளைவாக இப்பணி நிறுத்தப்பட்டது. நவம்பர்–2006ல் மீண்டும் பணி துவங்கப்பட்டு, கடினப்பாறை கிடைக்காத காரணத்தினால் மீண்டும் தடைபட்டது. இது போன்று காரணங்களால் பெரம்பூர் மேம்பாலப்பணியினை மேற்கொள்வதற்கு கட்டுமான நிறுவனங்கள் தயங்குவதற்கு சாத்தியக்கூறுகள் உள்ளன.

எனினும் தற்போது பெறப்பட்டுள்ள குறைந்த ஒப்பம் இரண்டு ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட போட்டி ஒப்பம் (Competitive Tender) என்பது குறிப்பிடத்தக்கது.

பெரம்பூர் மேம்பாலப்பணி தொடங்கி கடந்த 9 ஆண்டுகளில் 1998இல் ரூ.21 கோடிக்கு தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீடானது இடையில் 2000ஆம் ஆண்டு ரூ.34.84 கோடி என்றாகி பின்னர் 2006ஆம் ஆண்டில் ரூ.45.67 கோடி என்று அதிகமாகி, தற்போது 2008–09 விலைவிவரப்படி ரூ.51.00 கோடியாக உயர்ந்துள்ளது. பணி தற்போது நடைமுறைபடுத்தப்படாவிடின் திட்ட மதிப்பீட்டுத்தொகை மேலும் அதிகரிக்கும் வாய்ப்பே உள்ளது.

இப்பணியினை மேற்கொள்ளாது மேலும் காலம் தாழ்த்தினால் தற்போதுள்ள சந்தை விலை ஏற்ற நிலையில் பணியின் மதிப்பீடு மேலும் பல கோடிகள் அதிகமாகும் நிலை ஏற்படும். அது மட்டுமன்றி இப்பணிக்கு திருத்திய வடிவமைப்பின்படி புதிய ஒப்பம் கோரிய பிறகு ஒப்பந்ததாரர்கள் பங்கேற்க முன்வரவில்லை. மூன்று முறை ஒப்ப நீட்டிப்பு செய்யப்பட்ட பின்னரும் இரண்டு ஒப்பந்ததாரர்கள் மட்டுமே ஒப்பத்தில் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வொப்பத்தில் இப்பணியினை ஏற்கனவே மேற்கொண்ட ஒப்பந்ததாரரான திருவாளர்கள்.என்.பி.சி.சி.லிமிடெட் அவர்கள் கலந்துக்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் மறு ஒப்பம் கோரினால் எந்தவொரு ஒப்பந்ததாரரும் ஒப்பத்தில் பங்கேற்பது குறித்து நிச்சயமற்ற தன்மையே நிலவுகிறது. இதனால் பணி மேற்கொள்ள மேலும் தாமதம் ஏற்படும்.

அவ்வாறு மறு ஒப்பம் கோரி ஒப்பந்ததாரர் பங்கேற்றாலும் தற்போதைய சந்தை விலையேற்ற நிலையில் அதிக ஒப்ப சதவீதம் அளிக்க வாய்ப்புள்ளதே தவிர குறைந்த ஒப்ப சதவீதம் அளிப்பது நிச்சயமற்ற நிலையில் உள்ளது.

தென்சென்னை பகுதிகளில் பல்வேறு பாலப்பணிகள் முடிவடைந்தும், புதிய பாலப்பணிகள் நடைபெற்றும் வருகின்றன. ஆனால் வடசென்னையில் போக்குவரத்து நெரிசல் மிகுந்த முக்கிய பகுதியான பெரம்பூரில் கடந்த 1999இல் ஆரம்பிக்கப்பட்ட இப்பாலப்பணியானது சுமார் 10 ஆண்டுகளுக்கு பிறகும் இன்றுவரை தொடக்க நிலையிலேயே உள்ளது. எனவே ஆரம்பித்து முற்றுப்பெறாத இப்பணியை காலம் தாழ்த்தாமல் உடனடியாக மேற்கொண்டு முடிக்க வேண்டியது அவசியமாகிறது.

குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள்.ஐ.வி.ஆர்.சி.எல். இன்பிராஸ்டரக்சர் பிராஜக்ட் லிமிடெட் அவர்கள் முதலில் அளித்த ஒப்பத்தொகையான ரூ.41,57,45,555/–லிருந்து கடந்த ஒரு மாத காலமாக நான்கு முறை பேச்சு வார்த்தை நடத்தி இறுதியாக அவர்கள் அளித்துள்ள ஒப்ப விலை ரூ.40,16,10,206.13 ஆகும். இது 2008–2009ஆம் ஆண்டின் அலுவலக விலையான ரூ.23,08,99,871.90 ஐ விட (+)73.93% அதிகம் ஆகும். ஏப்ரல் மாத சந்தை விலையின்படி (+)45.25% அதிகம் ஆகும்.

எனினும், இம்மேம்பாலப்பணி 10 ஆண்டுகளுக்கு முன் துவக்கப்பட்டு இன்னும் முடிவுறாத நிலையில் இருப்பதையும்,

இம்மேம்பாலம் வடசென்னையின் முக்கிய இணைப்பாக அமையும் என்பதனையும், இதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கை என்பதனையும்,

இப்பணியினை விரைந்துமுடிக்க வேண்டிய அவசியத்தையும் கருத்தில் கொண்டு இப்பணி குறித்து விரிவாக விவாதித்து தக்க முடிவெடுக்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் முன் மேற்குறிப்பிட்ட விவரங்களை சமர்ப்பிக்கலாமென ஒப்பக்குழுமம் பரிந்துரையளித்துள்ளது. இக்குறிப்பு ஏற்கப்படின்,

மேற்கண்ட ஒப்பக்குழுமத்தின் பரிந்துரைக்கு இணங்க கீழ்காணும் இனங்களான,

(1) அண்ணா பல்கலைகழகம் அளித்துள்ள மாற்று வடிவமைப்பின்படி தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீட்டின்படி ஒப்பங்கள் கோரப்பட்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும் மற்றும் அரசின் பின்னேற்பு அனுமதி கோரி அரசுக்கு கடிதம் எழுத அனுமதியும்,

(2) இப்பணிக்காக 2008–2009ம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின் தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீட்டுத்தொகையான ரூ.51 கோடிக்கு மன்றத்தின் அனுமதியும் மற்றும் அரசின் அனுமதி வேண்டி அரசுக்கு கடிதம் எழுதவும்,

(3) மேற்கண்ட பணிக்கான குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள். ஐவிஆர்சிஎல் இன்பிராஸ்டரக்சர் பிராஜக்ட்ஸ் லிமிடெட் அவர்கள் நான்காவது பேச்சுவார்த்தைக்கு பின்னர் அளித்துள்ள ஒப்பத்தொகையான ரூ.40,16,10,206.13க்கு வழங்குவது குறித்து விவாதித்து முடிவெடுக்கவும்,

(1) முதல் (3) வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) ஆகியவற்றின் பரிந்துரையின் பேரில் தக்க முடிவெடுக்க மன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்படுகிறது.

**பா.து.ந.க.எண்.பி3/875/96**

**மேற்குறிப்பிட்ட பொருள் குறித்து நிலைக்குழு (பணிகள்) கீழ்க்கண்டவாறு விவாதித்தது.**

குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள்.ஐ.வி.ஆர்.சி.எல். இன்பிராஸ்டரக்சர் பிராஜக்ட் லிமிடெட் அவர்கள் முதலில் அளித்த ஒப்பத்தொகையான ரூ.41,57,45,555/–லிருந்து கடந்த ஒரு மாத காலமாக நான்கு முறை பேச்சு வார்த்தை நடத்தி இறுதியாக அவர்கள் அளித்துள்ள ஒப்ப விலை ரூ.40,16,10,206.13 ஆகும். இது 2008–2009ஆம் ஆண்டின் அலுவலக விலையான ரூ.23,08,99,871.90 ஐ விட (+)73.93% அதிகம் ஆகும். ஏப்ரல் மாத சந்தை விலையின்படி (+)45.25% அதிகம் ஆகும்.

பெரம்பூர் மேம்பாலப்பணி 1999இல் துவங்கப்பட்டு மண்ணின் மாறுபட்ட தன்மை காரணமாக இடையில் தடைபட்டது. பின்னர் வடிவமைப்பை மாற்றி மீண்டும் நவம்பர் –2000ல் மேற்கொள்ளப்பட்டது. விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டதன் விளைவாக இப்பணி நிறுத்தப்பட்டது. நவம்பர்–2006ல் மீண்டும் பணி துவங்கப்பட்டு, கடினப்பாறை கிடைக்காத காரணத்தினால் மீண்டும் தடைபட்டது. இது போன்று காரணங்களால் பெரம்பூர் மேம்பாலப்பணியினை மேற்கொள்வதற்கு கட்டுமான நிறுவனங்கள் தயங்குகின்ற நிலையே உள்ளது.

எனினும் தற்போது பெறப்பட்டுள்ள குறைந்த ஒப்பம் இரண்டு ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட போட்டி ஒப்பம் (Competitive Tender) என்பது குறிப்பிடத்தக்கது.

அது மட்டுமன்றி இப்பணிக்கு திருத்திய வடிவமைப்பின்படி புதிய ஒப்பம் கோரிய பிறகு ஒப்பந்ததாரர்கள் பங்கேற்க முன்வரவில்லை. மூன்று முறை ஒப்ப நீட்டிப்பு செய்யப்பட்ட பின்னரும் இரண்டு ஒப்பந்ததாரர்கள் மட்டுமே ஒப்பத்தில் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் மறு ஒப்பம் கோரினால் எந்தவொரு ஒப்பந்ததாரரும் ஒப்பத்தில் பங்கேற்பது நிச்சயமிடல்லை. இதனால் பணி மேற்கொள்ள மேலும் தாமதம் ஏற்படும்.

அவ்வாறு மறு ஒப்பம் கோரி ஒப்பந்ததாரர் பங்கேற்றாலும் தற்போதைய சந்தை விலையேற்ற நிலையில் அதிக ஒப்ப சதவீதம் அளிக்கவே வாய்ப்புள்ளதே தவிர குறைந்த ஒப்ப சதவீதம் அளிப்பது நிச்சமில்லை.

தென்சென்னை பகுதிகளில் பல்வேறு பாலப்பணிகள் முடிவடைந்தும், புதிய பாலப்பணிகள் நடைபெற்றும் வருகின்றன. ஆனால் வடசென்னையில் போக்குவரத்து நெரிசல் மிகுந்த முக்கிய பகுதியான பெரம்பூரில் கடந்த 1999இல் ஆரம்பிக்கப்பட்ட இப்பாலப்பணியானது சுமார் 10 ஆண்டுகளுக்கு பிறகும் இன்றுவரை தொடக்க நிலையிலேயே உள்ளது. எனவே ஆரம்பித்து முற்றுப்பெறாத இப்பணியை காலம் தாழ்த்தாமல் உடனடியாக மேற்கொண்டு முடிக்க வேண்டியது அவசியமாகிறது.

பெரம்பூர் மேம்பாலப்பணி 10 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு பல்வேறு காரணங்களால் தடைபட்டு இப்போது மீண்டும் பணி துவங்க வாய்ப்பு வந்துள்ளது. இந்த வாய்ப்பினை நழுவவிடக்கூடாது.

இப்பணி மற்ற பணிகளை போல் புதியதாக ஆரம்பிக்கப்படும் பணி அல்ல.

மக்களிடையே இப்பணியினை விரைவில் மீண்டும் துவங்கப்பட்டு நன்முறையில் முடிக்கப்பட வேண்டும் என்ற பெருத்த எதிர்பார்ப்பு உள்ளது.

இம்மேம்பாலம் அமைவதால் பயண நேரம் மிச்சம் ஆகும். வாகனங்களுக்கான எரிபொருள் மிச்சமாகும், முக்கியமாக மழை காலங்களில் பெரம்பூர் சுரங்கப்பாதையில் மழைநீர் தேக்கத்தின் காரணமாக மக்கள் அவதிக்குள்ளாவது தவிர்க்கப்படும்.

குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள்.ஐ.வி.ஆர்.சி.எல். இன்பிராஸ்டரக்சர் பிராஜக்ட் லிமிடெட் அவர்கள் முதலில் அளித்த ஒப்பத்தொகையான ரூ.41,57,45,555/–லிருந்து கடந்த ஒரு மாத காலமாக நான்கு முறை பேச்சு வார்த்தை நடத்தி இறுதியாக அவர்கள் அளித்துள்ள ஒப்ப விலை ரூ.40,16,10,206.13 ஆகும். இது 2008–2009ஆம் ஆண்டின் அலுவலக விலையான ரூ.23,08,99,871.90 ஐ விட (+)73.93% அதிகம் ஆகும். ஏப்ரல் மாத சந்தை விலையின்படி (+)45.25% அதிகம் ஆகும். இந்த சந்தைவிலை முழுமையான சந்தை விலையை பிரதிபலிக்கவில்லை.

மாநகராட்சி சந்தை விலை அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் Over head Charges 25 % மற்றும் ஒப்பந்ததாரரின் லாபம் ஆகியவை சேர்த்துக்கொள்ளப்படவில்லை. ஆனால் பொதுவாக ஒப்பந்ததாரர்கள் குறிப்பிடும் தொகையானது Over head Charges அவர்களுடைய லாபம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

கட்டுமானப்பொருட்களின் சந்தைவிலையுடன் அரசிற்கு செலுத்த வேண்டிய விற்பனை வரி 2 % , தொழிலாளர் நல சேம நிதி 0.3 %, சில இனங்களுக்கான மதிப்பு கூட்டு வரி 12.5 %, வருமான வரி 2 % மற்றும் சர் சார்ஜ் 10 %, கல்வி வரி 2 % ஆகியவை உள்ளிட்ட ஒப்பந்ததாரரின் அலுவலக செலவு 25% ஆகும். இத்துடன் ஒப்பந்ததாரரின் லாபம் 10 % ஆக மொத்தம் 35% சேர்ந்ததே உண்மையான சந்தை விலையாகும். ஆக முழுமையாக கணக்கிடப்பட்ட சந்தைவிலையைவிட ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பத்தொகை ஏறக்குறைய 10 % மட்டுமே அதிகமாக காணப்படுகிறது.

**பா.து.ந.க.எண்.பி3/875/96**

இரயில்வே பகுதியில் அமையவிருக்கும் பாலத்தின் மையப்பகுதி பணிகளை இரயில்வேத்துறையினருடன் கலந்து அவர்களால் அனுமதிக்கப்படும் நாட்களில் நள்ளிரவு நேரங்களில் மட்டுமே பணி செய்ய இயலும். மேலும் மையப்பகுதிக்கான மேல்தளம் அமைக்கும் போது மின் தாக்குதல் இல்லாமல் இருப்பதற்காக அனைத்து விதமான பாதுகாப்பு சாதனங்களையும் பயன்படுத்த வேண்டி உள்ளது. எனவே சிரமம் மிக்க இப்பணிக்கான காலமும் செலவும் சாதாரணமாக அமையும் மேம்பாலங்களில் இருந்து மிக அதிகமாக அமையும்.

எனவே,

(1) அண்ணா பல்கலைகழகம் அளித்துள்ள மாற்று வடிவமைப்பின்படி தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீட்டின்படி ஒப்பங்கள் கோரப்பட்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும் மற்றும் அரசின் பின்னேற்பு அனுமதி கோரி அரசுக்கு கடிதம் எழுத அனுமதியும்,

(2) இப்பணிக்காக 2008–2009ம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின் தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீட்டுத்தொகையான ரூ.51 கோடிக்கு மன்றத்தின் அனுமதியும் மற்றும் அரசின் அனுமதி வேண்டி அரசுக்கு கடிதம் எழுதவும்,

(3) மேற்கண்ட பணிக்கான குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள். ஐவிஆர்சிஎல் இன்பிராஸ்டரக்சர் பிராஜக்ட்ஸ் லிமிடெட் அவர்கள் நான்காவது பேச்சுவார்த்தைக்கு பின்னர் அளித்துள்ள ஒப்பத்தொகையான ரூ.40,16,10,206.13க்கு பணியினை வழங்கலாமென **“29.4.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 100/08 , நாள்: 29.4.2008-ன்படி பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் பரிந்துரைக்கிணங்க தக்க முடிவெடுக்க மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது”.**

**மேற்குறிப்பிட்ட பொருள் குறித்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கீழ்க்கண்டவாறு விவாதித்தது.**

குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள்.ஐ.வி.ஆர்.சி.எல். இன்பிராஸ்டரக்சர் பிராஜக்ட் லிமிடெட் அவர்கள் முதலில் அளித்த ஒப்பத்தொகையான ரூ.41,57,45,555/–லிருந்து கடந்த ஒரு மாத காலமாக நான்கு முறை பேச்சு வார்த்தை நடத்தி இறுதியாக அவர்கள் அளித்துள்ள ஒப்ப விலை ரூ.40,16,10,206.13 ஆகும். இது 2008–2009ஆம் ஆண்டின் அலுவலக விலையான ரூ.23,08,99,871.90 ஐ விட (+)73.93% அதிகம் ஆகும். ஏப்ரல் மாத சந்தை விலையின்படி (+)45.25% அதிகம் ஆகும்.

பெரம்பூர் மேம்பாலப்பணி 1999இல் துவங்கப்பட்டு மண்ணின் மாறுபட்ட தன்மை காரணமாக இடையில் தடைபட்டது. பின்னர் வடிவமைப்பை மாற்றி மீண்டும் நவம்பர் –2000ல் மேற்கொள்ளப்பட்டது. விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டதன் விளைவாக இப்பணி நிறுத்தப்பட்டது. நவம்பர்–2006ல் மீண்டும் பணி துவங்கப்பட்டு, கடினப்பாறை கிடைக்காத காரணத்தினால் மீண்டும் தடைபட்டது. இது போன்று காரணங்களால் பெரம்பூர் மேம்பாலப்பணியினை மேற்கொள்வதற்கு கட்டுமான நிறுவனங்கள் தயங்குகின்ற நிலையே உள்ளது.

எனினும் தற்போது பெறப்பட்டுள்ள குறைந்த ஒப்பம் இரண்டு ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட போட்டி ஒப்பம் (Competitive Tender) என்பது குறிப்பிடத்தக்கது.

அது மட்டுமன்றி இப்பணிக்கு திருத்திய வடிவமைப்பின்படி புதிய ஒப்பம் கோரிய பிறகு ஒப்பந்ததாரர்கள் பங்கேற்க முன்வரவில்லை. மூன்று முறை ஒப்ப நீட்டிப்பு செய்யப்பட்ட பின்னரும் இரண்டு ஒப்பந்ததாரர்கள் மட்டுமே ஒப்பத்தில் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் மறு ஒப்பம் கோரினால் எந்தவொரு ஒப்பந்ததாரரும் ஒப்பத்தில் பங்கேற்பது நிச்சயமிடல்லை. இதனால் பணி மேற்கொள்ள மேலும் தாமதம் ஏற்படும்.

அவ்வாறு மறு ஒப்பம் கோரி ஒப்பந்ததாரர் பங்கேற்றாலும் தற்போதைய சந்தை விலையேற்ற நிலையில் அதிக ஒப்ப சதவீதம் அளிக்கவே வாய்ப்புள்ளதே தவிர குறைந்த ஒப்ப சதவீதம் அளிப்பது நிச்சமில்லை.

தென்சென்னை பகுதிகளில் பல்வேறு பாலப்பணிகள் முடிவடைந்தும், புதிய பாலப்பணிகள் நடைபெற்றும் வருகின்றன. ஆனால் வடசென்னையில் போக்குவரத்து நெரிசல் மிகுந்த முக்கிய பகுதியான பெரம்பூரில் கடந்த 1999இல் ஆரம்பிக்கப்பட்ட இப்பாலப்பணியானது சுமார் 10 ஆண்டுகளுக்கு பிறகும் இன்றுவரை தொடக்க நிலையிலேயே உள்ளது. எனவே ஆரம்பித்து முற்றுப்பெறாத இப்பணியை காலம் தாழ்த்தாமல் உடனடியாக மேற்கொண்டு முடிக்க வேண்டியது அவசியமாகிறது.

பெரம்பூர் மேம்பாலப்பணி 10 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு பல்வேறு காரணங்களால் தடைபட்டு இப்போது மீண்டும் பணி துவங்க வாய்ப்பு வந்துள்ளது. இந்த வாய்ப்பினை நழுவவிடக்கூடாது.

இப்பணி மற்ற பணிகளை போல் புதியதாக ஆரம்பிக்கப்படும் பணி அல்ல.

மக்களிடையே இப்பணியினை விரைவில் மீண்டும் துவங்கப்பட்டு நன்முறையில் முடிக்கப்பட வேண்டும் என்ற பெருத்த எதிர்பார்ப்பு உள்ளது.

<u>பா.து.ந.க.எண்.பி3/875/96</u>

இம்மேம்பாலம் அமைவதால் பயண நேரம் மிச்சம் ஆகும். வாகனங்களுக்கான எரிபொருள் மிச்சமாகும், முக்கியமாக மழை காலங்களில் பெரம்பூர் சுரங்கப்பாதையில் மழைநீர் தேக்கத்தின் காரணமாக மக்கள் அவதிக்குள்ளாவது தவிர்க்கப்படும்.

குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள்.ஐ.வி.ஆர்.சி.எல். இன்பிராஸ்டரக்சர் பிராஜக்ட் லிமிடெட் அவர்கள் முதலில் அளித்த ஒப்பத்தொகையான ரூ.41,57,45,555/–லிருந்து கடந்த ஒரு மாத காலமாக நான்கு முறை பேச்சு வார்த்தை நடத்தி இறுதியாக அவர்கள் அளித்துள்ள ஒப்ப விலை ரூ.40,16,10,206.13 ஆகும். இது 2008–2009ஆம் ஆண்டின் அலுவலக விலையான ரூ.23,08,99,871.90 ஐ விட (+)73.93% அதிகம் ஆகும். ஏப்ரல் மாத சந்தை விலையின்படி (+)45.25% அதிகம் ஆகும். இந்த சந்தைவிலை முழுமையான சந்தை விலையை பிரதிபலிக்கவில்லை.

மாநகராட்சி சந்தை விலை அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் Over head Charges 25 % மற்றும் ஒப்பந்ததாரரின் லாபம் ஆகியவை சேர்த்துக்கொள்ளப்படவில்லை. ஆனால் பொதுவாக ஒப்பந்ததாரர்கள் குறிப்பிடும் தொகையானது Over head Charges அவர்களுடைய லாபம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

கட்டுமானப்பொருட்களின் சந்தைவிலையுடன் அரசிற்கு செலுத்த வேண்டிய விற்பனை வரி 2 % , தொழிலாளர் நல சேம நிதி 0.3 %, சில இனங்களுக்கான மதிப்பு கூட்டு வரி 12.5 %, வருமான வரி 2 % மற்றும் சர் சார்ஜ் 10 %, கல்வி வரி 2 % ஆகியவை உள்ளிட்ட ஒப்பந்ததாரரின் அலுவலக செலவு 25% ஆகும். இத்துடன் ஒப்பந்ததாரரின் லாபம் 10 % ஆக மொத்தம் 35% சேர்ந்ததே உண்மையான சந்தை விலையாகும். ஆக முழுமையாக கணக்கிடப்பட்ட சந்தைவிலையைவிட ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பத்தொகை ஏறக்குறைய 10 % மட்டுமே அதிகமாக காணப்படுகிறது.

இரயில்வே பகுதியில் அமையவிருக்கும் பாலத்தின் மையப்பகுதி பணிகளை இரயில்வேத்துறையினருடன் கலந்து அவர்களால் அனுமதிக்கப்படும் நாட்களில் நள்ளிரவு நேரங்களில் மட்டுமே பணி செய்ய இயலும். மேலும் மையப்பகுதிக்கான மேல்தளம் அமைக்கும் போது மின் தாக்குதல் இல்லாமல் இருப்பதற்காக அனைத்து விதமான பாதுகாப்பு சாதனங்களையும் பயன்படுத்த வேண்டி உள்ளது. எனவே சிரமம் மிக்க இப்பணிக்கான காலமும் செலவும் சாதாரணமாக அமையும் மேம்பாலங்களில் இருந்து மிக அதிகமாக அமையும்.

எனவே,

(1) அண்ணா பல்கலைகழகம் அளித்துள்ள மாற்று வடிவமைப்பின்படி தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீட்டின்படி ஒப்பங்கள் கோரப்பட்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும் மற்றும் அரசின் பின்னேற்பு அனுமதி கோரி அரசுக்கு கடிதம் எழுத அனுமதியும்,

(2) இப்பணிக்காக 2008–2009ம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின் தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீட்டுத்தொகையான ரூ.51 கோடிக்கு மன்றத்தின் அனுமதியும் மற்றும் அரசின் அனுமதி வேண்டி அரசுக்கு கடிதம் எழுதவும்,

(3) மேற்கண்ட பணிக்கான குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள். ஐவிஆர்சிஎல் இன்பிராஸ்டரக்சர் பிராஜக்ட்ஸ் லிமிடெட் அவர்கள் நான்காவது பேச்சுவார்த்தைக்கு பின்னர் அளித்துள்ள ஒப்பத்தொகையான ரூ.40,16,10,206.13க்கு பணியினை வழங்கலாமென **“29.4.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண். 59/08 , நாள்: 29.4.2008-ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) வின் பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.**

**“நிலைக்குழு (பணிகள்) அளித்த கருத்துக்கள் மற்றும் பரிந்துரை அடிப்படையிலும், நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) அளித்த கருத்துக்கள் மற்றும் பரிந்துரையின் அடிப்படையிலும், மன்ற உறுப்பினர்களின் விவாத அடிப்படையிலும் நீண்டகாலமாக நிலுவையில் இருக்கும் இப்பணியினை மேலும் காலந்தாழ்த்தாது துவங்க வேண்டும் என்பதாலும், சிரமமிக்க இப்பணியினை மேற்கொள்ள தற்போதுள்ள சந்தை விலையேற்ற நிலையில் குறிப்பிட்ட ஒப்பந்ததாரர் அளித்துள்ள விலை விகிதத்தை பணியின் முக்கியத்துவம் மற்றும் வடசென்னை வாழ் மக்களின் நலன் இவற்றைக் கருத்தில் கொண்டு பெரம்பூர் மேம்பாலப் பணிக்கான குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள் ஐவிஆர்சிஎல் இன்பிராஸ்டரக்சர் பிராஜக்ட்ஸ் லிமிடெட் அவர்கள் நான்காவது பேச்சு வார்த்தைக்குப் பின்னர் அளித்துள்ள ஒப்பத் தொகையான ரூ.40,16,10,206.13க்கு பணியினை அளிக்கவும் மற்றும் இரு இனங்களுக்கும் மன்றம் அனுமதி அளிக்கின்றது’’.**

**//உண்மைச் சுருக்கம்//**

கோப்பு: பா.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பே.சா.து.ந.க.எண்.பி1/0049/2008

ஆணையர் அவர்களது 28–04–2008 நாளிட்ட குறிப்பு

## 03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

## ஒப்பந்தம்

தீர்மான எண் :204/2008 பொருள் எண்.96

சென்னை மாநகரில் உலகத் தரத்திற்கு ஒப்பாகவும், சென்னை நகரின் எழில் கூட்டும் வகையிலும், பயணிகளின் வசதியைக் கருத்தில் கொண்டும், கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் என்ற அடிப்படையில் நவீன பேருந்து நிழற்குடைகள் அமைக்க அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பங்கள் கோரப்பட்டன. சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான 364 எண்ணிக்கை கொண்ட பழைய பேருந்து நிழற்குடைகளுடன் 29.11.07 அன்று மாநகர போக்குவரத்துக் கழகத்தால் சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்ட 248 பேருந்து நிழற்குடைகளில் நீதி மன்ற வழக்குகளுக்குட்படாத 136 பேருந்து நிழற்குடைகளையும் சேர்த்து மொத்தம் 500 எண்ணிக்கையிலான பேருந்து நிழற்குடைகளைக் கட்டுவதற்கு முதற்கட்டமாக ஒப்பங்கள் கோரப்பட்டன. சென்னை மாநகராட்சி வரையறுத்த பேருந்து நிழற்குடை வடிவமைப்பின் படி கட்டி, 12 வருடங்கள் நல்ல முறையில் பராமரித்து பின் மாநகராட்சி வசம் நல்ல நிலைமையில் ஒப்படைக்க வேண்டும். இந்த பேருந்து நிழற்குடைகளில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு விளம்பர பலகைகளை ஒப்பந்ததாரர்கள் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். அதில் வரும் வருவாயை சென்னை மாநகராட்சியுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் (BOT) என்ற அடிப்படையில் இவ்வொப்பங்கள் கோரப்பட்டன. இத்திட்டத்தினால் சென்னை மாநகராட்சிக்கு எந்த செலவினமும் இல்லை. இந்த 500 நிழற்குடைகளை கீழ்காணும் படி மண்டல வாரியாக தொகுத்து நான்கு சிப்பங்களாக ஒப்பங்கள் கோரப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| சிப்பம் – 1 | | | |
| மண்டலம்–1 + மண்டலம் +2 + மண்டலம் 7 | = | 133 | எண்ணிக்கை |
| சிப்பம் – 2 | | | |
| மண்டலம்–3 + மண்டலம் +4 + மண்டலம் 8 | = | 153 | எண்ணிக்கை |
| சிப்பம் – 3 | | | |
| மண்டலம்–5 + மண்டலம் +9 | = | 96 | எண்ணிக்கை |
| சிப்பம் – 4 | | | |
| மண்டலம்–6 + மண்டலம் 10 | = | 118 | எண்ணிக்கை |
| மொத்தம் | = | 500 | எண்ணிக்கை |

இதில் சிப்பம் – 1 க்கான ஒப்பங்கள் கோரப்பட்டதில் கீழ்காணும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்ப இறுதி நாளான 22.2.08 அன்று ஒப்பங்கள் பெறப்பட்டன.

1) திருவாளர்கள் அட்லாப்ஸ் பிலிம்ஸ் லிமிடெட்( M/s. Adlabs Films Limited)
2) திருவாளர்கள் லேண்ட் மார்க் 360 மீடியா பிரைவேட் லிமிடெட் ( M/s. Landmark 360 Media Pvt. Limited)

1) திருவாளர்கள். ரோஜா அட்வர்டைசிங் பிரைவேட் லிமிடெட் ( M/s. Roja Advertising bn Private Limited )

மேற்கூறிய மூன்று ஒப்பந்ததாரர்களில் திருவாளர்கள். ரோஜா அட்வர்டைசிங் பிரைவேட் லிமிடெட் ( M/s. Roja Advertising Private Limited ) அவர்கள் ஒப்பக்காப்பு தொகையான ரூ.18.00 இலட்சத்திற்கான வரைவோலை மற்றும் முன்தகுதி ஆவணங்கள் எதையும் ஒப்பத்துடன் இணைக்காததால் அவர்களின் ஒப்பம் நிராகரிக்கப்பட்டது மற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களின் முன் தகுதி மற்றும் கூடுதல் ஆவணங்கள் அனைத்தும் இப்பணிக்காக ஒப்ப மேலாண்மை செய்ய நியமிக்கப்பட்ட கலந்தறிபவர்களான திருவாளர்கள் கம்யூனிட்டி கன்சல்ட்டிங் இந்தியா பிரைவேட் லிமிடெட், நிறுவனத்தால் ஆய்வு மேற்கொண்டு மதிப்பாய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டது. இதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்ததாரர்களும் முன்தகுதி நிபந்தனைகள் அனைத்தையும் பெற்றிருந்தததால் இவர்களின் தொழில்நுட்ப ஒப்பங்கள் 17.3.08 அன்று திறக்கப்பட்டு ஒப்ப மேலாண்மை கலந்தறிபவர்களால் மதிப்பாய்வு செய்யப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டது.

1) திருவாளர்கள் அட்லாப்ஸ் பிலிம்ஸ் லிமிடெட்( M/s. Adlabs Films Limited)
2) திருவாளர்கள் லேண்ட் மார்க் 360 மீடியா பிரைவேட் லிமிடெட் ( M/s. Landmark 360 Media Pvt. Limited)

இவர்களின் (Financial Bid) நிதி ஒப்பங்கள் 28.03.08 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டன. இதில் அதிகபட்ச சலுகை கட்டணம் அளித்த ஒப்பந்ததாரிடம் நடந்த பேச்சுவார்த்தைக்குப்பின் அவர்கள் அளிக்க முன் வந்த சலுகைக்கட்டணம் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

<u>பே.சா.து.ந.க.எண்.பி1/0049/2008</u>

| வரிசை எண் | சென்னை மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச சலுகைக்கட்டணம் | ஒப்பந்ததாரர்களால் குறிப்பிடப்பட்ட சலுகை கட்டணம் | | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | திருவாளர்கள் அட்லாப்ஸ் பிலிம்ஸ் லிமிடெட் | திருவாளர்கள் லேண்ட் மார்க் 360 மீடியா பிரைவேட் லிமிடெட் | |
| 1 | ரூ. 45,00,000/– (ரூபாய் நாற்பத்தைந்து லட்சம் மட்டும்) | ரூ.4,05,00,000/– (ரூபாய் நான்கு கோடியே ஐந்து லட்சம் மட்டும்) | ரூ.1,26,00,000/–(ரூபாய் ஒரு கோடியே இருபத்தாறு லட்சம் மட்டும்) | |

மேற்கூறிய ஒப்பந்ததாரர்கள் திருவாளர்கள் அட்லாப்ஸ் பிலிம்ஸ் லிமிடெட்( M/s. Adlabs Films Limited) என்ற ஒப்பந்ததாரர் மிக அதிக பட்ச சலுகை கட்டணமாக ரூ.4,05,00,000/– (ரூபாய் நான்கு கோடியே ஐந்து லட்சம் மட்டும்) அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்கள். ஒப்பந்தக் குழு 08.04.08 அன்று நடைபெற்ற கூட்டத்தில் இவ்வொப்பந்தத்தை பரிசீலனை செய்து அதிகபட்ச சலுகை தொகை குறிப்பிட்டுள்ள திருவாளர்கள் அட்லாப்ஸ் பிலிம்ஸ் லிமிடெட்( M/s. Adlabs Films Limited) ஒப்பந்ததாரருக்கு ஒப்பத்தை பரிந்துரை செய்துள்ளது.

எனவே திருவாளர்கள் அட்லாப்ஸ் பிலிம்ஸ் லிமிடெட் (Adlabs Films Ltd,) அவர்களுக்கு சிப்பம் – 1ன் (Package-1)-கீழ்வரும் 133 எண்ணிக்கையிலான நவீன பேருந்து நிழற்குடைகள் அமைக்கும் பணியினை கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் அடிப்படையில் வழங்க கீழ்காணும் இனங்களுக்கு,

1) அதிக சலுகை கட்டணமாக ரூ. 4,05,00,000/– (ரூபாய் நான்கு கோடியே ஐந்து லட்சம் மட்டும்)அளித்த திருவாளர்கள் அட்லாப்ஸ் பிலிம்ஸ் லிமிடெட்( Adlabs Films Ltd,) என்ற ஒப்பந்ததாரருக்கு சிப்பம் – 1 (package-1)-ன் கீழ் வரும் 133 எண்ணிக்கையிலான பேருந்து நிழற்குடைகளை கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் என்ற அடிப்படையில் இப்பணியை வழங்க ஒப்புதலும்,
2) ஒப்ப விதிகளின் படி 12 வருடங்களுக்கு ஒவ்வொரு வருடமும் 5சதவீதம் இச்சலுகை கட்டணத்தை உயர்த்தி தரவும் ,
3) இப்பணியினை கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் என்ற அடிப்படையில் பேருந்து நிழற்குடைகள் அமைத்து அதில் குறிப்பிட்ட அளவிற்கு விளம்பரப்பலகை வைத்துக்கொள்ள, கொள்கை முடிவிற்காகவும் (Policy decision) மற்றும் அரசின் அனுமதி கோரவும்,
4) அரசின் கொள்கை முடிவிற்கான ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்ததாரருக்கு தற்காலிகமான பணி ஆணை (Provisional Work Order) வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டியும் ,

நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு (ம) நிதியின்) மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"29.4.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 101 /08 , நாள்: 29.4.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"29.4.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண். 60 /08 , நாள்: 29.4.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"விளம்பர பலகைகள் அகற்றுவதற்கு முன்னர் ஒப்பந்தப் புள்ளி கோரியுள்ளதால், தற்பொழுது விளம்பர பலகைகள் அகற்றப்பட்ட பின்னர் அதிக வருமானம் வர வாய்ப்புள்ளதால் மறு ஒப்பந்தங்கள் கோர மன்றம் தீர்மானிக்கின்றது."

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பே.சா.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18.

மன்றச் செயலாளர்

**ம.து.ந.க.எண்.ஜி2 / 557 / 2008.**

**ஆணையாளர் அவர்களின் 29.04.2008 நாளிட்ட குறிப்பு**

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :205/2008 பொருள் எண்.97

**மேயர் சிறப்பு மேம்பாட்டு நிதி உயர்த்துதல்.**

சென்னை மாநகராட்சியின் 2008–09ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தின் மீது பதிலுரை அளித்த வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் அனைத்து வார்டுகளிலும் சிறப்பாக மேம்பாடு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு வணக்கத்திற்குரிய மேயர் சிறப்பு மேம்பாட்டு நிதி ரூ. 2 கோடியாக உயர்த்தப்படும் என அறிவித்ததன் அடிப்படையில், சென்னை மாநகராட்சியில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் சிறப்பு மேம்பாட்டு நிதி ரூ.2 கோடியாக உயர்த்த உரிய முன் மொழிவுகள் அரசுக்கு அனுப்புவதற்கு நிலைக்குழு வரி விதிப்பு மற்றும் நிதி மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“29.4.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண். 61/08 , நாள்: 29.4.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.6.ந.க.எண்.இ1/538/2008.**
**ஆணையர் அவர்களின் 28.04.2008 நாளிட்ட குறிப்பு**

**03.05.2008 அன்று நடந்த ஒத்திவைக்கப்பட்ட சாதாரண மன்றக் கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :206/2008 பொருள் எண்.98

**முன் நுழைவு அனுமதி கோருதல்**

திரு. எஸ். சுரேஷ்குமார், வார்டு–86ன் மாமன்ற உறுப்பினர் மற்றும் சென்னை மாநகராட்சி நிலைக்குழு (பணிகள்)வின் தலைவர் அவர்களின் 19.11.2007 நாளிட்ட கடிதத்தில், அரசு கஸ்தூரிபாய் காந்தி தாய்–சேய் நல மருத்துவமனையில் மகளிர் மற்றும் பொதுமக்கள் அதிக அளவில் வந்து செல்லும் நிலையில், அவர்கள் இயற்கை உபாதைகளை கழிக்க கழிப்பிட வசதி இல்லாததாலும், மருத்துவமனையின் வெளியில் கழிப்பிடம் கட்ட போதிய இடவசதி இல்லையென்பதாலும், தனது 2007–2008 ஆம் ஆண்டு வார்டு உறுப்பினர் வார்டு மேம்பாட்டுத் திட்ட நிதி ரூ.10.00 லட்சத்தில் வார்டு–86ல் அமைந்துள்ள அரசு கஸ்தூரிபாய் காந்தி தாய் – சேய் நல மருத்துவமனையில் பொது மக்கள் பயன்பாட்டிற்காக பொது கழிப்பிடம் ஒன்றை கட்ட நிதி ஒதுக்கீடு செய்யவிருப்பதாகவும், இப்பணியை சென்னை மாநகராட்சி மூலம் மேற்கொள்ள பொதுப்பணித்துறையிடமிருந்து உரிய தடையின்மைச் சான்றினை பெற நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

அரசாணை எண்.221 , சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை 11.02.2008 தேதியிட்டதன்படி அரசு இவ்வினத்திற்கு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கியுள்ளது.

1. மருத்துவமனை நடவடிக்கைகளுக்கு எவ்வித இடற்பாடும் ஏற்படாத இடத்தில் பொது கழிப்பிடத்தை அமைக்க வேண்டும்.
2. பொது கழிப்பிடம் கட்டும் பணியை பொதுப்பணித்துறை அல்லது அத்துறையால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடம் ஒப்படைக்க வேண்டும்.
3. பொது கழிப்பிடம் மருத்துவமனை வளாகத்தில் கட்டப்படவிருப்பதால், அதனை சென்னை மாநகராட்சி நிதியில் சுகாதாரமான முறையில் பராமரித்தல் வேண்டும்.

இருப்பினும், ஆணையாளர் அவர்களின் 02.04.2008 நாளிட்ட குறிப்பில், பொது கழிப்பிடம் கட்டும் பணியை சென்னை மாநகராட்சி மூலம் மேற்கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளார்.

எனவே, திரு. எஸ். சுரேஷ்குமார், வார்டு–86ன் மாமன்ற உறுப்பினர் மற்றும் சென்னை மாநகராட்சி நிலைக்குழு (பணிகள்)வின் தலைவர் அவர்களின் 2007–2008 ஆம் ஆண்டு வார்டு உறுப்பினர் வார்டு மேம்பாட்டுத் திட்ட நிதி ரூ.10.00 லட்சத்தில் வார்டு–86ல் அமைந்துள்ள அரசு கஸ்தூரிபாய் காந்தி தாய்–சேய் நல மருத்துவமனையில் பொது மக்கள் பயன்பாட்டிற்காக பொது கழிப்பிடம் ஒன்றை சென்னை மாநகராட்சி மூலம் கட்டி, பராமரிக்கவும், அரசு மருத்துவமனை வளாகத்தில் பொது கழிப்பிடம் கட்டும் பணியை மேற்கொள்ள பொதுப்பணித்துறையிடமிருந்து முன் நுழைவு அனுமதி பெறவும் மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (பணிகள்) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

"29.4.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 102 /08 , நாள்: 29.4.2008-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.6.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்